# கோகுலம்

GOKULAM

பிப்ரவரி' 86 ரூ 2.





# இராமகிருஷ்ண பரமஹம்சர்

தோற்றம் : 18-2-1836 மறைவு : 16-8-1886




# கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

— பாரதியார்

1986 பிப்ரவரி இதழ்

மலர் 4 இதழ் 1

தனிப் பிரதி ரூ 2/—

ஆண்டுச் சந்தா ரூ 24/—

கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா




புகைப்படம்: கோவை சீதாராம்.

## அருமைச் சிறுவர் சிறுமியரே,

'கோகுலம்' மீண்டும் தொடங்கப் பெற்று மூன்று ஆண்டுகள் ஓடி விட்டன! இப்போது நான்காவது ஆண்டிலே நடை போடுகிறது.

கோகுலத்திற்குப் பிறந்த நாள் வாழ்த்து, புத்தாண்டு வாழ்த்து, பொங்கல் வாழ்த்து என்று உங்களில் பலர் வாழ்த்து அனுப்பியிருக்கிறீர்கள். பெற்றோர்களிலும் பலர் வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார்கள். எல்லாருக்கும் மனப்பூர்வமான நன்றி.

உங்களின் ஆர்வத்தாலும் பெற்றோரின் ஆதரவாலும் 'கோகுலம்' நாளுக்கு நாள் நன்கு வளர்ந்து பலரது பாராட்டையும் பெற்று வருகிறது. உங்களது மகிழ்ச்சியைப் பெருக்குவதோடு, உங்களது அறிவு வளர்ச்சிக்கும், பண்பு வளர்ச்சிக்கும் இயன்றதையெல்லாம் செய்யவேண்டும் என்பதே கோகுலத்தின் குறிக்கோள்.


பிருந்தாவனம், பிருந்தாவனக் கதையரங்கம்—கவியரங்கம் மூலமாகப் பலரை கோகுலம் அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும், உங்களிடம் மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிப்படுத்தியும், உங்களது கற்பனையை வளர்த்து, பயனுள்ள கதை, கவிதைகளை எழுதுவதற்கு ஊக்கமளித்தும் உதவி வருகிறது.

இன்னும் எந்த எந்த வழிகளில் 'கோகுலம்' உங்களுக்கு உதவ வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? தயங்காமல் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள். சிறந்த கருத்துக்களை ஏற்போம். செயல் வடிவம் தர முயலுவோம்.

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் எண்ணிக்கை பதின்மூன்றாயிரத்தை எட்டிவிட்டது. உறுப்பினர் அட்டை இதுவரை கிடைக்காதவர்களுக்கு விரைவில் அனுப்பி வைக்கப் பெறும்.

—அழ. வள்ளியப்பா

# இந்த இதழ் எழுத்தாளர்கள்


இ.ஜே.தீன்


கமலநாதன்


ரங்கநாயகி நாராயணன்


ராஜ்கமல்

## பிருந்தாவனக் கவிஞர்கள்


ஏ.பி.ராஜசேகரன்


ம.மணிவண்ண பாண்டியன்


கி.செல்வக்குமார்

## பிருந்தாவனக் கதாசிரியர்கள்


கே.இரகுமாஜ் பாபு


சி.பாலசுப்பிரமணியன்

அட்டையில்:
**செல்வி வனிதா**

வண்ணப்படம்:
**ஜி.சுவாமிநாதன்**

# மின்மினிக் கதைகள்

## நெருப்பு! நெருப்பு!

வெளியூருக்குப் பயணம் செய்து கொண்டிருந்த நஸ்ருதீன் வழியில் ஒரு சத்திரத்தில் தங்கினார்.

வந்திருப்பவர், எல்லோராலும் போற்றப்படும் முல்லா நஸ்ருதீன் என்பதை அறிந்த சத்திரக்காரன் அவரை நன்றாக உபசரித்தான்.

நஸ்ருதீன் படுக்கப் போகும்போது சத்திரக்காரன், "முல்லா, இரவில் கூட உங்களுக்கு ஏதேனும் தேவையானால் கூப்பிடுங்கள். ஓடி வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

நஸ்ருதீன் படுத்தார். தூக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தார். தூக்கம் வரவேயில்லை. ஆனால் தாகம் எடுத்தது.

"யாரப்பா அங்கே? கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா," என்று கூறினார். ஒருவரும் வரவில்லை. அறைக்கு வெளியே வந்து நின்று, "சத்திரக்காரா, குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா" என்று சத்தம் போட்டுச் சொன்னார். வரவில்லை. இன்னும் கொஞ்சம் பலமாகச் சத்தம் போட்டுச் சொன்னார். அப்போதும் வரவில்லை. உடனே, "ஐயோ நெருப்பு! நெருப்பு!" என்று கத்தினார்.



அவ்வளவுதான்! சத்திரக்காரன் உட்பட அங்கிருந்த அத்தனை பேரும் அலறியடித்துக் கொண்டு நஸ்ருதீன் இடத்துக்கு வந்தனர்.

"எங்கே நெருப்பு?" என்று கேட்டான் சத்திரக்காரன்.

நஸ்ருதீன் மிக அமைதியாகத் தம் தொண்டையைக் காட்டி, "இங்கே! இதை அணைப்பதற்கு ஒரு குவளைத் தண்ணீர் கொண்டு வா" என்று கூறினார்.

## முட்டாள் கழுதை

ஒரு தத்துவ ஞானியோடு ஏதோ ஒரு விஷயம் குறித்துத் தர்க்கம் செய்ய ஒப்புக் கொண்டார் நஸ்ருதீன்.

குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில் தத்துவ ஞானி நஸ்ருதீன்



வீட்டுக்கு வந்தார். அங்கே நஸ்ருதீன் இல்லை.

தத்துவ ஞானிக்குத் தாங்க முடியாத கோபம். அதனால் ஒரு சுண்ணாம்புக் கட்டியை எடுத்து, நஸ்ருதீன் வீட்டுக் கதவில், 'முட்டாள் கழுதை' என்று எழுதி விட்டுப் போய்விட்டார்.

கொஞ்ச நேரம் கழித்து நஸ்ருதீன் வீட்டுக்கு வந்தார். கதவில் எழுதியிருந்ததைப் படித்தார். மனைவியின் மூலம் நடந்ததை அறிந்தார். உடனே ஒரே ஓட்டமாகத் தத்துவ ஞானியின் வீட்டுக்கு ஓடினார்.

'நஸ்ருதீன் வீட்டுக் கதவில் அவரைப் பற்றி இழிவாக எழுதிவிட்டு வந்துவிட்டோமே, அதற்காகச் சண்டை போடவே வந்திருக்கிறார்' என்று நினைத்தார் தத்துவ ஞானி.


நஸ்ருதீனோ, மன்னிப்புக் கோரினார் :

''தத்துவ ஞானியே! என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். உங்களுடன் இன்று தர்க்கம் செய்வதற்கு ஒப்புக் கொண்டதை மறந்துவிட்டுக் கடைவீதிக்குப் போய்விட்டேன். அது தவறுதான். என் தவறை மன்னித்து விடுங்கள். கடைவீதியிலிருந்து திரும்பி வீட்டுக்கு வந்தேன். தாங்கள் என்னைத் தேடி எங்கள் வீட்டுக்கு வந்துவிட்டு, தாங்கள் வந்ததைத் தெரிவிக்க உங்கள் பெயரை என் வீட்டுக் கதவில் எழுதியிருந்தீர்களே, அதைப் பார்த்தேன். அப்போதுதான் நீங்கள் வந்ததை அறிந்து இங்கே ஓடி வந்தேன். என்னை மன்னித்து விடுங்கள்.''

## என் வீடு

நஸ்ருதீனுக்கும் வேறொரு அதிகாரிக்குமாக அரசர் ஒரு மாடி வீட்டைக் கொடுத்தார். நஸ்ருதீனுக்குக் கீழ்ப்பகுதி சொந்தம். அதிகாரிக்கு மாடிப்பகுதி சொந்தம்.

ஒருநாள் மாடியில் மாவு இடிக்கும் சப்தம் பலமாகக் கேட்டது. கீழே ஏதோ படித்துக் கொண்டிருந்த நஸ்ருதீனுக்கு இந்தச் சத்தம் தலைவலி கொடுத்தது.



நஸ்ருதீன் மாடிக்குச் சென்று அதிகாரியிடம், "இப்படிச் சத்தம் போட்டு இடிக்க வேண்டாம். மெதுவாக இடிக்கச் சொல்லுங்கள்," என்று பணிவாகவே கூறினார்.

அதிகாரிக்கு நஸ்ருதீன் தன் உரிமையில் தலையிடுவதாகப் பட்டது. "இந்த மாடி எனக்குச் சொந்தம்! எப்படி வேண்டுமானாலும் இடிப்போம்" என்று சத்தமிட்டார்.

நஸ்ருதீன் மேலே பேசாமல் கீழே இறங்கிப் போய் விட்டார். தனது அதிகாரக் குரலுக்கு முல்லா பயந்து விட்டார் என்று நினைத்தார் அதிகாரி.

சில நிமிடங்கள் சென்றன.


கீழே இருந்து ஏதோ சத்தம் வந்தது. மாடியே அதிர்வது போலிருந்தது. அதிகாரி ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தார்.

வெளியே பெரிய கடப்பாறையினால் நஸ்ருதீன் அந்த வீட்டுச் சுவரை இடித்துக் கொண்டிருந்தார். பார்த்த அதிகாரி பயந்து விட்டார். "நஸ்ருதீன், என்ன காரியம் செய்கிறீர்கள்?" என்று உரக்கக் கூவினார்.

நஸ்ருதீன் நிமிர்ந்து அதிகாரியைப் பார்த்துச் சொன்னார்: "இந்த வீட்டின் கீழ்ப்பகுதி எனக்குச் சொந்தமானது. அதை எப்படி வேண்டுமானாலும் இடிப்பேன்."

## சமாதியின் முழுமை

நஸ்ருதீன் தாம் உயிரோடு இருக்கும்போதே தமக்குரிய சமாதியைக் கட்டி வைக்க விரும்பினார். அது எப்படி இருக்க வேண்டும் என்று திட்டமிட்டுக் கொத்தனாரிடம் கூறினார்.



"சமாதி சிறப்பாக அமைய வேண்டும். சமாதி முழுமை பெற்ற பிறகுதான் பணம் தருவேன்" என்றார் முல்லா.

கொத்தனார் ஒப்புக்கொண்டு வேலையைத் தொடங்கினார். சில நாட்களில் சமாதி கட்டி முடிக்கப்பட்டது.

கொத்தனார் தனக்குச் சேர வேண்டிய கூலியைக் கேட்டார்.

"சமாதி முழுமை பெற்றால்தானே பணம் தருவதாகச் சொன்னேன்?"

"சமாதி முழுமை பெற்றுவிட்டதே முல்லா!"

"சமாதி எப்போது முழுமை பெறும் என்பதுகூடத் தெரியாத முட்டாளாய் இருக்கிறாயே? சமாதிக்குள் உடலை அடக்கம் செய்தால்தான் இது முழுமை பெறும். எனது உடல் சமாதிக்குள் இடம் பெற்ற பிறகு வா, பணம் தருகிறேன்," என்றார் முல்லா.

---

டாக்டர் பூவண்ணன் எழுதி, வர்த்தமானன் பதிப்பகம் வெளியிட்ட 'முல்லா நஸ்ருதீன்' என்ற புத்தகத்திலிருந்து

# பிறந்த நாள் வாழ்த்து

* மூன்று வருடங்களை இனிதே முடித்து நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடும் கோகுலமே, உனக்கு எனது பிறந்த நாள் வாழ்த்துக்கள். இதுபோல் பல பிறந்த நாள்களைக் கொண்டாட வேண்டும்.

—ஜி. ராதாகிருஷ்ணன் (5356), மயிலாடுதுறை.

* 20 — 8 — 1 — 14 — 11
25 — 15 — 21
6 — 15 — 18
14 — 5 — 23
25 — 5 — 1 — 18
7 — 18 — 5 — 5 — 20 — 9 — 14 — 7 — 19

—1 — 18 — 5 — 22 — 1 — 20 — 8 — 9.

* புத்தாண்டு வாழ்த்து புதுமையாக இருந்தது. மீரா ராமச்சந்திரனுக்குப் பாராட்டு.

—ஜெ. ஜெயக்கண்ணன் (6372), பெரம்பூர்.

* அடடே, பேரளம் புகழ்மதியா! முன்பு காஞ்சிப் பெரியவரைப் பற்றிப் பக்திச் சுவை ததும்ப நெகிழ்ச்சியோடு எழுதிய அந்தக் 'கை' தற்போது யதார்த்த விஷயங்களைப் பற்றித் தமாஷாக இந்தப் போடு போடுகிறதே! எல்லாம் பெரியவாளின் கைங்கர்ய கடாட்சம்தான்!

—மாலதி, கடலூர்.

* மார்கழி மாதத்தில் திருப்பாவை பாடுகின்ற அனைவரையும் மகிழ்விக்கும் வண்ணம் வெளிவந்துள்ளது 'சூடிக் கொடுத்த சுடர்க் கொடி.'

—ஆழ்வை. அ. பட்சிராஜன், நாங்குனேரி

* பேய்களும், மர்மங்களும் நிறைந்த நாவல்கள் வந்து என் போன்ற சிறுவர்களின் மனத்தில் பயத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும் இந்த வேளையில், பயத்தையும் அறியாமையையும் போக்கும் 'அக்கினி பூதம்' வெளியிடுவதற்கு நன்றி.

—இராகவேந்திரன் (2948), திருச்சி.

* 'பாட்டி தொலைத்த முத்து' கவிதையைப் படுத்துக் கொண்டு படித்த நான், முடிவில் பாட்டியின் பதிலைக் கேட்டு எழுந்து உட்கார்ந்து விட்டேன். சோம்பலையும் விட்டொழித்தேன்.

—பி. சரவணன் (2155), தேவகோட்டை—3

## சார், தபால்...!

* 'கேளுங்கள்; சொல்லுகிறோம்' பகுதியில் 'சமீபத்தில் நீங்கள் ரசித்த ஜோக்கைப் படித்து, நாங்களும் ரசித்தோம். அதைக் கூறியவர் கவிஞர் கண்ணதாசன் அவர்களே. 2.8.1978 ல் பாளையங்கோட்டைக் கல்லூரியில் அவர் கூறிய கதை இது.

—ஏ. பரிமளநாதன், திருப்பூர்.

(இது ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் வந்த நகைச்சுவைத் துணுக்குத்தான். பேசும்போது கவிஞர் இதைக் கூறிச் சபையோரை மகிழ்வித்திருக்கலாம். இதை வைத்துக் கதை எழுதியவர்களும் உண்டு. — ஆசிரியர்.)

* 'கிறிஸ்துமஸ் பரிசு' சிறுகதை கிறிஸ்துமஸ் பண்டிகையின் பெருமையை எடுத்துக் கூறும் வண்ணம் இருந்தது.

—பி. சுவாமிநாதன், கும்பகோணம்.

* திரு. என். மகாலிங்கம் அவர்கள் கதர் அணிய ஆரம்பித்தது, புலால் உணவை மறுத்தது, கடவுளிடம் பக்தி கொண்டது ஆகிய உயர் பண்புகள் என் மனத்தில் பதிந்தன. முடிவில் அவர் கூறிய அறிவுரையை மக்களும் அரசாங்கமும் ஏற்றால் நாட்டுக்கு நல்லதுதான்.

—சி. ஆர். நாகராஜன், வளவனூர்.

* 'என் கதையைக் கேளுங்கள்' கட்டுரைகளை எழுதுவது நான்தான்' என்று 'கோகுலம்' கௌரவ ஆசிரியரே தம்முடைய வாயால் கூறிவிட்டாரே! (திருச்சி வானொலியில் 28.12.85 ல் 'புகழேணி' நிகழ்ச்சியில் நடந்த பேட்டியில்.) இன்னும் ஓவியர் ஒருவர்தான். அவரையும் நாங்கள் (கோ. சி. ச. உ.) கண்டுபிடித்து விடுவோம்.

—ந. பொன்ராஜ் (3176), கமுதி.

* எம். சோலையனின் 'ஒரு குட்டி ரோபாட் கடத்தப்படுகிறது' கதையைப் படித்து விட்டு விழுந்து விழுந்து சிரித்தேன். இதைப் போன்ற விஞ்ஞான உண்மைகளை அடிப்படையாகக் கொண்ட நகைச்சுவைக் கதைகளை அடிக்கடி வெளியிடுங்கள்.

—கே. குந்தவி, திருச்சி—8.

* எங்களது ஆசிரியருக்கு குழந்தை இலக்கியத்தில் சிறந்த சேவை செய்ததற்காக டில்லியில் விருது கிடைத்ததைப் படித்தவுடன் என் உள்ளத்தில் இன்ப வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தேன். கோ. சி. ச. உ. சார்பில் எங்களது பாராட்டு.

—ஹெச். பரூக் (2467), லால்குடி.



# சிப்பாய்க் கோலம் போட்ட சிறுமிகள்


ஈக்காடுதாங்கல் எச்.ஐ.டி. காலனியில் வசிக்கும் குழநதைகள் புத்தாண்டைக் கோலம் போட்டுத் துவக்கினார்கள்.

எல்லாக் குழந்தைகளையும் அழைத்தார் சிறுமி இந்துமதி. நிலத்தில் கோல மாவைக் கொண்டு ஆளுக்கொரு புள்ளி வைக்கச் சொன்னார். பிறகு, தானே புதுமாதிரியான சிப்பாய்க் கோலத்தை வரைந்தார். வழக்கம் போல கோலத்தின் மீது 'ஹேப்பி நியூ இயர்' எழுதாமல் நான்கு பூனைகளை வரைந்து Pussy என எழுதினார்.

''சின்னஞ்சிறுசுகளாக இருந்தாலும் அவர்களது எண்ணங்களில் புதிய மலர்ச்சி இருப்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. அதனால் அவர்களை நிற்க வைத்துப் படம் எடுத்தேன்'' என்கிறார் இப்படத்தை எடுத்த கே. சண்முகம்.

— திரைஞானி.

படம்: கே. சண்முகம்.



# விண்வெளியில் விந்தை!



என். ராதிகா (3824)


என் மாமா காவலூரிலிருந்து இரண்டு நாள் லீவில் வந்திருந்தார். காவலூரில் விண்வெளி இயல் தொலை நோக்கி ஆய்வுக் கூடம் ஒன்று அமைத்திருக்கிறார்களாம். இப்போது எங்கு பார்த்தாலும் ஒரே பேச்சாக இருக்கிறதே—வானொலியில், தொலைக் காட்சியில், பத்திரிகைகளில் எங்கும் விவாதிக்கப்படும் 'ஹாலி' வால் நட்சத்திரத்தை இந்த ஆய்வுக் கூடத்திலிருந்து நன்றாகப் பார்க்க முடியும் என்று என் மாமா சொன்னார். அது மட்டுமில்லை. இந்த வால் நட்சத்திரத்தைப் பற்றி நிறைய விவரங்கள் கூறி படிக்கவும் சில புத்தகங்கள் கொடுத்தார். இதைப் பற்றிய உண்மைகளை அறியும்போது, 'என்னே! விண்வெளியின் விந்தை' என்று என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை. நான் அறிந்தவற்றை உங்களுக்குக் கூற விரும்புகிறேன்.


முதல் வால்நட்சத்திரம் கி. மு. 87 இல் தோன்றியதாகக் கிரேக்க அறிஞர் அரிஸ்டாடில் தம் நூலில் எழுதியுள்ளார். ஆனால், விஞ்ஞானி ஹாலியோ இதைக் கண்டறிந்தது மட்டுமல்ல; நியூட்டனின் ஈர்ப்பு விதிகளின்படி 'ஆராய்ந்து, எழுபத்தாறு வருடங்களுக்குப் பின் இதே வால் நட்சத்திரம் மீண்டும் தோன்றும் என்ற அவர் கணிப்பும் சரியாகவே இருந்தது. ஆனால், பாவம்! அதைப் பார்க்கத்தான் அவர் இல்லை!

'தூம கேது' என்றும் கூறப்படும் இந்த வால் நட்சத்திரத்திற்குத் தலை, மையம், அத்துடன் வாலும் உண்டு. வால் என்றால் குரங்கின் வாலைக் கற்பனை செய்யாதீர்கள்! வான மண்டலத்திலுள்ள சில வாயுக்களுடன், மின்னும் புழுதியும், உறைந்த நீரும் சேர்ந்துதான் வால்போன்ற தோற்றம் கொடுக்கிறது. ஹாலி வால் நட்சத்திரத்தின் விண்வெளிப்பாதை சூரியனைச் சுற்றி வருகிறது என்று உங்களுக்குத் தெரியுமல்லவா! அவ்வாறு சூரியனுக்கு அருகில் வரும்போது, அதன் 'கோமா' — அதுதான் தலைப்பகுதி—சுருங்கி, வாலிலுள்ள வாயுக்களின் பரிமாணம் அதிகரித்து, வாலும் நீண்டு காட்சியளிக்குமாம்! சூரியனுக்கு வெகு அருகில் வரும் போது, பிரகாசமாகத் தெரியும் இது, தன் விண்வெளிப்பாதையில் சூரியனை விட்டு விலகி, பயணத்தைத் தொடரும்போது, ஒளி குன்றிக் காணப்படும்.

வால்நட்சத்திரம் தோன்றினால் உலகிற்குக் கெடுதல் நேரும் என்று வயதானவர்கள் கூறுகிறார்கள்.

''அப்படியொரு நம்பிக்கையா! இந்த விஞ்ஞான யுகத்திலா!'' என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? வால் நட்சத்திரத்திற்கும் பூமியைப் போலவே ஈர்ப்புச் சக்தி உண்டு. பூமியின் அருகில் வரும்போது, இரண்டின் ஈர்ப்புச் சக்தியும் ஒன்றோடொன்று






மோதுவதால், புவியின் அச்சு சற்றே மாறுகிறது. இதனால், தாழ்வாக உள்ள நிலப்பகுதி கடலுக்குள் அமிழ்ந்து விடும் என்பது ஒரு சாராரின் கணிப்பு. இப்படித்தான் ராவணன் ஆண்ட இலங்கையின் பகுதியும், கண்ணனின் துவாரகையும் கடலுக்குள் மூழ்கி யிருக்க வேண்டும் என்று முன்னோர் நினைத்தார்கள். ஆனால் எல்லோரும் இக்கருத்தை ஒப்புக் கொள்ளவில்லை.

ஒரு வேடிக்கை தெரியுமா! சென்ற முறை 1910 ல் இந்நட்சத்திரம் தோன் றிய போது, இதன் வால் பகுதி பூமி யில் பட்டு, உலகமே அழிந்துவிடும் என்று பயந்தார்கள். இதிலிருந்து உலகைக் காக்கப் பல இடங்களில் வழிபாடுகள் கூட நடந்தனவாம்! ஏன், சில மருத்துவக்கூடங்கள் ஹேலியி னால் ஏற்படும் தீய விளைவுகளைத் தவிர்க்கக் குளிகைகளைக் கூடத் தயார் செய்தனவாம்! ஆனால், உண்மையில் வால் நட்சத்திரம் தோன்றிய போது, அப்படி எந்தக் கெடுதலும் நிகழ வில்லை.


வால் நட்சத்திரத்திற்கும், விண் ணில் உள்ள கிரகங்களுக்கும் என்ன வித்தியாசம்? நிறைய வேறுபாடுகள் உள்ளன. முதலாவதாக, கிரகங்கள் திடப் பொருளால் ஆனவை. வால் நட்சத்திரமோ பெரும்பாலும் வாயுக் களும், மின்னும் புழுதியும் நிறைந் தது. அதில் திடப்பொருள் மிகவும் குறைந்த பகுதியே. கிரகங்களைவிட வால் நட்சத்திரம் சூரியனிடம் இருந்து அதிக தொலைவில் இருப்பதால், வால் நட்சத்திரத்தின் மையப் பகுதி, அது தோன்றிய காலத்திலிருந்தே மாற்றம் அதிகம் இல்லாமல் இருக்கிறது. கிர கங்கள் வெப்பத்தில் உருவாகி, பிறகு குளிர்ந்தவை; வால் நட்சத்திரம் அப் படியல்ல. குளிர்ந்த சூழ்நிலையிலேயே உருவாகியுள்ளது. இன்னும்சொல்ல போனால், கிரகங்கள், அவை தோன் றிய பொழுதில் இருந்ததைப் போல் இப்பொழுது இல்லாமல், சூரிய வெப் பத்தால் அதிக மாற்றம் ஏற்பட்டிருக் கும். ஆனால், வால் நட்சத்திரத்திற்கு இந்தப் பாதிப்பு அதிகம் இல்லை.


"மிகுந்த பொருட்செலவில் வான இயலை ஆராய்ந்து, இந்த வால் நட்சத் திரத்தைப் பற்றி அறிந்து கொள்வ தால் என்ன பயன்?" என்று கேட்கி றீர்களா? இது பலருக்கும் ஏற்படக் கூடிய சந்தேகமே. அண்டம் தோன் றிய காலத்திலேயே ஏற்பட்டதுதான் வால் நட்சத்திரம் என்று விஞ்ஞானி கள் திடமாக நம்புகின்றனர். இது சூரிய னிடமிருந்து தள்ளியே இருப்பதால்,

சூரிய வெப்பத்தால் ஏற்படக் கூடிய பாதிப்பு அதிகம் இருக்காது என்று கூறினேன் அல்லவா? அதனுல், அண்டம் தோன்றிய காலத்தில் இருந்த அமைப்பை வால் நட்சத்திரம் அதிக மாறுதலின்றிப் பிரதிபலிக்கும்என்றே வான இயல் நிபுணர்கள் கருதுகிருர்கள். மேலும், சூரியன், சந்திரனைச் சுற்றியுள்ள ஒளிக்கோளங்களின் உண்மையைப் பற்றி அறிய இயலும். அது மட்டுமல்ல; வால் நட்சத்திரத்தில் வாயுக்களும், நீரும் இருப்பதால், விண்வெளி ஆராய்ச்சிக்குப் பயன்படும் வகையில் உயிரினங்களைச் சுமந்து செல்லவும் இவை உதவ முடியும் என்று நம்புகின்றனர். இதனுல், சந்திர மண்டலத்திற்குச் சென்று ஆராய்ச்சி செய்தது போலவே சில கிரகங்களுக்குச் செல்வதும் சாத்தியமாகலாம்.

அதற்காகத்தான், உலகெங்கிலும், ''ஹாலி கண்காணிப்போர் சங்கங்கள்,'' அமைத்திருக்கிருர்கள். நம் தமிழ்நாட்டிலும், வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள காவலூர் விண்வெளி ஆய்வுக்கூடத்தில் இதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. காவலூர் ஆய்வுக் கூடத்தில் ஆசியாவிலேயே மிகப் பெரிய டெலஸ்கோப் உள்ளது. அதை இயக்கி வைத்துவிட்டு அதன் மூலம்ஹாலிவால்நட்சத்திரத்தைப் பார்வையிட்டார் நம் பிரதமர் ராஜீவ் காந்தி (6.1.86 ல்.) ஹாலி வால் நட்சத்திரத்தின் கருவில் பொதிந்து கிடக்கும் ரகசியத்தை ஆராய்வதற்காக அமெரிக்காவின் கியாட்டோ, ரஷ்யாவின் வேகா, ஜப்பானின் பிளான்ட் 'ஏ' ஆகிய விண்கலங்கள் குறிப்பாகச் செயல்படுகின்றன. இந்த ஆராய்ச்சி வெற்றி பெற்ருல், அண்ட சராசரத்தின் தோற்ற ரகசியத்தை அறியக் கூடும்.

எப்படியோ! ஹாலி வால் நட்சத்திரம் ''விஞ்ஞானிகளுக்கு விண்வெளியின் விந்தை'' யாகத் திகழ்வதில் ஆச்சரியம் ஏதுமில்லை.






# புதுமைப் போட்டி 4-முடிவு

புதுமைப்போட்டி 4—க்கு வந்த மொத்த மதிப்புரைகள் — 133

முதற்பரிசு: ரூ. 50/-

A. J. C. மீரா,
8/C. Type Quarters,
A. C. S. M. Ltd.,
கிருஷ்ணாபுரம்,
உடுமலைப்பேட்டை—642 111.

இரண்டாவது பரிசு: ரூ. 25/-

ஆ. சிவப்ரியா,
61, சாந்திக் கூடத் தெரு,
விருதுநகர் — 626 001.

பரிசு பெற்றவர்களின் புகைப்படங்களையும், மதிப்புரைகளையும் அடுத்த இதழில் காணலாம்.

# விசித்திரச் செய்திகள்

## ஒற்றைக்கால் சாதனை!



பெரியார் மாவட்டம் சத்தியமங்கலத்தைச் சேர்ந்த ரவி என்னும் இளைஞர் தொடர்ந்து 34 மணி நேரம் ஒற்றைக் காலில் நின்று உலக சாதனை புரிந்திருக்கிறார். அதனால் 'கின்னஸ்' புத்தகத்தில் அவர் பெயர் இடம் பெற்றிருக்கிறது. கின்னஸ் புத்தகம் என்பது, யாரும் செய்திராத சாதனைகளைத் தெரிவிப்பது.

இவர் மறுபடியும் பல சாதனைகளைச் செய்யத் திட்டமிட்டிருக்கிறாராம். அது என்ன?

காதுகளையும், தலைமுடியையும் தொடர்ந்து 10 நிமிடம் ஆட்டுவது. இது கோயமுத்தூரில் நடைபெறுமாம்! அடுத்து பாராசூட் உதவியுடன் 29 கி.மீ. உயரத்திலிருந்து கீழே குதிப்பது! இதை அமெரிக்காவில் நிகழ்த்தப் போகிறாராம்!

## வெள்ளைக் காக்கை!



'அதோ வெள்ளைக் காக்கை பறக்கிறது' என்று யாராவது சொன்னால் சும்மா கிண்டல் என்று நினைக்க வேண்டாம்.

மதுரை அலங்காநல்லூர் பக்கத்தில் உள்ள கொண்டயம்பட்டியில் நிஜமாகவே வெள்ளைக் காக்கை ஒன்று பிடிபட்டது. அது, 'கா, கா' என்று மற்ற காகங்கள் மாதிரியே கத்தியது!

மனிதர்களில் சிலர் வெள்ளை நிறமாகப் பிறப்பது போல், பறவைகளிலும் சில வெள்ளையாகப் பிறப்பது உண்டு. இது மிகவும் அரிது. இதற்கு 'அல்பினோ' என்பது விஞ்ஞானப் பெயர்.

இந்த வெள்ளைக் காக்கை இப்போது கொண்டயம்பட்டியில் வளர்ந்து வருகிறது!

## மிகப் பழைய அரண்மனை!



2300 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட ஓர் அரண்மனை சீனாவின் தலைநகர் பீகிங் அருகில் இருக்கிறது. அதில் வட்டவடிவமான வாசல் இருக்கிறது. அதன் கதவுகளில் மிகச் சக்தி வாய்ந்த காந்த சக்தி ஏற்றப்பட்டிருக்கிறது. யாராவது ஆயுதங்களை மறைத்து எடுத்துக் கொண்டு அந்த வழியே நுழைந்தால், இந்தக் காந்தக் கதவுகள் அவர்களை இழுத்துக் கொண்டுவிடும்!

# பறக்கும் தட்டு!



ஒருநாள் இரவு, ஸ்பெயினில், பறக்கும் தட்டுக்களைக் கண்டதாகப் போலீஸ்காரர்கள், விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாடு ஊழியர்கள், விமானிகள் முதலியோர் கூறினார்களாம். டெலிவிஷனில் கூடப் பறக்கும் தட்டுக்கள் தென்பட்டனவாம். விமான நிலைய ராடார் கருவியிலும் தெரிந்ததாம். நாய்க்குடை வடிவத்தில், பிரகாசமான நீலநிற ஒளியுடன் இருந்ததாகக் கூறுகிறார்கள். ஜம்போ ஜெட் விமானத்தைப் போல் மூன்று மடங்கு இருந்ததாம். ஆனால், இந்தப் பறக்கும் தட்டுக்கள் எங்கிருந்து வந்தன என்பது மர்மமாகவே இருக்கிறது.

# காவல் புலிகள்!



நியூஜிலாந்தில் உள்ள ஆக்லண்ட் மிருகக் காட்சி சாலையில் பணத்தை இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டிக் காவல் காப்பதில்லை. அதே வேலையைப் புலிகளே செய்கின்றன. தினமும் இரவில் 18,000 பவுண்ட் (சுமார் 3½ லட்சம்) கையிருப்புப் பணத்தை அங்கே உள்ள ஒரு புலிக்குகைக்குள் பத்திரமாக வைத்து விட்டுச் செல்லுகிறார்கள். அதை 4 புலிகள் பாதுகாக்கின்றன. எந்தத் திருடனும் அந்தப் பணத்தைத் திருடிவிட முடியாது!

# பள்ளியிலிருந்து நீக்கப்பட்டவனுக்கு விருது!

சீனாவில் ஷாங்காய் நகரைச் சேர்ந்த 16 வயது மாவோ ஜியாவிஸ் என்னும் பையன் சரியாகப் பரீட்சை எழுதவில்லை என்று அவனைப் பள்ளியிலிருந்து நீக்கி விட்டார்கள்.

ஆனால், அதற்குப் பிறகு அவன் கண்டுபிடித்த 2 விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களுக்காக ஜெனிவாவில் நடந்த கண்காட்சியில் அவனுக்கு விருதுகள் கிடைத்தன. அதன் மூலம், பையன் ரொம்பப் புத்திசாலிதான் என்பது பள்ளி நிர்வாகத்தினருக்குப் புரிந்தது. அதனால் அவனை மறுபடியும் பெருமையுடன் தங்கள் பள்ளியில் சேர்த்துக் கொண்டார்கள்! அதைத் தொடர்ந்து பள்ளிக் கல்வி முறையிலும் மாற்றம் செய்யப்பட்டது!



# கைதட்டல்!



திருச்சி மாவட்டம் வேப்பூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிராம வளர்ச்சி அதிகாரியான 30 வயது ஜெயராமன் 54 மணி நேரம் தொடர்ந்து கைதட்டிப் புதிய உலக சாதனையை ஏற்படுத்தியிருக்கிறார்.

வெள்ளிக்கிழமைகாலை 7 மணிக்குக் கைதட்டலைத் தொடங்கி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு முடித்தார். இந்தச் சாதனை 'கின்னஸ் உலக சாதனை'ப் புத்தகத்தில் இடம் பெறப் போகிறது.

இதற்கு முன் இந்தச் சாதனையை நியூயார்க்கைச் சேர்ந்த 'ஆஸ்க்ரிடா ப்யூர்மேல்' என்பவர் 1981, ஆகஸ்ட்டில் 50 மணி நேரம் 17 நிமிடங்களில் செய்தார். அவரை மிஞ்சிவிட்டார் ஜெயராமன்.

# பிருந்தாவனக் கதையரங்கம்



## பொன்னாசை

கே. இரமேஷ் பாபு

(11210)

ஓர் ஊரில் மந்திரவாதி இருந்தான். அவன் தன் விரலைக் காட்டிய மாத்திரத்தில் எந்த ஒரு பொருளையும் பொன்னாக மாற்றும் சக்தி பெற்றிருந்தான். அவன் மந்திரம் செய்யக் கற்றிருந்தாலும் நல்ல குணமுடையவன். ஏழைகளுக்குத் தன்னாலான உதவியைச் செய்வான். ஆனால், தீயகுணம் உடையவர்களைப் பார்த்தால், அவர்களை வெறுப்பான். சமயம் வாய்க்கும்போது தீயவர்களைக் கொடிய தண்டனைக்கும் உள்ளாக்குவான். அதனால், அவனை ஊர் மக்கள் போற்றினர்.

மந்திரவாதி வசித்து வந்த ஊரில் ஓர் ஏழை வாழ்ந்து வந்தான். அவனுக்குப் பணக்காரனாகிச் சகல சௌகரியங்களோடும் வாழ வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. அவன் மந்திரவாதியிடம் சென்று, தன்னைப் பணக்காரனாக்க வேண்டும் என்று வேண்டினான்.

மந்திரவாதியும் ஏழையின் நிலைமைக்கு வருந்தினான். அவனுக்குத் தான் உதவி செய்வதாக வாக்களித்தான். தெருவில் கிடந்த ஒரு செங்கல்லைத் தன் விரலால் சுட்டிக் காட்டி ஏதோ முணுமுணுத்தான். அது உடனே பொன்னாக மாறியது. மந்திரவாதி அப்பொன் கட்டியை ஏழையிடம் தந்து, ''சுகமாக வாழ்வாயாக'' என்று வாழ்த்தி அனுப்பினான்.

சில நாட்கள் சென்றன. மீண்டும் அந்த ஏழை, மந்திரவாதியிடம் வந்தான். ''ஐயா, நான் ஒரு பிரும்மாண்டமான மாளிகை கட்டி வருகிறேன். எனக்கு இன்னும் நிரம்பப் பொன் தேவை,'' என்றான்.

ஏழையின் பேராசையைக் கண்டு, மந்திரவாதி சிரித்தான். என்றாலும், அவனுக்குக் கோபம் தோன்றவில்லை. தனக்கு எதிரில் மேய்ந்து கொண்டிருந்த ஓர் எருமையைச் சுட்டிக்காட்டி முணுமுணுத்தான். உடனே எருமை ஒருபெரும்பொன் கட்டியாக மாறிற்று. ''இதோ, இதை எடுத்துக் கொண்டு போய், பெரிய மாளிகையாகக் கட்டிக் கொண்டு, சுகமாய் இரு,'' என்றான்.

''எனக்கு இது தேவையில்லை,'' என்றான் பேராசையுள்ள ஏழை.

மந்திரவாதிக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. ''பிறகு உனக்கு என்னதான் வேண்டும்?'' என்று கேட்டான்.

''உங்களுடைய ஆள்காட்டி விரலை மட்டிலும் கொடுத்தால் போதும். தேவையான போது நானே பொன்னை உண்டாக்கிக் கொள்கிறேன்,'' என்றான் ஏழை.

மந்திரவாதிக்குக் கோபம் உண்டாயிற்று. ''நீ பேராசைக்காரன் மட்டுமல்ல; ஒரு கொடியவனும் கூட. உனக்குச் சரியான தண்டனை கொடுக்க வேண்டும்,'' என்று கூறிக் கொண்டே தன் விரலை ஏழையின் இரு கண்க

னுக்கு நேராகக் காட்டி முன்போல் எதையோ மெதுவாகக் கூறினான். உடனே அக்கண்கள் பொன்னாகிப் பிரகாசித்தன. ஆனால் அவற்றில் பார்வை இல்லை. அது முதல் ஏழை குருடனாகி ஊர் ஊராய்த் திரிந்து பிச்சை எடுத்து வயிறு வளர்த்தான்.

---

## மூன்று பாகம் படிப்பு

சி.பாலசுப்ரமணியன்
(6998)



மிகவும் வருத்தத்துடன் வீட்டிற்கு வந்தான் குமார். "ஏன் குமார் உன் முகம் வாடியிருக்கிறது?" என்று கேட்டார் அவன் தந்தை.

"நான் பரீட்சையில் தேறவில்லை, அப்பா."

"எந்தப் பாடத்தில் நீ தேறவில்லை?" என்று கேட்டார், அவனுடைய அப்பா.

"கணக்கில்..." என்று கண்களைக் கசக்கினான், பையன்.

"ஏன் நீ தேறவில்லை!நீ நன்றாகப் படித்து இருக்க மாட்டாய்," என்று பதில் சொன்னார். அந்தப் பதிலைக் கேட்ட குமார், "அப்பா, நான் படிப்பதை நீங்கள் பார்க்கவில்லையா?" எனப் பரிதாபத்துடன் கேட்டான்

"நீ படித்தது உண்மைதான். ஆனால், அது மிகவும் குறைவான நேரம்தான். விளையாட்டில் நீ அதிக நேரத்தைச் செலவழிக்கிறாய். போதுமான நேரத்தை நீ படிப்பில் செலவழித்திருந்தால், இந்நேரம் தேறி இருப்பாய். எத்தனை முறை நான் உனக்குச் சொல்லியிருக்கிறேன், ஒழுங்காகப் படி, படி என்று. சரி, போகட்டும். என் வேலையில் சிறிது உதவி செய்ய வருகிறாயா? நம் வீட்டின் பின் புறத்துச் சுவர் இடிந்து இருக்கிறது, அல்லவா? அதற்குக் கொஞ்சம் சிமெண்டு போடலாம், வா," என்றார்.

தந்தையும் மகனும் வேலையைத் தொடங்கினர்.,

"குமார், இதை மறந்து விடாதே. மூன்று பாகம் மணலும், ஒரு பாகம் சிமெண்டும் போட்டுக் கலக்க வேண்டும்," என்றார் தந்தை.

"அப்பா, பத்துப் பாகம் மணலும், ஒரு பாகம் சிமெண்டும் போட்டுக் கலந்தால், நமக்குத்தானே பணம் மீதமாகும்."

"அப்படிச் செய்தால் நமக்கு முதலில் லாபம் வரும். பிறகு, நாம் சிமெண்டு போட்டுக் கட்டிய சுவர் விழுந்துவிடும். முன்பு அதிக மண் கலந்து கட்டியதால்தான் இந்தச் சுவர் இவ்வளவு சீக்கிரத்தில் சரிந்து விழுந்து, நமக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டது. முன்பு வேலை செய்தவர் சரியான அளவோடு சிமெண்டைக் கலக்கவில்லை. அதனால்தான், நாம் இப்பொழுது கஷ்டப்படுகிறோம்!" என்று விளக்கமாகச் சொன்னார், அப்பா.

உடனே, குமார் அப்பாவின் இந்த விளக்கத்தைக்கேட்டு,மிகவும்உற்சாகமான குரலில் "அப்பா, நான் பரீட்சைக்கு அதிக நேரம் படித்துப் பாஸாகப் போகிறேன்," என்றான்.

அதற்குக் குமாரின் அப்பா ஆச்சரியத்தோடு, "உனக்கு எப்படி இந்த எண்ணம் திடீரென்று ஏற்பட்டது?" என்று கேட்டார்.

"அப்பா, நீங்கள் சிமெண்டுக் கலவைக்குக் கொடுத்த விளக்கத்திலிருந்து தெரிந்து கொண்டேன்."

அதற்குக் குமாரின் அப்பா, "ஆமாம் குமார், பரீட்சையும் இந்த சிமெண்டு கலப்பது போன்றதுதான். சரியான அளவோடு சிமெண்டு கலக்கா விட்டால், சுவர் சரிந்துவிடும். அதேபோல், சரியாகப் படிக்கவில்லை என்றால், பரீட்சையிலும் தேற முடியாது. மூன்று பாகம் படிப்பு, ஒரு

பாகம் விளையாட்டு. அதுதான் சரியான அளவு. அதை மறந்து விடாதே. படிப்பில் அதிக நேரத்தைச் செலவிடு. நிச்சயமாக நீ அடுத்த பரீட்சையில் தேறி விடுவாய்,'' என்றார்.

வேலை முடிந்த மறு விநாடியே குமாரின் கைகள் கணக்கு நோட்டைத் திறந்தன!

---

# அச்சாணி

கே. நரசிம்மன் (7378)



அந்தப் பள்ளியில், எட்டாம் வகுப்பில் படித்து வந்தான் வேலன். அவன் ஒரு முரடன். பிறருக்குத் தொல்லைகள் கொடுத்துக் கொண்டே இருப்பான். அவனுக்கு நண்பர்களே இல்லை என்று சொல்லலாம். அவனிடம் எந்த மாணவனும் பழகுவதில்லை. காரணம், அவனது முரட்டுத்தனம்தான்! ஆசிரியரும் தம்மால் முடிந்த வரை, வேலனைத் திருத்தப் பார்த்தார்; முடியவில்லை. என்றாவது ஒரு நாள் அவனாகவே திருந்திவிடுவான் என்ற நம்பிக்கையில் பேசாமல் இருந்து விட்டார்.

பள்ளியில் செய்யும் முரட்டுத்தனம் போதாது என்று வீட்டிலும் குறும்புத்தனம் செய்ய ஆரம்பித்தான் வேலன்!

அன்று சங்கர் தன் வீட்டு வாசற்படியில் அமர்ந்து கொண்டு, என்ன செய்யலாம், என்று யோசித்துக் கொண்டிருந்தான்! அவனுடைய குறும்புத்தனத்தை, எடுத்துக்காட்ட, அவன் வீட்டின் முன் ஒருமாட்டுவண்டி வந்து நின்றது. வண்டிக்காரர், வண்டியை வேலனின் வீட்டுமுன் நிறுத்தி விட்டு ஏதோ வேலையாகப் பக்கத்துத் தெருவுக்குச் சென்றார்.

இதைப் பார்த்த வேலனின் மனத்தில் ஒரு திட்டம், உருவானது. 'யாரேனும் தன்னைக் கவனிக்கிறார்களா?' என்று சுற்றும்முற்றும் பார்த்தான். யாரும் அவனைக் கண்டுகொள்ளவில்லை என்பதையறிந்த வேலன், மெல்ல வண்டியினருகே சென்றான்; வண்டியின் அச்சாணியை அப்படியே கையில் பிடித்து இழுத்தான் வேலன்! அவன் கைக்கு அப்படியே வந்துவிட்டது! அந்த அச்சாணியைக் கொண்டு வந்த வேலன், தன் வீட்டுக்கு அருகே இருந்த சாக்கடையில் போட்டுவிட்டு, ஒன்றும் தெரியாதவன் போல், பழைய படி தன் வீட்டு வாசற்படியில் போய் உட்கார்ந்து கொண்டான்.


தன் வேலையை முடித்துக் கொண்டு வந்த வண்டிக்காரர், வண்டியில் ஏறி மெயின்ரோட்டுக்கு வண்டியைச் செலுத்தத் தொடங்கினார். வேலன் வண்டியின் அச்சாணியை எடுத்துவிட்டிருப்பது பற்றி அவருக்கென்ன தெரியும்?

வண்டி வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. அச்சாணி இல்லாத வண்டி எவ்வளவுதூரம்ஓடும்? உடனே, வண்டியின் சக்கரம் தனியாகக் கழன்று உருண்டோடிப் போய், அவ்வழியே வந்துகொண்டிருந்த ஒரு பெரியவரின் மேல் மோதியது. அவர் கீழே விழுந்து தலையில்சரியான அடி! வண்டி அந்த இடத்திலேயே கவிழ்ந்தது!

தலையில் அடிபட்டு ரத்தம் ஒழுகிக் கொண்டிருந்த அந்தப் பெரியவரை, அங்கிருந்த சிலர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அந்தப் பெரியவர் யார் தெரியுமா? வேலனுடைய தாத்தாவேதான்!

மாலையில், தலையில் கட்டுடன் திரும்பி வந்த தன் தாத்தாவைக் கண்ட வேலன், என்ன நடந்தது என்று பரபரப்புடன் கேட்டான். அதற்கு அவனுடைய தாத்தா, அங்கு நடந்தவற்றைக் கூறினார்.

தாத்தா கூறியதைக் கேட்ட வேலனுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. தன்னால் வந்த வினைதானே என்று நொந்து கொண்டான். 'உயிரே போனாலும் இனிமேல் குறும்பே செய்வதில்லை' என்று சபதம் செய்து கொண்ட வேலன் அதன்படியே நடக்க முற்பட்டான்.



# என் குழந்தைப் பருவம்

## சி. சுப்பிரமணியம்

'சி. எஸ்.' என்ற பெயர் நாடு முழுவதும் நன்கறிந்த ஒரு பெயர். கொங்கு நாடு பெற்றெடுத்த செல்வமாகிய இவர், நல்ல வருமானமுள்ள வக்கீல் தொழிலை விட்டுத் தேச விடுதலைக்காகச் சிறை சென்றவர்; பல தியாகங்கள் செய்தவர்.

ராஜாஜி அமைச்சரவையில் கல்வி அமைச்சராகவும், நிதி அமைச்சராகவும் இருந்து திறமுடன் செயலாற்றியவர்; நிர்வாகத்தில் புகழ் பெற்றவர். இந்திய அரசின் நிதி அமைச்சராகவும் இருந்து பல புதிய திட்டங்களை வகுத்தவர். நாட்டில் பசுமைப் புரட்சி ஏற்படப் பெரிதும் உதவியவர்.

தற்போது பாரதிய வித்யா பவனின் தலைவராகவும், தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவராகவும் இருப்பதோடு பல்வேறு தேசியப் பணிகளில் பங்கு கொண்டு சிறப்பித்து வருகிறார்.

---

நான் பிறந்தது ஒரு குக்கிராமம். செங்குட்டைப்பாளையம் என்று பெயர். அந்தக் கிராமத்திற்குப் பக்கத்தில் ஒரு சிறு குட்டை இருக்கிறது. செம்மண் பூமியாக இருக்கின்ற காரணத்தால், மழைத் தண்ணீர் அங்கு நிற்கும்போதெல்லாம், மண் கலந்த சிவப்பு நிறமாக இருக்கும். அதனால் தான் அதற்குச் செங்குட்டை என்ற பெயர் ஏற்பட்டு, அதன் அருகில் அமைந்த கிராமத்தைச் செங்குட்டைப் பாளையம் என்று அழைத்தார்கள்.

அந்தக் கிராமத்தில் எங்கள் குடும்பம்தான் பிரதானமானது. ஆகையால், எங்கள் வீட்டை, "பெரிய கவுண்டர் வீடு' என்று சொல்லுவார்கள்.

என்னுடைய தகப்பனார்தான் குடும்பத்தில் மூத்த மகன். சிதம்பரக் கவுண்டர் என்று பெயர். அவருக்கு மூன்று சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் உண்டு. அதே முறையில், என்னுடைய தகப்பனாருக்கும் நான்கு பயன்கள், மூன்று பெண்கள்.

நான் நான்காவது குழந்தை. எனக்கு மூத்தவர்கள் இரண்டு சகோதரிகள், ஒரு சகோதரர். பிறகு மூவர்.

எங்கள் புராதனத் தொழில் விவ





சாயம். என்னுடைய சித்தப்பாக்களில் ஒருவர் விவசாயத்திலிருந்து விலகி, எங்கள் கிராமத்திற்கு அருகிலுள்ள பொள்ளாச்சியில் வியாபாரம் ஆரம்பித்தார்கள். முக்கியமாகப் பஞ்சு, நிலக்கடலை, முதலியவையே வியாபாரப் பொருள்கள். பிறகு, ஒரு பஞ்சாலையும், நிலக்கடலை உடைக்கும் ஆலையும் ஏற்படுத்தினார்கள். ஆகவே, எங்களுக்குக் கிராமத்தில் குடும்ப வீடும், பொள்ளாச்சியில் ஒரு வீடும் ஏற்பட்டன.

நான் மூன்று நான்கு வயதுக் குழந்தையாக இருந்தபோது, என் உயிருக்கே ஆபத்து வரக்கூடிய பல நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. என்னுடைய சிறிய தகப்பனார் சுந்தரக் கவுண்டருக்கு வேட்டையாடுவதிலே ரொம்பப் பிரியம். நிறையத் துப்பாக்கிகள் வைத்திருப்பார். ஒருநாள் தமாஷாக, "உன்னைச் சுடுகிறேன், பார்," என்று துப்பாக்கியை நீட்டிப் பயமுறுத்தினார். "சுடுங்கள், பார்க்கலாம்," என்று சொன்னேன்.

அவர், தம்முடைய துப்பாக்கியில் குண்டுகள் இல்லை என்று நினைத்துக் கொண்டு, வேடிக்கையாகத் துப்பாக்கிக் குதிரையைத் தட்டிவிட்டார். பல் குண்டுகள் துப்பாக்கியிலிருந்து வெளிவந்தன. நல்லவேளையாக ஒரு குண்டு கூட என் மேல் படவில்லை. என் சித்தப்பா வியர்த்துப் போய் விட்டார். அன்றிலிருந்து, 'இனித் துப்பாக்கியைத் தொடுவதில்லை' என்று விரதம் எடுத்துக் கொண்டார். அதன் காரணமாக, பல பறவைகளும் பிராணிகளும் அவரது துப்பாக்கிக்கு இரையாகாமல் தப்பித்துக் கொண்டன.

அந்த வயதில், பறவைகளை வளர்ப்பதில் எனக்கு ஆசை அதிகம். ஒரு சமயம் ஒரு காக்கைக் குஞ்சை எடுத்து வளர்த்து வந்தேன். அது இறந்து விட்டது. நான், 'ஓ'வென்று அழுது விட்டேன். வீட்டிலிருந்தவர்கள் எனக்கு ஆறுதல் சொன்னார்கள். பாடை கட்டி, அதைக் கொட்டுமேளத்துடன் கொண்டு சென்று புதைத்தோம்.

கிராமங்களில் பட்டம் கட்டிப பறக்க விடுவது வழக்கம். ஆள் உயரமுள்ள பெரிய காற்றாடிகளைக் கூடக் கட்டிப் பறக்க விடுவார்கள். ஒரு தடவை, அப்படிப்பட்ட ஒரு பெரிய காற்றாடியின் கயிற்றை என்னுடைய தமையனார் என்னுடைய இடுப்பிலே கட்டிவிட்டார். காற்றாடியின் இழுப்பை என்னால் தாங்க முடியவில்லை. அது என்னைத் தூக்கிக் கொண்டு மேல்நோக்கிப் பறந்தது.

அப்போது, நல்லவேளையாகக் கயிறு அறுந்து விட்டது. ஆயினும், நான் ஒரு கள்ளிப் புதரிலே விழுந்து விட்டேன். என் உடம்பு முழுவதும் நூற்றுக்கணக்கான முட்கள் ஏறிவிட்டன. அதிலிருந்து மீளுவதற்கு ஒரு மாதமாகிவிட்டது. இன்னமும் கூடச் சில முட்கள் முழங்கால் எலும்புடன் சேர்ந்து, என் உடம்பின் பகுதியாக இருந்து வருகின்றன.

எனக்கு என் தாயார் வள்ளியம்மாள் பெயரில் அபாரமான அன்பும், பக்தியும் உண்டு. என் தாயார் அடிக்கடி தோட்டத்திற்குப் போய் வருவார்கள். அச்சமயத்தில் மழை வந்து விட்டால், மழையில் நனைந்துவிடுவார்களே என்று வீட்டில் அழுது கொண்டிருப்பேன். வருவதற்குச் சிறிது நேரம் தாமதமானாலும், 'அம்மாவுக்கு என்ன விபத்து ஏற்பட்டு விட்டதோ!' என்று அழுவேன். எப்போதும் தாயாருடனேயே ஒட்டிக் கொண்டிருக்கக் கூடிய பழக்கம் எனக்கு ஏற்பட்டு விட்டது!

என் தாயார் மிகுந்த தெய்வ நம்பிக்கையும் பக்தியும் கொண்டவர். என்ன கஷ்டங்கள் வந்தாலும், கொடுரங்கள் விளைவிக்கப்பட்டாலும், 'எல்லாம் ஆண்டவன் செயல்' என்று பொறுத்துக் கொள்வார்கள்.

நான் படிக்க ஆரம்பித்தது எங்கள் ஊரில் இருந்த ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்திலே. ஓரிரண்டு வருஷங்களுக்குப் பிறகு, என்னுடைய சித்தப்பா எங்கள் வீட்டுக் குழந்தைகளுக்கு ஆங்கிலப் படிப்புக் கொடுக்க வேண்டும் என்று நினைத்தார். ஆங்கிலத்தில் பயிற்சியுள்ள ஓர் ஆசிரியரைக் கொண்டு வந்து, ஒரு பள்ளிக்கூடம் கட்டி, பள்ளி நல்ல முறையில் நடக்க ஏற்பாடு செய்தார். அந்த ஆசிரியர் பெயர் திருமூர்த்திராஜு. இராஜபாளையம் பக்கத்திலிருந்து வந்தவர். நன்றாகப் பாடம் சொல்லிக் கொடுப்பார். ஆனாலும், முன்கோபி. சிறிய விஷயங்களுக்குக்கூடப் பையன்களைத் தாறுமாறாக அடித்து விடுவார். அவரிடம் அடிபடாத குழந்தை நான் தான்!


நானும் பாடங்களை ஒழுங்காகப் படித்து நல்ல மாணவனாக இருந்து வந்தேன் என்பதைப் பிற்காலத்தில் அவர் அடிக்கடி சொல்லுவார்.


காலையில் 5 மணிக்கு எழுந்திருக்க வேண்டும். எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலே ஒரு விநாயகர் கோயிலும், அதை ஒட்டி ஒரு கிணறும் உண்டு. கிணற்றில் குளித்து, விநாயகர் கோயிலுக்குச் சென்று தொழுதுவிட்டு, வீட்டுக்கு வந்து காலை உணவு அருந்திப் பள்ளிக்குச் செல்ல வேண்டும்.

சில சமயங்களில் நான் நாலு மணிக்கே எழுந்திருந்து ஐந்து வரைக்கும் பாடங்களைப் படிப்பதும் உண்டு. நான் எப்போதுமே வகுப்பில் முதன்மையான மாணவனாக இருந்து வந்திருக்கிறேன். அத்துடன் நான் பொய் சொல்ல மாட்டேன் என்ற பெயரையும் பெற்றிருந்தேன்.. ஏதேனும் தவறு செய்திருந்தாலும், அதை உடனடியாக ஒப்புக் கொண்டுவிடுவேன்.

சிறு வயதில் நான் அடிக்கடி நோயினால் மிகவும் கஷ்டப்பட்டது இன்னும் என் நினைவில் இருக்கிறது. அக்காலத்தில் சொறி சிரங்கு அநேகமாக எல்லாக் குழந்தைகளுக்கும் வரும். எவ்வளவுதான் பணக்கார வீட்டுக் குழந்தையாக இருந்தாலும், மற்றக் குழந்தைகளுடன் பழகும்போது சொறி, சிரங்கு ஒட்டிக் கொள்ளும்.







ஏழு, எட்டு வயது வரையிலும் என்னுடைய உலகமே எங்கள் கிராமமும் அதற்குப் பக்கத்திலேயிருந்த எங்களுடைய சொந்தக்காரர்களின் கிராமங்களும்தான். ஏதாவது ஒரு சமயத்தில், பொள்ளாச்சி நகருக்குப் போய் வருவேன். அது எனக்கு ஒரு குதூகலமான நிகழ்ச்சி.

நல்ல தரமான காளைகள் வைத்திருப்பது எங்கள் குடும்பத்து வழக்கம். விசேஷ காலங்களில் மாட்டு வண்டிகளில் சவாரி போவோம். வண்டிகளில் ஒன்றுக்கொன்று பந்தயம் போட்டு, எந்த வண்டி முந்திச் செல்கிறது என்று பார்ப்பதிலே ஒரு பரவசம்!

எங்கள் குடும்பத்திலே எப்போதும் மூன்று, நான்கு குதிரைகள் இருக்கும். என்னைத் தவிர, எங்கள் குடும்பத்தில் எல்லோரும் நன்றாகக் குதிரைச் சவாரி செய்வார்கள். ஒரு சமயம், நானும் குதிரைச் சவாரி செய்யப் பழகிக் கொள்ள வேண்டுமென்று ஆரம்பித்தேன். இரண்டு தடவை தவறிக் கீழே விழுந்துவிட்டேன். அதற்குமேல் தொடர்ந்து முயற்சி செய்யவில்லை.

நாலாவது வகுப்பு முடிந்து ஐந்தாவது படிக்க, பொள்ளாச்சியில் இருந்த நடுநிலைப் பள்ளியில் சேர்ந்தேன். அந்தக் காலத்தில் அதுதான் அந்தத் தாலுகாவிலே பெரிய பள்ளிக்கூடம்; 10 வது வரை படிக்க வேண்டுமானால், உடுமலைப்பேட்டைக்குத்தான் செல்ல வேண்டும். அங்குதான் உயர்நிலைப்பள்ளி இருந்தது.

குழந்தைப் பருவம் முதல் என்னுடன் கூட வளர்ந்தவர் என்னுடைய அத்தை மகனான வேலுசாமி என்பவர். அவரும் எங்களூரிலிருந்து என்னுடன் படித்துக் கொண்டிருந்தார். எங்கள் இருவரையும் 'இரட்டைக் குழந்தைகள்' என்று சொல்லுவார்கள்.

பொள்ளாச்சி எங்களூரிலிருந்து 6 மைல் தூரத்திலுள்ளது. பொள்ளாச்சியில் என்னுடைய சிறிய தாயார்தான் வீட்டைப் பார்த்துக் கொள்வார்கள். நான் என்னுடைய கிராமத்தைவிட்டுப் போகும்போது என் தாயாரை விட்டுப் பிரிய வேண்டியிருந்தது. போவதற்கு முன்பும் அழ ஆரம்பித்துவிடுவேன். பொள்ளாச்சிக்குப் போன பிறகும் ஒருநாள் முழுதும் அழுது கொண்டிருப்பேன். இந்தப் பழக்கம் நான் 9 வது வகுப்புக்கு வந்த பிறகுதான் நின்றது.

பொள்ளாச்சியில் நான் பள்ளியில் சேர்ந்த பிற்பாடு, அந்தப் பள்ளியிலே 8, 9, 10 வகுப்புக்கள் ஆரம்பிக்கப் பட்டுஉயர்நிலைப்பள்ளியாகமாறியது. ஆகையால், பொள்ளாச்சியிலே என் உயர்நிலைப்பள்ளிப் படிப்பு முடிந்தது.

12 வது வயது வரை நான் ரயில் ஏறியதே இல்லை. என்னுடைய தமையனாருக்குக் குதிரைச்சவாரி செய்ததில் கால் முறிந்து விட்டது. அதற்கு வைத்தியம் பார்ப்பதற்காக, கோயமுத்தூருக்கு அழைத்துச் சென்றார்கள். அப்போதுதான் எனக்கும் ரயிலில் ஏறக்கூடிய பாக்கியம் கிடைத்தது.

அந்தக் காலத்தில் பொள்ளாச்சி போன்ற நகரங்களில் ஒவ்வொரு வருடமும் பிளேக் நோய் வந்துவிடும். சில சமயங்களில் அந்நோய் கிராமங்களையும் தொத்திவிடும். கிராமத்தைக் காலி செய்துவிட்டு, தோட்டங்களில் சென்று வசிப்போம். பொள்ளாச்சியில் பிளேக் நோய் வரும்போது, தினமும் கிராமத்திலிருந்து வண்டியில் வந்து, சாயங்காலம் திரும்பிப் போய் விடுவோம். சில சமயங்களில் மாட்டு வண்டி; மற்ற சமயங்களில் குதிரை வண்டி!

வண்டி ஓட்டுவதிலே மிகவும் பிரியம் எனக்கு. ஆகையினால், வண்டி

ஓட்டுகிறவரைப் பின்னால் உட்காரச் சொல்லிவிட்டு, நான் ஓட்டுவது வழக்கம். மாட்டு வண்டி, குதிரை வண்டி ஓட்டுவதிலும் எனக்கு ஓரளவு திறமை உண்டு.

ஒரு தடவை, புதிய காளை பூட்டிய வண்டியை நான் பொள்ளாச்சிக்கு ஓட்டிக் கொண்டு போனேன். அப்போது திடீரென்று ஒரு குழந்தை தவறி வந்து வண்டியில் விழுந்து, சிறிது காயம் ஏற்பட்டு விட்டது. உடனே, கூட்டம் கூடிவிட்டது. நல்லவேளையாக அங்கிருந்த சிலர் என்னை அடையாளம் கண்டு கொண்டார்கள். "நம்ப கவுண்டர் வீட்டுப் பையன். ஏதோ தெரியாமல் நடந்துவிட்டது. விட்டு விடுங்கள்" என்று சொன்னார்கள். 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று பத்திரமாக ஊர் போய்ச் சேர்ந்தேன்.


பள்ளிக்கூடத்தில் படித்த காலத்திலிருந்து எனக்கு என்றும் வழிகாட்டியாக விளங்கியவர்கள் என் சித்தப்பா சின்னு அவர்கள்தான். என் வாழ்க்கைக்கே ஓர் அமைப்புக் கொடுத்த அவர் என் தகப்பனாரின் கடைசி சகோதரர். அவர்தான் பிற்காலத்தில் சுவாமி சித்பவானந்தராகச் சன்னியாசம் ஏற்று, திருப்பராய்த் துறையிலும், மற்ற இடங்களிலும் பல மடங்களையும், கல்வி ஸ்தாபனங்களையும் ஏற்படுத்தியவர். அண்மையில், அமரராகிய அவர், பல ஆன்மீக நூல்களை இயற்றியிருக்கிறார். அவருடைய பகவத் கீதை உரை, ஆங்கிலத்திலும் தமிழிலும் மிகவும் பிரசித்தி பெற்றது. மாணிக்கவாசகரின் திருவாசகத்தை மற்ற உபநிஷதங்கள், கீதை முதலிய ஆதி நூல்களுடன் ஒப்பிட்டு திருவாசகத்தில் காணப்பட்டுள்ள கருத்துக்கள் உபநிஷதத்திலும் கீதையிலும் அடங்கியவையே என எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இதுவரை நூறு நூல்களுக்கு மேல் எழுதியிருக்கிறார்.

சிறு குழந்தைப் பருவத்திலிருந்தே ஆன்மீக நூல்களைப் படிக்கவும் கேட்கவும் எனக்கு வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. என் பாட்டனார் சித்தர் நூல்களைத் தினமும் படிப்பார். என்னையும் படிக்க வைப்பார். பல பாடல்களைப் புத்தகத்தைப் பார்க்காமலே ஒப்புவிக்கக்கூடிய தகுதி எனக்கு ஏற்பட்டிருந்தது.

பொள்ளாச்சிப் படிப்பு முடிந்ததும் சென்னையில் வந்து மாநிலக் கல்லூரியில் சேர்ந்தேன், 1926 ஆம் ஆண்டில்.

எங்கள் குடும்பத்திலே மேல் படிப்புக்கு முதல் முதலாகச் சென்றவர் என் சித்தப்பா சின்னு அவர்கள்தான். அவர் படித்துச் சன்னியாசியாகப் போய் விட்டார். அவருக்கு அடுத்த படியாக நான் மேலபடிப்புக்குச் சென்றேன். என்னுடைய படிப்பு 1932 ல் முடிந்ததும் நான் விடுதலை இயக்கத்தில் சேர்ந்து சிறை சென்று விட்டேன். இதனால், ஒரு விபரீத விளைவு ஏற்பட்டது. எங்கள் குடும்பத்துப் பெரியவர்கள், 'நம் குடும்பத்துக்கும், பெரிய படிப்புக்கும் ஒத்து வராது' என்று சொல்லி என் சகோதரர்களையெல்லாம் பள்ளிப் படிப்போடு நிறுத்திவிட்டார்கள். இந்த மனோபாவம் மாறப் பல வருடங்களாயின.

நான் மாநிலக் கல்லூரியில் படிக்கும்போது, இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபட, சில நண்பர்கள் கூட, 'வனமலர்ச் சங்கம்' என்ற ஒரு சங்கத்தை ஆரம்பித்தோம். அந்தச் சங்கத்தின் சார்பில் 'பித்தன்' என்ற ஒரு பத்திரிகையையும் நடத்தி வந்தோம். இதில் முக்கிய பங்கு எடுத்துக் கொண்டவர், தமிழ்க் கலைக்களஞ்சியம், குழந்தைகள் கலைக்களஞ்சியம், ஆகியவற்றின் தலைமைப் பதிப்பாசிரியராக விளங்கும் பெரியசாமித் தூரன் அவர்கள்தான்.



# பிருந்தாவனக் கவியரங்கம்

## அன்புமணி

ஆடுது பார்மலை உச்சியிலே — அந்த
அழகு முருகன் கோயில்மணி — நன்கு
பாடுது தேனிசைக் காற்றினிலே — அந்தப்
பரம குருவின் கோயில்மணி.
(ஆடுது பார்)

கூடுது பக்தர் திருக்கூட்டம் — உள்ளம்
குதித்துப் பாடுது கொண்டாட்டம்.
தேடுது நாதன் அருள்ஓட்டம் — பின்பு
தேனில் விழுந்திடும் வண்டாட்டம்.
(ஆடுது பார்)

உள்ளமும் துள்ளுது பக்தியிலே — அந்த
உயர்ந்த மணியின் ஓசையிலே.
துள்ளிடும்பக்தியின் வெள்ளத்திலே—அவன்
தோன்றிடு வான் அன்பர் உள்ளத்திலே.
(ஆடுது பார்)

அறுபடை வீட்டில் கேட்கும்மணி — நமக்(கு)
ஆறுதல் கூறிடும் தெய்வமணி.

வரும்பகை அனைத்தும் தீர்க்கும்மணி — நம்
மனத்தில் இன்பம் பாய்ச்சும் மணி.
(ஆடுது பார்)

— ம. மணிவண்ணபாண்டியன் (3150),
ஆத்தூர்.



## சுட்டித் தங்கை



எனக்கொரு அழகிய குட்டித் தங்கை
என்றும் குறும்பிலே சுட்டித் தங்கை!

ஆடுவாள் அழகு மயிலைப் போல்.
பாடுவாள் இனிய குயிலைப் போல்.
ஓடுவாள் துள்ளும் மானைப் போல்.
உரக்கச் சிரிப்பாள் காசைப் போல்

எனக்கொரு அழகிய குட்டித் தங்கை
என்றும் குறும்பிலே சுட்டித் தங்கை!

உண்பது அவளுக்குக் கசந்திடுமே!
ஓடி ஆடுதல் இனித்திடுமே.
மழையைக் கண்டால் பிடித்திடுமே.
வரவரக் குறும்புகள் வளர்ந்திடுமே.

எனக்கொரு அழகிய குட்டித் தங்கை
என்றும் குறும்பிலே சுட்டித் தங்கை.

—தா. சுமதி (8268), கோவை—16.



## மரம் வளர்ப்போம்

மரங்கள் இருந்தால் மழை பெய்யும்;
மழைபெய் தாலே மரம் வளரும்.

மரமும் மழையும் இருந்தால்தான்
மங்கா வளங்கள் நாம் பெறுவோம்.

வீட்டுக் கொருமரம் வளர்ப்போமே;
விடுவோம் தண்ணீர் தினம் தினமே.

மரமும் வளரும்; நாம் வளர்வோம்
மனமகிழ் கொள்வோம், அதைக் கண்டு.

நாடு செழிக்க நம் பங்கு
நல்ல ஒருமரம் வளர்ப்பதுவே!
—வி. செல்வக்குமார் (10,631), சாணார்பட்டி.

## வேணும்

பழகத் தெரிய வேணும் — தம்பி
படிப்பில் கவனம் வேணும்.
பண்பில் உயர வேணும் — தம்பி
பாரில் சிறக்க வேணும்.

உண்மை பேச வேணும் — தம்பி
உள்ளம் திருந்த வேணும்.
உலகம் உயர வேணும் — தம்பி
உழைத்து வாழ வேணும்.

நன்மை செய்ய வேணும் — தம்பி
நாடு காக்க வேணும்.
நெஞ்சில் உறுதி வேணும் — தம்பி
நேர்மை காக்க வேணும்.

அன்பு பெருக வேணும் — தம்பி
அடக்கம் உனக்கு வேணும்.
அகில மெல்லாம் புகழ — தம்பி
அறிவில் சிறக்க வேணும்.
— ஏ. பி. ராஜசேகரன் (5270), ஈரோடு—8.



## கட்டெறும்பு மாமா

கட்டெறும்பு மாமாவே
கண்டு விட்டேன் ஓடாதீர்!
சுற்றிச் சுற்றி வருகிறீர்;
தொல்லை மிகவும் தருகிறீர்.

'சுறுக்குச் சுறுக்கு என்றுநீர்
உரிமை யோடு கடிக்கிறீர்!
விரைந்தே ஓடிப் போகிறீர்;
வீணாய் வம்பு செய்கிறீர்.

படைகள் அதிகம் இருக்குது
என்று மனத்தில் எண்ணமா?
உடனே வெளியே கிளம்புங்கோ;
உபத்திரவம் போதுங்கோ!
—கே. ராஜா (6963), சென்னை—28.



# கேளுங்கள்: சொல்லுகிறோம்

* குழல் ஊதும் கண்ணன் சிறு வயதில் மாடு மேய்த்தார் என்று படித்திருக்கிறேன். யேசுநாதர் கூட ஒரு மாட்டுக் கொட்டிலில் தான் பிறந்தாராம். மாடுகளுக்கும் இந்த மகான்களுக்கும் ஏதோ தொடர்பு இருப்பது ஆச்சரியமாக இல்லே?

— பி. கருணாகரன், சித்தூர்.

நபிகள் நாயகம் கூடச் சிறு வயதில் ஆடு, மாடு, ஒட்டகங்களை மேய்த்திருக்கிறார் என்று அவரது வரலாறு சொல்லுகிறது.

* புதுவை மாநிலத்தில் நாம் பாடுகிறோமே, 'நீராரும் கடலுடுத்த' என்ற தமிழ்த் தாய் வாழ்த்தைப் பாடுவதில்லையாமே, உண்மையா?

— சே. பரமகுரு, குடியாத்தம்.

உண்மைதான். அங்கு பாவேந்தர் பாரதிதாசன் இயற்றிய 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே' என்று தொடங்கும் பாடலைப் பாடுகிறார்கள்.

* மாட்டுத் தோலில் செருப்புத் தைப்பதைப் போல, குதிரைத் தோல், கழுதைத் தோலில் கூட செருப்புத் தைக்கிறார்களாமே, நிஜமா?

— ச. ஆடியபாதம், வேலூர்.




கழுதைத் தோலிலே செருப்புத் தைக்கிறார்கள் என்பது நிஜம்தான். ஆனால், குதிரைத் தோலில் செருப்புத் தைக்க மாட்டார்கள். பந்து, கையுறை போன்றவைகளைச் செய்கிறார்கள்.

* புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதிய புத்தகங்களில் நகைச்சுவையுள்ள புத்தகம் ஏதாவது இருக்கிறதா?

— பி. ரமணி, சேந்தநல்லூர்.



அவர் எழுதிய 'இருண்ட வீடு' என்ற புத்தகமே ஒரு நகைச்சுவைக் களஞ்சியம் தான்!

* நாம் சாமான்கள் வாங்கும்போது சில கடைக்காரர்கள் தரும் 'பில்'லின் அடியிலே. E. & O. E. என்று போட்டிருக்கிறதே, அது எதற்காக?

— வி. ஹரிஹரன், சேலம்—2.

'Errors and Omissions excepted' என்பதன் சுருக்கமே E. & O. E. என்பது. பில்லில் ஏதாவது தவறு இருக்கலாம்; அல்லது விடுபட்டிருக்கலாம். அப்படியிருந்தால் பின்னால் சரிப்படுத்திக் கொள்ள இடமுண்டு என்பதைத்தான் அப்படி அச்சிட்டிருக்கிறார்கள். ஆனால், இக்காலத்தில் அப்படி அச்சிடப்பட்ட பில்களை அபூர்வமாகவே காண்கிறோம்.

* பனை மரத்திலிருந்துதான், பதநீரும் கிடைக்கிறது; கள்ளும் கிடைக்கிறது. கள் கெடுதலானது என்கிறோம். பதநீர் மட்டும் கெடுதல் இல்லையா?

— எஸ். மணியம், பள்ளத்தூர்.

பனஞ்சாறு அதாவது பதநீர் இனிப்பாக இருக்கும். அது குளிர்ச்சியானது. உடம்புக்கு நல்லது. அதே சாற்றைப் புளிக்க வைத்தால் கள்ளாகிறது. கள்ளால் மயக்கம் ஏற்படுகிறது; உடம்பு கெடுகிறது.

* நல்ல பாம்பு மட்டும்தான் சட்டை உரிக்குமா?

— எஸ். ராமானுஜம், திருச்சி—5

எல்லாப் பாம்புகளுமே சட்டை உரிக்கும்.

* 'பகவத்கீதை' என்பதற்கு அர்த்தம் என்ன?

— எம். தாட்சாயணி, தருமபுரி.

'கீதா' என்றாலே பாட்டு என்றுதான் அர்த்தம். 'பகவத் கீதை' என்றால், கடவுளால் பாடப்பட்டது. கண்ணன் அர்ச்சுனனுக்குச் செய்த உபதேசமே பகவத் கீதை.

* இராமலிங்க சுவாமிகள், 'மாமிசம் சாப்பிடக் கூடாது' என்ற கொள்கை உடையவர் என்று படித்திருக்கிறேன். ஆனால், அவரைப் பற்றிக் கட்டுரை எழுதுகிறவர்கள், பிரசங்கம் செய்கிறவர்களில் சிலர் மாமிசம் சாப்பிடுகிறார்களே! இது சரியா?

— பி. சின்னதுரை, வேடசந்தூர்.

சரியில்லைதான். வடலூரில் அவர் ஏற்படுத்திய சத்திய ஞான சபையின் வாயிலில் 'கொலை புலை நீத்தவர்கள் மட்டுமே உள்ளே புகுதல் வேண்டும்' என்று அவர் வாழ்ந்த காலத்திலே எழுதி வைக்கச் சொன்னார். அப்படியிருக்கும்போது, புலால் உண்பவர்கள் எப்படி அவருடைய பக்தர்களாக இருக்க முடியும்? அவரைப் பற்றிப் பேசவோ எழுதவோ தகுதி பெற முடியும்?


* முன் காலத்தில் பெண்கள் பந்தாடும் போது பாடிக் கொண்டே ஆடுவார்களாமே, உண்மையா?

— பி. நிர்மலா, அறந்தாங்கி.

உண்மைதான். சிலப்பதிகாரம், சிந்தாமணி, பெருங்கதை முதலிய நூல்களில், பெண்கள் பந்தாடும்போது பாடிக் கொண்டே ஆடுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த மாதிரிப் பாடும் பாட்டை 'கந்துகவரி' என்பார்கள். கந்துகம் = பந்து.

* என் ஆசிரியர் சாம்பலில் பல் தேய்க்கக் கூடாது என்கிறார். என் பாட்டியோ சாம்பலில் பல் தேய்த்தால் நல்லது என்கிறார். இவர்களில் யார் சொல்வதைக் கேட்பது?


— நா. கார்த்திகேயன், வடகரை




"பாட்டி, தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள். இந்த விஷயத்தில் நீங்கள் சொல்வதைக் கேட்க முடியவில்லையே,' என்று பாட்டியிடம் நயமாகக் கூறிவிடுவதே நல்லது. சாம்பலில் பல் தேய்த்தால், பற்களிலுள்ள எனாமல் தேய்ந்து போகும். சுரசுரப்பான பற்பொடிகளையும் பயன்படுத்தக் கூடாது. ஆலங்குச்சி, வேலங்குச்சிகளைப் பயன்படுத்தலாம். ஈறுகளில் குச்சிகள் குத்திவிடாதபடி, அவற்றின் நுனிகளைப் பஞ்சுபோல் ஆக்கிக் கொள்ள வேண்டும். வசதியுள்ளவர்கள் பல் பிரஷ் வாங்கி பிரஷால் துலக்கலாம்.

* ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் எதற்காக நோபல் பரிசு பெற்றார்?

— பா. ர. பாலாஜி, கோவை



விஞ்ஞான உலகிலே ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியவர் ஐன்ஸ்டீன். அவரது 'சார்புக் கொள்கை' (Theory of Relativity) தான் அப்புரட்சியை ஏற்படுத்தியது. ஆகையால், பௌதிகத்திற்குரிய நோபல் பரிசு அவருக்குக் கிடைத்தது.

* கால்குலேட்டரைக் கண்டுபிடித்தவர் யார்?

— த. பொன்னப்பன், ஆண்டிப்பட்டி.

முதல் முதலாக அதாவது 1642 ஆம் ஆண்டில் கூட்டல் கணக்கை மட்டுமே செய்யக் கூடிய கருவியைக் கண்டுபிடித்தவர் பிளெஸ் பாஸ்க்கல் என்ற பிரெஞ்சுக்காரர். அதற்குப் பிறகு, 297 ஆண்டுகள் சென்று, கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் முதலிய கணக்குகளைச் செய்யும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர்கள் அமெரிக்கர்கள்.

* சிறு குழந்தைகளுக்குத் தேநீர் கொடுப்பது நல்லதா?

— ஆர். இருமலை, கூடுவாஞ்சேரி.

நல்லதல்ல. தேநீரில் காபீன் (Caffeine), டானின் (Tannin) என்ற இருவகை நஞ்சுகள் இருக்கின்றன. அவை நம் நரம்பு மண்டலத்தைக் கெடுக்கக்கூடியவை. பெரியவர்களும் அளவோடு குடிப்பதே நல்லது.

*** நம் தேசத்திற்கு 'இந்தியா' என்ற பெயர் எப்படி வந்தது?**

**— இரா. இராமசாமி, திருநெல்வேலி—6.**

நம் நாட்டிற்கு முதல் முதலாக வந்த பாரசீகர்களும், கிரேக்கர்களும் சிந்து நதிப் பகுதியைத்தான் நன்றாகத் தெரிந்து கொண்டிருந்தார்கள். ஆகையால், அப்பகுதியை 'ஹிந்து' என்று தங்களுடைய புத்தகங்களில் குறிப்பிட்டார்கள். அதையே கிரேக்க மொழியில், 'இந்தஸ்' என்றார்கள். நாள் ஆக ஆக, 'இந்தஸ்,' 'இந்தியா'வாக மாறிவிட்டது. ஆனாலும், ஆதிகாலத்திலிருந்தே நம் தேசத்தினர் 'பாரதம்' என்றும் 'பரத கண்டம்' என்றுமேகூறிவந்தார்கள். நம்தேசம்விடுதலை பெற்ற பிறகு, 'பாரதம்' என்ற பெயரே அதிகார பூர்வமாக முடிவு செய்யப் பெற்றது.

*** 'The face is the index of the mind' — எவ்வளவு அழகான பழமொழி. இப்படித் தமிழில் ஒரு பழமொழி உண்டா?**

**— என். பிரேம்குமார், ஆரணி.**

ஏன் இல்லை? 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' இதைக் காட்டிலும் அழகாகக் கூற முடியுமா?

*** சிரிப்பில் பலவிதம் இருக்கிறதல்லவா? எந்தெந்த விதம் என்று சொல்ல முடியுமா?**

**— சி. தேவநாராயணன், பந்தநல்லூர்.**

புன்சிரிப்பு, பெருமிதச் சிரிப்பு, பாராட்டுச் சிரிப்பு, பரவசச் சிரிப்பு, அருள் சிரிப்பு, கிண்டல் சிரிப்பு, ஏளனச் சிரிப்பு, வஞ்சகச் சிரிப்பு, அசட்டுச் சிரிப்பு, வெடிச் சிரிப்பு, பேய்ச் சிரிப்பு, பைத்தியச் சிரிப்பு — இன்னும் எத்தனை எத்தனையோ விதமான சிரிப்புகள் உண்டு.


*** நோபல் பரிசு எந்த நாட்டில் வழங்கப்படுகிறது? நோபல் பரிசை ஏற்படுத்தியவர் யார்?**

**— மதனலட்சுமி, சேலம்—5.**

சுவீடன் நாட்டில் வழங்கப்படுகிறது. ஏற்படுத்தியவர், ஆல்பிரட் நோபல்.

*** தொட்டிலில் குழந்தைகளைப் போட்டு ஆட்டும்போது பாடுகிற பாடலை, 'தொட்டில் பாட்டு' என்றுதானே சொல்ல வேண்டும்? 'தாலாட்டு' என்பது சரியா?**

**— என். காந்திமதி, கரூர்.**




தொட்டிலில் போட்டு ஆட்டும்போது மட்டும்தானா? தோளில் போட்டோ, மடியில் போட்டோ ஆட்டும்போதும் பாடுகிறார்களே, அப்போது, இந்தப் பாட்டுக்கு என்ன பெயர் சொல்வது? 'தோள் பாட்டு' 'மடிப் பாட்டு' என்றா சொல்வது? 'தாலு' என்ற சொல்லுக்கு 'நாக்கு' என்று பொருள். குழந்தைகளைத் தூங்க வைப்பதற்காக நாக்கை அசைத்துப் பாடும் பாடலை, 'தாலாட்டு' என்று கூறுகிறோம்.

*** உருளைக் கிழங்கு எந்த நாட்டிலிருந்து நம் நாட்டுக்கு வந்தது?**

**— வெ. மீனாட்சி, திருத்தணி.**


அமெரிக்காவிலிருந்த ஆதிக் குடிமக்கள் இதைப் பயிர் செய்து உணவாக உபயோகப்படுத்தினார்களாம். அவர்களின் மதச்சடங்குகளிலும் உருளைக்கிழங்கு நிச்சயமாக இருக்குமாம். அங்கிருந்து பல ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்றதாம். நம் தேசத்துக்கு உருளைக் கிழங்கைக் கொண்டு வந்தவர்கள் போர்ச்சுக்கேசியர்கள் — 17 ஆம் நூற்றாண்டில்.

அடுத்த இதழில்



# என் குழந்தைப் பருவம்

— குன்றக்குடி அடிகளார்




பாரதியார் பாடலில் சில வரிகளுக்கான விளக்கம் மேலே உள்ளது. பாடல் எது? வரிகள் என்னென்ன? கூற முடியுமா? விடை: 30 ஆம் பக்கம்.



ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்சர்

வங்காளத்தில் உள்ள கமார்புக்கூர் என்ற கிராமத்தில் ஓர் ஏழை அந்தணரின் பிள்ளையாகப் பிறந்தார். சிறு வயது முதலே எந்நேரமும் கடவுளைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்ததால், இவரது கவனம் படிப்பிலே செல்லவில்லை.

19 வது வயதில் இவர் கல்கத்தாவின் அருகிலுள்ள தட்சிணேசுவரம் காளி கோயிலின் பூசாரியானார். இவருடைய பக்தி நாளுக்கு நாள் வளர்ந்தது. தேவியை நேரிலே காணும் அரிய வாய்ப்பையும் இவர் பெற்றார்.

இராமகிருஷ்ணரின் பெருமை நாடெங்கும் பரவியது. இவரைக் காண ஏராளமான இளைஞர்கள் வந்தார்கள். அவர்களில் பலர் இவரைக் குருவாகக் கொண்டார்கள். அவர்களிலே தலை சிறந்து விளங்கியவர் சுவாமி விவேகானந்தர்.

இராமகிருஷ்ணர், தாம் கண்ட உண்மைகளைச் சிறு சிறு கதைகள் மூலமாக விளக்கி, மற்றவர் மனத்திலே பதியச் செய்தார்.

இவரது பெயரால். வங்காளத்திலுள்ள பேலூரில் ஒரு மடம் நிறுவப் பட்டிருக்கிறது. இம்மடத்தின் கிளைகள் உலகின் பல பாகங்களிலும் பணி புரிந்து வருகின்றன. அவற்றில் ஒன்றுதான் சென்னையிலுள்ள இராமகிருஷ்ண மடமும்.

கல்விக் கூடங்கள், மருத்துவ மனைகள், அனாதை இல்லங்கள் முதலியவற்றை அமைத்தும், பூகம்பம், வெள்ளம், பஞ்சம், கொள்ளை நோய் போன்றவற்றால் துன்பப்படும் மக்களுக்கு உதவியும், பல மொழிகளில் நல்ல புத்தகங்களையும், பத்திரிகைகளையும் வெளியிட்டும் இந்த மடங்கள் சிறந்த முறையில் தொண்டு செய்து வருகின்றன.



தாமஸ் ஆல்வா எடிசன்

இன்று நாம் சுவிட்சைப் போட்டு விளக்கை எரிய வைக்கிறோம்; கிராமபோனில் பாட்டுக் கேட்கிறோம்; சினிமாக் கொட்டகையில் திரைப்படம் பார்க்கிறோம். — இப்படி அன்றாட வாழ்க்கையில் நமக்கு உதவி வரும் பலவிதமான விஞ்ஞான விந்தைகளுக்கெல்லாம் காரணமாயிருப்பவர் தாமஸ் ஆல்வா எடிசன்தான்!

அமெரிக்காவில் உள்ள மிலான் நகரில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த இவர் —

12 வது வயதில் ரயிலில் செய்தித்தாள் விற்கும் பையனாகப் பணியாற்றினார். ரயிலிலே அவர் ஒரு சிறிய சோதனைக் கூடத்தையும் அமைத்துக் கொண்டார். ஒருநாள், ரயில் திடீரென்று நின்றபோது, சோதனைச்சாலையிலிருந்த பாஸ்பரஸ் தெறித்துக் கீழே விழுந்து விட்டது. உடனே, அந்த ரயில்பெட்டியில் தீப்பிடித்துக் கொண்டது! இதை அறிந்த ரயில் அதிகாரிக்கு அளவுக்கு மீறிக் கோபம் வந்துவிட்டது. அடுத்த ரயில் நிலையத்தை அடைந்ததும், இவரது சோதனைச் சாலையிலிருந்த பொருள்களையெல்லாம் வெளியிலே தூக்கி எறிந்தார். அத்துடன், இவரது கன்னத்தில் ஓங்கி ஓர் அறை கொடுத்தார்: அறை பலமாக விழுந்ததால், இவரது காது செவிடாகிவிட்டது! சாகும் வரை இவருக்குச் சரியாகக் காது கேட்காது. அப்படியிருந்தும் இவர் சோதனைகளை நிறுத்தவில்லை. தொடர்ந்து வெற்றி மேல் வெற்றி பெற்றார். அவர் கண்டு பிடித்த கருவிகளுக்குக் கணக்கே இல்லை. தமக்கே உரியவை என்று இவர் பதிவு செய்து கொண்டவை மட்டும் 1300 என்றால், பார்த்துக் கொள்ளுங்களேன்!

டாக்டர் பக்கம்

# ஜலதோஷம்



டாக்டர் கு. கணேசன்

காற்று மண்டலத்தில் நம் உடல் நலத்திற்குத் தீமை செய்யும் கிருமிகள் மில்லியன் கணக்கில் உள்ளன. சீதோஷ்ண நிலையைப் பொறுத்தும், சுகாதார நிலையைப் பொறுத்தும் அக் கிருமிகள் பெருகவோ, குறையவோ செய்கின்றன. அவற்றில் 'ரைனோ வைரஸ்' (Rhino Virus) என்ற நுண்ணுயிர்க் கிருமிகள்தான் நாம் சுவாசிக்கும் போது மூக்கு, வாய் வழியாக சுவாசக் குழலை அடைந்து, 'ஜலதோஷம்' பிடிக்கக் காரணமாகிறது.

அழையாத விருந்தாளிகளாக நம் உடலுக்குள் புகுந்துகொண்ட இக் கிருமிகளை எதிரிகளாகப் பாவித்து, நம் இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்கள் 'இண்டர்பிரான்' (Interferon) என்ற எதிர்ப்புச் சக்திவாய்ந்த புரோட்டீனை உற்பத்தி செய்து, விரட்டுகின்றன.

வைரஸ் கிருமிகளுக்கும் இன்டர்பிரானுக்கும் நடக்கும் போராட்டத்தில் வைரஸ்கிருமிகள் வெற்றிபெற்று, நம் சுவாசக் குழலின் எல்லாப் பகுதிகளையும் ஆக்கிரமித்துக் கொள்கின்றன. அதன் பிறகு மூக்கில் ஆரம்பித்துச் சுவாசக் குழலின் அடிப்பாகம் வரை உள்ள 'செல்'களைத் தின்ன ஆரம்பிக்கின்றன.

அதனால்தான் ஜலதோஷத்தின் ஆரம்ப அறிகுறிகளாகத் தும்மல், தொண்டைக் கமரல், இருமல் ஆகியவை வருகின்றன. அதற்குப் பிறகு மூக்கில் உள்ள வாசனை நரம்புகளின் நுனிப் பகுதிகளையும் அவை உணவாக உட்கொள்வதால், ஜலதோஷம் பிடித்தவர்கள், வாசனையை அறியும் தன்மையைத் தற்காலிகமாக இழக்கிறார்கள்.

அடுத்த இரண்டு மூன்று நாட்களுக்கு வைரஸ் கிருமிகளின் அட்டகாசம் தொடர்கிறது. இதனால், காய்ச்சல் வருகிறது. இருமல் அதிகமாகிறது. இச்சமயத்தில், நம் சுவாசப் பாதையில் இறந்து போன செல்களும் சில அசுத்தங்களும் சேர்ந்து சளியாக மூக்கு மூலம் வெளியேறுகிறது. இதை 'மூக்கு ஒழுகுதல்' (Running Nose) என்கிறோம். சில பேருக்கு மூக்கடைப்பும் உண்டாகும்.

ஐந்தாம் நாள் இந்தக் கிருமிகளுக்கே அலுப்பு வந்து விடுகிறது போலும். நாம் மூக்கைச் சிந்தும் போதும் இருமும் போதும் சளியுடன் சேர்ந்து இக்கிருமிகளும் வெளியேறி மீண்டும் காற்று மண்டலத்தை அடைகின்றன. அந்த அசுத்தக் காற்றைச் சுவாசிக்கும் மற்றொருவர் ஜலதோஷத்தின் பிடியில் சிக்கிக் கொள்கிறார். இப்படியேதான் ஒரு சுழற்சியாகப் பல

ரிடத்திலும் ஜலதோஷம் தொற்றிக் கொள்கிறது.

இந்த வைரஸ் கிருமிகளை ஒழிக்க முடியாது; நம் உடலுக்குள் நுழைவதைத் தடுக்கவும் முடியாது. ஆனால், அவை ஏற்படுத்தும் பாதிப்பைத் தடுத்து நிறுத்த ஒரு தடுப்பு மருந்தை நம் விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர்.

அதிலும் ஒரு சிக்கல் தோன்றியது. இந்த 'ரைனோ வைரஸ்'ஸில் மட்டும் 113 வகைகள் உள்ளனவாம். ஒரு வகைக் கிருமிகளைத் தடுக்கக் கூடிய தடுப்பு ஊசியால், மற்றொரு வகைக் கிருமிகளைத் தடுக்க இயலவில்லை. இதனால், அத்தடுப்பு ஊசியைப் பயன்படுத்த முடியாமல் போகிறது.

இங்கிலாந்திலுள்ள ஹார்வார்ட் மருத்துவமனை (Harward Hospital) மருத்துவர்கள், நம் உடலில் தயாராகும் 'இன்டர்பிரான்' என்ற எதிர்ப்புச் சக்தி வாய்ந்த புரோட்டீனையே இந்த வெள்ளை அணுக்களிடமிருந்து தயாரித்து, தடுப்பு ஊசியாகப் பயன்படுத்தினர். இதன் ஒரு டோஸ் (Dose) தடுப்பு ஊசியின் விலை ரூபாய் பத்து மட்டுமே. ஆனால், இதனுடைய எதிர்ப்புச் சக்தி சுமார் ஆறு மாதங்கள் வரையே நீடிப்பதால், இன்னும் சக்தி வாய்ந்த தடுப்பு ஊசியைக் கண்டுபிடிக்க அம்மருத்துவர்கள் தொடர்ந்து ஆராய்ந்து வருகிறார்கள். அது சரி, இந்தத் தடுப்பு ஊசி வருகிற வரைக்கும் நாம் என்ன செய்வது?

— ஜலதோஷத்தால் பாதிக்கப்பட்டவர்கள் கொதித்து ஆற வைத்த தண்ணீரை அருந்த வேண்டும்.

— தும்மல், இருமல் வரும் போது கைக்குட்டையால் முகத்தை மறைத்துக் கொள்ள வேண்டும்.

— கண்ட இடங்களில் மூக்கைச் சிந்துதல் கூடாது.

— வைட்டமின் 'சி' நிறைந்த உணவுகளை உட்கொண்டால் நம் உடலில் எதிர்ப்புச் சக்தி அதிகமாகும் (உ—ம்) ஆரஞ்சு, மாம்பழம், எலுமிச்சை, நெல்லிக்காய், தக்காளி, ஆப்பிள், கீரை வகைகள்.

— மருத்துவர்களின் ஆலோசனைப்படிச் சில மாத்திரைகளையும், இருமல் மருந்துகளையும் உபயோகிக்கலாம்.

— வெந்நீரில் ஆவி பிடிக்கலாம்.

— நல்லகாற்றோட்டம்உள்ள இடத்தில் படுக்க வேண்டும்.

## பாரதி புதிர் விடை 8


பத்துப் பன்னிரண்டு தென்னைமரம்
பக்கத்திலே வேணும்—நல்ல
முத்துச் சுடர்போலே—நிலாவொளி
முன்பு வரவேணும்; அங்கு
கத்துங் குயிலோசை—சற்றேவந்து
காதிற் படவேணும்; என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே—நன்றாயிளந்
தென்றல் வரவேணும்.

(பாடல்: காணி நிலம்)

முகம், துதிக்கை, காதுகள் ஆகியவற்றில் வெளிர் சிவப்பு நிறப் புள்ளிகள் விளங்குவது நல்ல இன யானையின் இயல்பாகக் கருதப்படுகின்றது. இத்தகைய முகத்தினையுடைய யானை, 'புகர் முக யானை' எனப்படுகிறது.

நன்கு வளர்ந்த ஓர் ஆண் யானையின் உயரம் 2.7 மீட்டர் இருக்கும். பெண் யானை 2.4 மீட்டர் உயரமுள்ளதாயிருக்கும். யானையின் எடை சுமார் 36000 கிலோ கிராமுக்கும் மிகுதியாக இருக்கும்.

— ஆர். எஸ். சுப்பிரமணியன்.




# கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல் (தொடர்ச்சி)

3165 சி. சுதந்திராதேவி, D/o. சி. பா. சீனிவாசன், திருவாஞ்சியம் — 610 110.
3166 வே. விஜயகுமார், 106, கீழ ராஜவீதி, திருநெல்வேலி — 6.
3167 க. கோவிந்தராஜ், 11/02, சுவர்ணாம்பிகை லே அவுட், O. P. P. பவர் அவுஸ், கோவை — 9.
3168 எஸ். பழனி, S/o. எம். சுப்புராயன் மளிகை, சின்னிம்பேட், திருவண்ணாமலை தாலுகா.
3169 பி. ராகவேந்திரன், செங்கல்வராயன் தெரு, சென்னை — 5.
3170 பா. ரமேஷ், 32, ராஜாஜி காலனி, ஆத்தூர், சேலம் மாவட்டம்.
3171 கே. மகேஷ், 30, பழனி ஆண்டவர் கோயில் தெரு, சென்னை — 11.
3172 எம். வெங்கட்ராமன், 52, பெருமாள் கோயில் தெரு, எட்டையபுரம் — 627 902.
3173 வெ. சத்யநாராயணன், 23 பெருமாள் கோயில் தெரு, தூத்துக்குடி, மேலூர் — 628 002.
3174 இரா. பாலாஜி, 20, டி. கே. எம். கல்லூரிச் சாலை, சங்கரன்பாளையம், வேலூர் — 632 001.
3175 என். திவாகர், 29, கொண்டையம்பேட்டை, திருவானைக்காவல் அக்ரகாரம், திருச்சி — 5.
3176 ந. பொன்ராஜ், 56, காத்தாளம்மன் கோவில் தெரு, கமுதி.
3177 கோ. இளங்கோ, 22, இராமசாமி கோவில் தெரு, இராஜபாளையம்.
3178 பெ. பவானி, D/o. சி. பெருமாள், டிரைவர், பெரியார் புரொஜெக்ட், உத்தம பாளையம் தாலுகா.
3179 எஸ். ரவி, 52, A. A. P. மாடத் தெரு, திருநெல்வேலி டவுன்.
3180 செ. கன்யா, வேள்ளாளர் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, திண்டல், ஈரோடு — 638 009.
3181 எஸ். சீனிவாசன், 25 ஜி, கிருஷ்ணம்பாளையம், ஈரோடு — 638 003.
3182 கே. சுந்தர்ராசன், S/o. பி. ஆர். கண்ணன், கணக்கர், மின்பாறை — 642 116.
3183 க. சுபஸ்ரீ நித்யமகாலட்சுமி, சி 72, யு. கே. பழனிசாமி கவுண்டர் தெரு, காந்தி நகர், உடுமலைப்பேட்டை.
3184 கே. வெங்கடேசன், 105, ஜி. கே. ஸ்கொயர், குறிச்சி, கோவை — 24.
3185 ஆர். சுரேஷ், 8/23, ஆர். ஆர். ஸ்வாமி லேன், ராம் நகர், கோவை — 9.
3186 சி. சுந்தர், 36, ராஜபாளையம் தெரு, பட்டுக்கோட்டை.
3187 அ. நந்தகுமார், பெருமாள் கோவில் தெரு, W. S. C. 132, எட்டையபுரம்.
3188 செ. ரகுராமன், 3, வளையல்காரத் தெரு, போடிநாயக்கனூர்,.
3189 செ. முரளி, 3, வளையல்காரத் தெரு, போடிநாயக்கனூர்.
3190 சு. பாலகிருஷ்ணன், வேணி இல்லம், தும்பைப்பட்டி, மேலூர் தாலுகா.
3191 ஆர். வெங்கடேசன், 4/76E, டி. எஸ். கே. காலனி, என். ஜி. ஜி. ஓ. காலனி, கோவை — 22.
3192 பி. லட்சுமி, 286 பி, காந்திபுரம், 11 வது தெரு, டாடா பாட், கோவை — 12.
3193 **G. Balasubramanian, Room No. 3, Gor Bldg., Mahatma Gandhi Road, Bombay — 80.**
3194 சு. ஜயப்பன், திருமேனியார் கோயில், தெற்கு காருகுடி, மாயவரம் தாலுகா.
3195 ச. ஞானமுருகன், 36, பாரதியார் தெரு, செங்கற்பட்டு.
3196 ஜி. ஜெயா, 67, தளவில் தெரு, வடிவீஸ்வரம், நாகர்கோயில் — 2.
3197 எம். சுகுமார், 4, புதுப்பேட்டை சாலை, திருப்பத்தூர், வ. ஆ.
3198 எம். பிரபாகர், 30 — ஜி, குமரப்பபுரம், ராயபுரம் விரிவு, திருப்பூர் — 638 601.
3199 வெ. இராமச்சந்திரன், 65, பக்தபுரி, தெரு, கும்பகோணம்.
3200 வி. முருகவேள், 67, நிமந்தக்காரத் தெரு, பெரியகாஞ்சிபுரம் — 2.
3201 மா. பாலசண்முகம், 77, கடை வீதி, சிங்காநல்லூர், கோவை — 5.
3202 W. S. லதா, 5, ராஜாஜி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை — 33.
3203 ப. மணிமேகலை, 16 ஏ, சுப்பிரமணியபுரம் அக்ரகாரம், தேவகோட்டை.
3204 எஸ். முத்துராஜ், 225 ஏ, மேற்கு இரத வீதி, திண்டுக்கல் — 5.
3205 பா. ராஜா, சந்திரா சைக்கிள் கம்பெனி, ரயிலடி, பூதலூர் — 613 602.
3206 ஸ்ரீ பவித்ரா, 3118, கிழக்கு 2 ஆம் தெரு, புதுக்கோட்டை.
3207 அ. ராஜா, 4, காந்தி அடிகள் சாலை, கும்பகோணம் — 1.
3208 அ. இந்திரா, ஆனந்த பவன், பழைய தபால் தெரு, கும்மிடிப்பூண்டி.

3209 ஜெ. ரமேஷ், S/o. ஜி. ஜெயராம நாயுடு, புரிச்சம்பேடு, அனுப்பம்பட்டு அஞ்சல், பொன்னேரி தாலுகா.
3210 ஆர். ஸ்ரீனிவாசன், 5504, மார்த்தாண்டபுரம் முதல் தெரு, புதுக்கோட்டை.
3211 ஆர். விஜயராகவன், 5504, மார்த்தாண்டபுரம் முதல் தெரு, புதுக்கோட்டை.
3212 நா. மகாதேவன், 15, தீர்த்தாரப்ப முதலி தெரு, சென்னை—5.
3213 எஸ். சத்தியசிம்மன், 62 பி, சுப்பாராவ் தெரு, சோளிங்கர்.
3214 ஆர். எஸ். கீதாகல்யா, 10, முருகநாதபுரம், கரூர்.
3215 டி. முத்துலதா, 3, சேனை வணிகர் தெரு, கொக்கிரகுளம், நெல்லை.
3216 மே. வெ. சங்கரநாராயணன், 15, இளாவடி விநாயகர் கோவில் தெரு, சங்கரன் கோவில்.
3217 ச. முருகன், 10, அளவுக்காரத் தெரு, தெற்கு மாசி வீதி, மதுரை—1.
3218 பா. நடராஜன், ஏ—27, செக்ரடேரியட் காலனி, ஆதம்பாக்கம், சென்னை—88
3219 ஆ. வெங்கடேசன், 27 ஏ, பிராமணர் வீதி, வந்தவாசி.
3220 ஜி. லதாபிரபா, 73 ஏ, சம்மட்டிபுரம் சாலை, அரசரடி, மதுரை—16.
3221 ஆர். பிரசன்னா, 82, தெற்குத் தெரு, கரூர்.
3222 என். மாலதி, 11/17, பைகோபுரம் தெரு, திருவண்ணாமலை.
3223 வி. கே. முத்துக்குமாரசாமி, வெள்ளிமலைப்பட்டினம், நரசிபுரம் போஸ்ட், கோவை மாவட்டம்.
3224 இரா. மஞ்சுளா, 14, B பிளாக், T. T. C. ஹவுசிங் யூனிட், கவுந்தம்பாளையம், கோவை—30.
3225 ஆர். ஜெயகோபிநாதன், 3, அருணா இல்லம், வணிக வைசியத் தெரு, தென்கரை, பெரியகுளம்—626 501.
3226 ப. விஜயலட்சுமி, கருணாநிதி வீதி, ஜவகர்புரம், கே. புதூர், மதுரை—7.
3227 பி. பத்மாவதி, 636, அண்ணாநகர், மதுரை—20.
3228 பி. காயத்ரி, 636, அண்ணா நகர், மதுரை—20.
3229 வெ. தங்க மீனாட்சி, 1/430, பாண்டியன் நகர், விசாலாட்சி நகர், மதுரை—625 401.
3230 இராம. அழகுசுந்தரம், 71—F, பங்களா தோட்டம், B. G. ரோடு, சேலம்—2.
3231 ஆர். ஸ்ரீவித்யா, 27, அக்ரகாரம், மோகனூர் சேலம் மாவட்டம்.
3232 ஆர். பாக்யலட்சுமி, 62 A, காந்திநகர், ஆத்தூர், சேலம் மாவட்டம்.
3233 எஸ். சாயி சுப்ரமணியம், F 13, நியூ குவார்ட்டர்ஸ், மேட்டூர் அணை—1.
3234 எஸ். கமலா, F 13, நியூ குவார்ட்டர்ஸ், மேட்டூர் அணை—1.
3235 தொ. சீ. வெங்கட்ரங்க குப்தா, திடம் 4, வீடு 8, வருமான வரி அலுவலர் குடியிருப்பு, சி. கே. காலனி, புது சித்தாபுதூர், கோவை—44.
3236 மா. வைத்தியநாதன், 13, மேட்டுத் தெரு, திருவாரூர்—2.
3237 எச். மகேஷ், 61—63, வடக்கு வெளிவீதி, மதுரை—1.
3238 ஜி. கிருஷ்ணமூர்த்தி, 14, வடக்கு மாட வீதி, திருக்கோவிலூர்.
3239 எஸ். சிவசுந்தரம், 85, தேசி செட்டி தெரு, காவேரிப்பட்டணம்—635 112.
3240 இரா. சீனிவாசமணிகண்டன், 2, பிள்ளையார் கோயில் தெரு, போரூர், சென்னை—104.
3241 அ. சலீம் ராஜா, 15, கோகலே ரோடு, மதுரை—2.
3242 ஜி. சரவணச் செல்வன், 55, மாரியம்மன் கோயில் தெரு, ஜலகண்டபுரம்.
3243 எம். வெங்கடராமன், 13, மேட்டுத் தெரு, திருவாரூர்.
3244 கி. ராணி, 2 F, 56 A, சர்ச் காலனி, மேட்டூர் அணை—1.
3245 இ. பார்த்திபன், 23, ஆசிரியர் காலனி, மோகனூர் ரோடு, கணேசபுரம்—637 002.
3246 ர. ராஜேந்திரன், 22/700, பெரிய கடை வீதி, கோவை—1
3247 ரா. குமரகுரு, 24 A, மனகாவலன் தெரு, தூத்துக்குடி—1.
3248 எஸ். செந்தில் அழகப்பன், 8B, கற்பக விநாயகர் கோவில் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர்.
3249 என். கிரிதரன், 218, கடைவீதி, பொள்ளாச்சி—1.
3250 F. ஷீலாதேவி, 9, அன்சாரி வீதி (கிழக்கு), உடுமலைப்பேட்டை.
3251 சீ. வெங்கடசுப்பிரமணியன், 351, L. I. G. காலனி, கே. கே. நகர், மதுரை—20.
3252 என். வெங்கடேஷ், 4, மேலப் பொன்னகரம் 3 வது தெரு, மதுரை—10.
3253 மா. ரூபன், 21, ஈரோடு சாலை, வேலாயுதம்பாளையம்—639 117.
3254 ஏ. ஜெயஸ்ரீ, 16, Y பிளாக், பட்டினப்பாக்கம், சென்னை—28.
3255 ஆர். லட்சுமி, 27, 2 வது தெரு, போஸ்டல் காலனி, சென்னை—33.
3256 T. V. Sivakumar, C — 2 — A/4 — B, Janakpuri, New Delhi — 58.
3257 சி. எஸ். குருராகவேந்திரன், 1, தணிகாசலம் தெரு, ஆரணிபாளையம், ஆரணி.
3258 த. சிவகுமார், 143, முனியப்பன் கோவில் தெரு, குச்சிபாளையம், சேலம்—1
3259 ஜெ. கே. ஆர். செந்தில்குமார், 45, கோவில் தெரு, திண்டுக்கல்—1.
3260 எஸ். ராஜாராமன், 342, அய்யர் குளம் வடகரை, புதுக்கோட்டை—2.
3261 மு. கண்ணன், 375 ஏ, இடையர் வீதி, கோவை—1.
3262 பி. ஸ்ரீஹரி, 47, ஜானகிராம் தெரு, சென்னை—33.

(இன்னும் வரும்)


மேவார் ராஜ்யத்தை ஆண்ட மன்னர்களில் மகாராணா பிரதாபசிம்மனுடைய மகத்தான வீரத்தை அறியாதவர் ராஜஸ்தானத்தில் இல்லை. பாலைவனப் பயணிகள் கூட ....
தூக்கம் வரும் வரை பிரதாப சிம்மன் புகழ் பாடுவோம்!
மகாராணா பிரதாப சிம்மன்
கதை: ஆனந்தி படம்: வினு
பிரதாபசிம்மன் கதை அவன் பெரியப்பாவிடமிருந்து தொடங்குகிறது. சூரியவம்சத்தினரான ராஜபுத்திரர்களுள் விக்ரம், மேவார் அரசனானான். அவன் தம்பி உதய்சிங் சிறுவன்.
பன்னாதாயி! தம்பி சரியாகச் சாப்பிட்டானா?
பன்னாதாயி என்ற தாதி உதய்சிங்கை வளர்த்து வந்தாள்.
ஓ! நன்றாகப் படித்தார், நிறைய விளையாடினார், வீரமுடன் வளர்கிறார்.
பன்னாதாயின் மகனும் உதய்சிங்கும் விளையாடுவார்கள்...
ஜெய் விக்ரம்! அந்நியனை உன்னை வெல்லாமல் விட மாட்டேன்!



நள்ளிரவில் ஒரு நாள் ராணி ஓடி வந்தாள்...
பன்னாதாயி! ஆபத்து! பாவி பன்பீர், சதி செய்து என் கணவனைக் கொன்று விட்டான்! அரசாள நினைக்கும் அவன்...
...உதய்சிங்கையும் விட்டு வைக்க மாட்டான். எப்படியாவது இவனைக் காப்பாற்று!
பன்னாதாயி, தன் மகனுக்கு இளவரசனின் உடை அணிவித்து கட்டிலில் கிடத்தினாள்.
பன்பீர் இங்கு உங்களைத் தேடி வரக் கூடாது. போய் விடுங்கள். இளவரசரை நான் காத்திடுவேன். சத்தியம்!
இளவரசனைத் தன் மகன் போல் அழைத்துக் கொண்டு அரண்மனையிலிருந்து வெளியேறினாள்.
போய் வருகிறேன் மகனே! தெய்வம் என்னை மன்னிக்கட்டும்!
ஆண்டுகள் பல சென்றன. வாலிபன் உதய்சிங் உண்மைகளை அறிந்தான்.
அம்மா! உன் தியாகம் இமயம் போன்றது. அது வீணாகக் கூடாது. என் அண்ணனையும் உன் மகனையும் கொன்ற பன்பீரைப் பழி வாங்குவேன்!


டெபுராவிடம் உன்னை அனுப்பி நீ இளவரசன் என்பதை மறவாமல் வீரனாய் வளர ஏற்பாடு செய்தேன். உன் உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டது.... புறப்படு...
உதய்சிங் ஒரு ரகசியக் கூட்டத்துக்குச் சென்றான்.
உதய்! நாங்கள் எல்லோரும் உன் சகோதரர் விக்ரமிடம் விசுவாச முள்ளவர்கள். நியாயமாக பட்டத்துக்கு வரவேண்டியவன் நீதான் என்று உணர்ந்திருப்பவர்கள்.
நீங்கள் வாலிபப் பருவம் அடையக் காத்திருந்தோம்...
பன்னாதாயின் தியாகமும் டெபுரா உன்னை வளர்த்ததும் எங்களுக்குத் தெரியும்....!
உன் தலைமையில் பன்பீரைத் தாக்கத் தயாராயிருக்கிறோம்.
எங்கள் ஒவ்வொருவரிடமும் போர் வீரர்கள் பலர் உண்டு...
மேவார் ராஜ்யத்தின் பிரபுக்களான அவர்களின் ஆதரவு பெற்று பன்பீருடன் சண்டை போட்டு....


மாபெரும் வெற்றி பெற்றான் உதய்சிங். பன்னாதாயி பரவசமடைந்தாள்.
அம்மா! இந்த வெற்றியை உன் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்!
அபிமன்யு போல் யுத்தம் செய்தார் இளவரசர்!
இளவரசரா மன்னர் என்று கூறுங்கள்!
மகாராணா உதய்சிங் நல்லாட்சி நடத்தி மக்களின் நன்மதிப்பைப் பெற்றான். சித்தூர்க் கோட்டையை எதிரிகள் தாக்குதலிலிருந்து காத்தான்.
உதய்சிங் வாழ்க!
வாழ்க!
உதய்சிங்குக்கு நிறைய குழந்தைகள். மூத்தவன் பிரதாப்சிங் தேகபலமும், அறிவு பலமும், ஒழுக்க பலமும் பெற்று தேசபக்தனாயிருந்தான்.
பிரதாப்சிங்குக்கு வாலிப வயதிலேயே அழகில் சிறந்த இளவரசியைத் திருமணம் செய்து வைத்தார் உதய்சிங்.
மகனே, சீக்கிரம் எனக்கு ஒரு பேரனைக் கொடு!
மன்னர்கள் அடிக்கடி யுத்தங்களில் ஆபத்தைச் சந்திப்பவர்கள். எனவே குலம் தழைக்க ஆண் குழந்தை பிறக்க வேண்டுமே என்று கவலைப்படுவார்கள், திருமணத்துக்கு அவசரப்படுவார்கள்.
மகாராணா! தங்களுக்குப் பேரன் பிறந்திருக்கிறான்!



உதய்சிங் கரை காணா மகிழ்ச்சி அடைந்து...
பிரதாப்! நமது வம்சம் தழைக்கப் பிறந்தவனை அமர்சிங் என்று அழைப்போம்!
பேறுக்காக நன்றி செலுத்த ஏக்லிங்ஜி கோவிலுக்குப்போனார் உதய்சிங். பிரதாப் உடன்சென்றான்.
அந்தக் கோவில் அருகே ஒரு பெரிய ஏரி இருந்தது. சுற்றிலும் மலைகள் – கோட்டை போல!
அப்பா! இந்த இடம் இயற்கை அரண் சூழ்ந்ததாய் உள்ளது. எதிரிகளால் சுலபத்தில் நுழைய முடியாது!
ஆமாம்! சித்தூர் அடிக்கடி விரோதிகளால் தாக்கப்படுகிறது.
அந்தப் பிரதேசத்தைச் சுற்றி வந்தபோது ஒரு துறவியைக் கண்டனர். வணங்கினர்.
அரசே! இந்த இடத்தில் உன் நகரை அமைத்துக்கொள். எதிரிகளால் அணுகமுடியாத அற்புத நகரமாய் விளங்கும்!
தன் மனத்தில் உதயமான கருத்தையே துறவியும் கூற, தெய்வ சம்மதம் கிடைத்ததாகக் கருதினார் உதய்சிங். நகர நிர்மாணப்பணி தொடங்கியது...


உதய்சிங் பெயரால் அந்நகரம் உதய்பூர் என்று அழைக்கப்பட்டது.
உதய்பூரை நிர்மாணித்த உதய்சிங் சில காலம் சென்று இறந்து போனார். மாமன்னருக்கு அனைவரும் இறுதி அஞ்சலி செலுத்தினர்.
இதென்ன இளவரசர் பிரதாப் நம்முடன் வருகிறாரே!
அந்திம யாத்திரையில் மூத்த புதல்வன் கலந்து கொள்வது வழக்கமில்லை. நாட்டின் பாதுகாப்பு கருதி அவனுக்கு அப்போதே முடி சூட்டுவார்கள். ஆனால்....
பிரபுக்கள், படைத் தலைவர்கள் குழப்பமடைந்து....
இளவரசர் ஜக்மாலைக் காணவில்லையே?
பிரதாப்! இதற்கென்ன பொருள்?
பிரதாப் மௌனம் காக்க இளவரசன் ஸகர் கூறினான்.
மகாராணா உதய்சிங் தமது பிரிய ராணியின் மகனை ஜக்மால்தான் தன்னை அடுத்துப் பட்டத்துக்கு வரவேண்டும் என்று விரும்பினார்....
உங்களுக்குத் தெரியாதா? அரண்மனையில் முடிசூட்டு விழாவுக்கு ஏற்பாடாகிறது!
ஆ! இதுபெரும் குழப்பம் ஏற்படுத்தும்....


ராவத் கிருஷ்ண சிங் என்ற பெரியவர் கூறினார்... மூத்த மகனும் மகாவீரனுமான பிரதாப்சிங்தான் அக்பரை எதிர்த்து நிற்கும் திறன் படைத்தவன்.
மன்னர் உதய்சிங்கின் இறுதி யாத்திரையில் கலந்து கொண்ட பிரபுக்களும் தளபதிகளும் இரண்டாகப் பிரிந்தனர். சவ அடக்கத்துக்குச் சிலர் செல்ல...
ராவத் கிருஷ்ணசிங் முக்கியமான பிரபுக்கள் தளபதிகளுடன் அரண்மனைக்கு விரைந்தார்...
...சரியான சமயத்துக்குப் போய்ச் சேர்ந்தார்.
இளவரசர் ஜக்மாலுக்கு மறைந்த மன்னரின் விருப்பப்படி முடி சூட்டுகிறோம். சபையினருக்குச் சம்மதம் தானே...?
எங்களுக்குச் சம்மதமில்லை!
மூத்த புதல்வன் பிரதாப்சிங்தான் ராணாவாக வேண்டும். இப்போது மேவாருக்குச் சோதனைக் காலம்...
ஜக்மால் ராணாவானால் நாடே இரண்டு கட்சியாகப் பிளக்கும்!
ஆம்! ஆம்! உட்பூசல் கூடாது!
அவையில் பெரும்பான்மையினர் பிரதாப் சிங்கையே ஆதரிக்க, பிரதாப் மனக் கஷ்டம் அடைந்தான்.
அரசனாக இருந்தால்தான் நாட்டைக் காக்க முடியுமா? நான் அரியாசனத்துக்கு ஏங்கவில்லை. என் வாள் என்றும் மேவாரின் மேன்மைக்கே பயனாகும்!


ஜக்மால் மனம் வருந்தி...
அண்ணா! நான் தவறு ஏதும் செய்யவில்லை... தந்தையின் விருப்பப்படி நடந்து கொண்டேன்.
ராஜமாதா வந்தார். அனைவரும் அவர் கருத்தைக் கேட்க...
மறைந்த மன்னரின் விருப்பத்தை மதிக்க வேண்டியது நம் கடமை. ஆனால் நாட்டு நலன் கருதி ஜக்மால் தானே தன் தமையனுக்கு சிம்மாசனத்தை அளிக்கலாமே...!
ஜக்மால் மகிழ்ச்சியோடு அவ்வாறே செய்ய...
மாவீரரும் நற்குணசீலரும் சொல்திறன் மிக்க வருமான பிரதாப் சிங்குக்கு மேவார் மன்னராக முடி சூட்டுகிறேன்.
வாழ்க! வாழ்க!
சிலகாலம் சென்று அக்பர் பாதுஷா தமது பாதபூர் சிக்ரீ அரண்மனையில்...
ஒன்று, மேவார் ராணாவை நண்பனாக்கிக் கொண்டு அடிபணியச் செய்ய வேண்டும்; அல்லது யுத்தத்தில் தோற்கடித்து அடிமையாக்க வேண்டும்... இல்லாவிட்டால் நான் சக்கரவர்த்தியாக முடியாது.!


முதல் யோசனையை பரீட்சித்துப் பார்த்து விடத் தீர்மானித்த அக்பர்....
யார் அங்கே! மான்சிங்கை நான் பார்க்க விரும்புவதாகப் போய்ச் சொல்லு!
மான்சிங்கின் அத்தையை அக்பர் மணந்து கொண்டு அதன் மூலம் அவனையும் அவனுடைய ஆம்பர் கோட்டையையும் தம் வசமாக்கிக் கொண்டிருந்தார். அவன் வந்ததும்...
மான்சிங்! பிரதாப்சிங்கை நண்பனாகப் பெற எனக்கு நீதான் உதவ வேண்டும். உன்னால் முடியாத காரியமில்லை இது!
மான்சிங் சென்றதும்...
பிரதாப்சிங்கை முதலில் நண்பனாகப் பெறுவோம். நாளடைவில் இந்த மான் சிங்கைப் போலவே அவனையும் அடிமைப் படுத்திவிடலாம்!
இதற்கிடையில்... மேவார் மலைப் பிரதேசப் பழங்குடியினரை நண்பர்களாக்கிக் கொண்டார் பிரதாப்....
மேவாரின் மானம் காக்கக் கடைசி சொட்டு ரத்தம் உள்ளவரை போராடுவோம்.
சுதந்திரம் நம் பிறப்புரிமை. அதை அக்பரால் கூடப் பறிக்க முடியாது!
ஒரு நாள் ஓர் அராபிய வியாபாரி பிரதாப்சிங்கைக் காண வந்தான்.
மகாராணா! இந்த இரு குதிரைகளையும் உங்களுக்காகவே பழக்கிக் கொண்டு வந்தேன்.



சேதக், நாடக் ஆகிய குதிரைகள் இரண்டும் பல வித்தைகளைச் செய்து காட்டின.
பிரதாப் வியந்து பார்த்துக் கொண்டிருக்கும் போதே நாடக் வேலை தடுக்கி விழுந்து விட்டது.
ஐயோ பாவம்!
நாடக்கின் கால் முறிந்து போன போதிலும் இரு குதிரைகளையுமே பொற்காசு கொடுத்து வாங்கிக் கொண்டார் பிரதாப்.
வாயில்லா ஜீவன்களிடம் கூட உங்கள் அன்பும் பரிவும் என்னைப் பிரமிக்க வைக்கிறது!
சேதக் குதிரை பிரதாபசிம்மனின் உற்ற நண்பனாயிற்று. அதன் புகழ் நாடெங்கும் பரவியது. ஒரு நாள்...
மகாராணா! ஆம்பர் கோட்டை இளவரசன் மான்சிங் அக்பரின் தூதனாக வந்திருக்கிறார்...
சே! இப்படி அக்பரிடம் கைகட்டிச் சேவகம் செய்யும் நிலைக்குத் தாழ்ந்து விட்டானே மான்சிங்!
உதயஸாகர் ஏரிக் கரையில் விருந்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்!


உதயசாகர் ஏரிக் கரையில்...
ஆம்பர் இளவரசே! வருக! வருக!
அமர்சிங்! ராணா பிரதாப் எங்கே?
அவருக்கு உடல் நலம் சரியில்லை. உங்களை உபசரிக்க என்னை அனுப்பினர்....
... விருந்துண்ண வாருங்கள்.
ஆகா! என்னை அவமானப் படுத்தவேண்டும் என்றே பிரதாப் இப்படி செய்திருக்கிறான்!
கோபத்தோடு திரும்பிச் சென்றான் மான்சிங்...
பிரதாப்பின் வியாதிக்கு என்ன மருந்து என்பது எனக்குத் தெரியும்!
அமர்சிங்கும் மற்றவர்களும் பிரதாபிடம் வந்து நடந்ததைக் கூற....
ஆகா! நான் வெகுகாலமாக எதிர் பார்த்துக் கொண்டிருந்த யுத்தம் நெருங்குகிறது. அக்பரின் படைகளையும் அவனுடைய கைக்கூலிகளான மான்சிங் போன்றவர்களின் சேனையையும் எங்கே சந்திக்க வேண்டும் என்பதைக்கூடத் திட்டமிட்டிருக்கிறேன்!


அக்பரின் ஆலோசனை மண்டபம். ராஜா தோடர்மாலை அனுப்பி பிரதாப் சிங்கின் நட்பைப் பெற முயன்ற அக்பரின் இரண்டாவது சூழ்ச்சியும் தோல்வி காண....
இனி யுத்தம் தான்!
பிரதாப்பை அடக்கியே ஆக வேண்டும்!
படை கிளம்பட்டும்!
பிரதாப்பின் திட்டப்படி அவனது ரஜபுத்ர வீரர்கள் ஹல்தி காடி என்ற மலைக்கணவாயின் பின்னால் யுத்தத்துக்குத் தயாரானார்கள்.
ஒற்றர் தலைவரே! எதிரியின் படைகள் பற்றி என்ன செய்தி?
நாம் யுத்தத்துக்குச் சித்தமாயிருப்பது அவர்களுக்குத் தெரியவில்லை. மான் சிங் வேட்டையாடப் போயிருக்கிறார். எதிரிப் படைகள் தலைவனின்றிக் கட்டுப்பாடு தளர்ந்து உள்ளன.
உடனே தாக்கினால் எதிரிகளைச் சின்னாபின்னப்படுத்தி விடலாம்.
பிரதாப் சிங் தளபதியின் யோசனையை ஏற்கவில்லை.
நரியைப்போல் தாக்குவது வீரமாகுமா? நாம் சிம்மங்கள். உரிய காலத்துக்குக் காத்திருப்போம்!
அந்த நேரம் வந்தபோது போர் மிகவும் கடுமையாக இருந்தது. பிரதாப் சிங்கின் பட்டத்து யானை எதிரிகள் வசப்பட்டது. கோபத்துடன் சேதக்கை பிரதாப் சிங் தூண்டி விட...


சேதக், மான்சிங்கின் யானை மீது பாய்ந்தது. யானையின் துதிக் கையில் இருந்த குத்தீட்டி குதிரையின் உடலைத் தாக்க பிரதாப்பின் ஈட்டி மான்சிங்கை நெருங்கியது.
மான்சிங் இறந்து விட்டதாக எண்ணி வேறு திக்கில் திரும்பினார் பிரதாப். ஆனால் மான்சிங் கடைசி வினாடியில் பதுங்கிப் பிழைத்து விட்டிருந்தான்.
அக்பரின் தளபதி அஸிப்கானிடம் ஒரு முகலாய வீரன் வந்து...
நமது படையில் உள்ள ராஜபுத்ர வீரர்களுக்கும் எதிரி படையிலுள்ள ராஜபுத்திரர்களுக்கும் வித்தியாசம் தெரிய வில்லையே...
அதனால் என்ன...? எந்த ராஜபுத்திரனைக் கொன்றாலும் அது அக்பரின் வெற்றியே! ஹா! ஹா! ஹா!
யுத்தம் உக்கிரமடைந்து பிரதாப் சிங்கும் சேதக்கும் பல காயங்களை அடைந்தனர். தளபதி கூறினார்:
மகாராணா! வெற்றி உறுதி யில்லை. நாட்டுக் காக நீங்கள் வாழ வேண்டும். யுத்த களத்தி லிருந்து உடனே போய் விடுங் கள்!


தலைவன் நிலை உணர்ந்து போர்க்களத்திலிருந்து ஓடியது சேதக்.
சேதக்! நாளை பாய்வதற்காக இன்று நாம் பதுங்குவது தவறல்ல; கோழைத்தனமும் ஆகாது!
மன்னனை பத்திரமான இடத்தில் சேர்ப்பித்த திருப்தியோடு சேதக் உயிரை விட்டது.
சேதக்! உன்னைப் போன்ற கடமை வீரனை ஆறறிவு படைத்த மனிதர்களிடையே கூடக் காண்பதரிது!
ஹல்திகாடி யுத்தத்தில் ராணா பிரதாப் செய்த சாகசங்களைப் புகழ்ந்து அக்பரின் கவிகளே அவர் அவையிலேயே பாடினார்கள்!...
ஆனால் அதே நேரத்தில் மலைப் பகுதிகளில் மனைவி மக்களுடன் அலைந்து திரிந்தார் பிரதாப்.
அரண்மனையில் அறுசுவை உணவு அருந்த வேண்டியவர்கள் இப்படி புல்லரிசி ரொட்டி தின்னும்படி ஆயிற்றே!
நம் புதல்வர்களை, நண்பர்களை, உறவினர்களைப் போர்க்களத்தில் இழந்தோம். அப்போதெல்லாம் 'இதற்குத்தான் பிறந்தான் ராஜபுத்திரன்' என்று சொன்னீர்களே... இப்போது ஏன் கலக்கம்...?
நீங்கள் நாடோடிகள்போல் அலைவதை என்னால் தாங்க முடியவில்லை. அக்பருடன் சமாதானமாகப் போகட்டுமா?
அப்பா! சுதந்திரத்துக்காக இத்தனை காலம் போராடிவிட்டு இப்போது அடிமைப்படுவதா? அதைவிட ராஜபுத்திர வீரர்கள் வளையல் அணியலாம்!



மகளின் வார்த்தைகள்
பிரதாப் சிங்குக்கு
ஆறுதலையும் துணி
வையும் தந்தன.
உன்னை மகளாக
அடைந்தது குறித்துப்
பெருமைப்படுகிறேன்!
அப்பா! அதோ
பாருங்கள்!
தூரத்தில்
தெரிந்த வீரன்
நெருங்கி வந்தான்.
பிரதம மந்திரி
பாமாஷா!
மகாராஜா! மால்
வாவுக்குப் போய்
வேண்டிய நிதி
திரட்டி யிருக்கி
றேன். கவலை
வேண்டாம்!
புத்துணர்வு பெற்ற பிரதாப்
படை பலம் பெருக்கினார்.
இழந்த கோட்டைகளை
மீட்கும் பணியில் இறங்கினார்...
மேவார் வாழ்க!
ராஜபுத்திரர் குலம் வெல்க!
முதலில் சாவந்த்
கோட்டை வசப்பட
அதன் மீது சூரியக்
கொடி பறந்தது...
மகனை அழைத்தார்
பிரதாப்...
அமர்சிங்!
ஆஜ்மீரில்
அப்துல் ரஹீம்
சுபேதார்
ஆகியிருக்கிறான்.
அஜ்மீரைப்
பிடிக்கும்
பொறுப்பு
உன்னுடையது.
அஜ்மீர் கோட்டை மட்டுமின்றி
அதன் அளவற்ற செல்வமும்
அமர்சிங் வசப்பட்டது.
சூரியக்
கொடி
வெல்க!
ராணா
பிரதாப்
வாழ்க!
வெற்றி
மிதப்பில்
பிரதாப்சிங்கிடம்
திரும்பினான்
மகன்
அமர்சிங்...
தந்தையே!
கோட்டையையும்
அதன் செல்வத்
தையும் கைப்
பற்றியதோடு
அப்துல் ரஹீமின்
மனைவியையும்
சிறைபிடித்து
வந்திருக்கிறேன்...!



ஆ! மகனே என்ன காரியம் செய்து விட்டாய்! பிறன் மனைவியைத் தாயாக எண்ண வேண்டாமா!
அப்பா! என்னை மன்னியுங்கள்!
அம்மா! என் மகன் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும். தங்களைத் தக்க துணையுடன் அனுப்பி வைக்கிறேன்...
பிறகு பல ஆண்டுகள் சுதந்திர மன்னனாக வாழ்ந்தார் பிரதாபசிம்மன். அவர் இறுதிக் காலம் நெருங்கியது... .... மந்திரி கூறினார்:
உங்கள் வீரத்தை மொகலாயர்களே போற்றுகிறார்கள்!
ஒரே குறைதான். சித்தூரை மீட்க முடியவில்லை...
அமைச்சர்கள், தளபதிகள், இளவரசர்கள் கூடியிருக்கப் பிரதாப் விடை பெற்றார்....
ஒற்றுமையாய் இருங்கள் எனக்குப் பின் அக்பருடன் சமாதானம் செய்து கொள்ளாதீர்கள். சுதந்திரம் உயிரினும் இனிது. மறவாதீர்கள்!
மகாராணா! அவ்வாறே சத்தியம் செய்து தருகிறோம்!
மகாராணா பிரதாப்சிங் பாரதத்தின் தலைசிறந்த வீரர்களுள் ஒருவராக வாழ்ந்தார். நாற்பதாண்டுகள் முகலாயப் பேரரசை எதிர்த்துப் போராடினார். அவருடைய மாசற்ற வீரம் என்றென்றும் நமக்கு வழிகாட்டும். ஊக்கம் தரும்.

# பிருந்தாவனம்

## அரசர் செய்தது சரியா?



''மகராஜா, நான் உளவாளியைக் கண்டுபிடிக்கப் போனபோது, என் வலது கையை இழந்தேன்'' என்றான் ஒரு வீரன்.

உடனே அரசன் அவனது நாட்டுப் பற்றைப் பாராட்டி, அவனுக்கு 10 ஏக்கர் நிலம் கொடுக்க உத்தரவிட்டார். ''அரசே, நான் ஒரு கையை இழந்தேன். 10 ஏக்கர் தந்தீர்கள். இரு கைகளையும் இழந்தால் 20 ஏக்கர் தருவீர்களல்லவா?'' என்று கேட்டான்.

''நிச்சயமாக,'' என்றார் அரசர். உடனே அவன் தன் உடைவாளை உருவி, இடது கையையும் வெட்டிக் கொண்டான். ஆனால் அரசனோ அவனுக்கு நிலம் கொடுக்கவில்லை. கோபம்தான் கொண்டார். அரசர் செய்தது சரியா?

விடை: இது நம்பக் கூடிய கதையல்ல. ஒரு கையை இழந்தவனால், மற்றொரு கையை எப்படி வெட்டிக் கொள்ள முடியும்?

— ஆர். சுந்தர் (644), விக்கிரபாண்டியம்.



## ஒரே மாதம், ஒரே தேதி

பிறந்த நாளும், இறந்த நாளும் ஒன்றாக அமைவது மிகவும் அபூர்வம். ஷேக்ஸ்பியர் தனது 52 வது வயதில் இறந்தார்.

அவர் பிறந்தது 23.4.1564

அவர் இறந்தது 23.4.1616

— எஸ். ஜெயஸ்ரீ (1254), திருச்சி—14.

## கலப்படம்

எது எதையெல்லாமோ எதில் எதிலோ கலக்கிறார்களே, இந்தக் கலப்படம் எப்படி?

Aணி, Cகரம், Eரும்பாலை, Gலேபி, Kள்வி, Lலாரும், Mமாத்திரம், Oடு, Pத்தனை, Iனாவரம், Iன்மம், Rர்மோனியம்.

— எம். விஜ்யா (6061), ஜாகீர் அம்மாப்பாளையம்.

# Aணி


## அந்தாதி

அந்தாதிப் பாடலைப் போல, ஒரு பெயரின் கடைசிச் சொல், அடுத்த பெயரின் முதல் சொல்லாக வரும்படி கீழே தந்திருக்கிறேன். படியுங்கள் :

அன்புமணி,
மணி வேலு,
வேலுச் சாமி,
சாமித் துரை,
துரை ராஜ்,
ராஜ் மோகன்,
மோகன் ராம்,
ராம் குமார்,
குமர குரு,
குரு சாமி,
சாமிக் கண்ணு.

இதேபோல், பெண்களின் பெயர்களை வைத்து மற்றவர்கள் முயன்று பார்க்கலாமே!

— சு. பிரபா லோக நாயகி (5307)
தர்மபுரி.





## எதற்கு ?


"மணி 2 ஆகிறது. இன்னும் அரை மணி நேரம்தான் இருக்கிறது?"

"எதற்கு?"

"2.30 ஆவதற்கு."

— எஸ். ஷம்சுதீன் (8817),
குன்னூர்.






## முதல் வேலை நிறுத்தம்

இந்தியாவில் நடைபெற்ற முதல் வேலை நிறுத்தம் தமிழ்நாட்டில்தான். தூத்துக்குடி கோரல் மில் தொழிலாளர்கள் 1908 ஆம் ஆண்டு நடத்தினர். அந்தத் தொழிற்சங்கத்தை நிறுவி நடத்தியவர் வ. உ. சிதம்பரம்பிள்ளை.

ஆதாரம்: 'தமிழாய்வு திட்பமும் நுட்பமும்'

— தகவல்: க. ராஜா (8532),
ஸ்ரீவில்லிபுத்தூர்.



## பிரகலாதன் கதை

அமெரிக்க விஞ்ஞானிகள் இப்போது ஒரு புது உண்மையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

'கருவில் இருக்கும் குழந்தையால் எதையும் நன்றாகக் கேட்க முடிகிறது. கேட்பதை நன்றாக அதன் மனத்தில் பதித்துக் கொள்கிறது''

நம்புராணத்தில், 'பிரகலாதன் கர்ப்பத்தில் இருக்கும்போது, நாரதர் தெய்வபக்தியைப்போதித்தார்' என்று வருகிறதே, அது உண்மையானதே, நம்பத் தகுந்ததே என்பது இப்போது தெரிகிறது.

— சௌ. கருணாகரன (883),
சேலம்—1.

## பாத்திரம் அறிந்து...

"தம்பி, ரெண்டு நாளாச் சாப்பிடல்லே, அம்மாகிட்டே சொல்லிக் கொஞ்சம்சோறுவாங்கிப்போடப்பா புண்ணியம்."

"உன் கையிலே இருக்கிறது பித்தளைப் பாத்திரமா? அலுமினியப் பாத்திரமா?"

"அதை ஏன் தம்பி கேட்கிறாய்?"

"இல்லே! பாத்திரம் அறிந்து பிச்சை இடு'ன்னு பாடத்திலே இருக்குது. அதனாலேதான் கேட்டேன்."


— சி. பாலச்சந்தர் (6981), சென்னை — 93.



---

## கைத்தட்டல் எதற்கு?

நாங்கள் சமீபத்தில் எங்கள் பள்ளியிலிருந்து சுற்றுலாச் சென்றோம். அப்பொழுது உடுமலைப்பேட்டைக்கு



அருகிலுள்ள முதலைப் பண்ணைக்கும் போனோம். அங்கே 'முதலைக்கு அருகில் கைநீட்டாதீர்' என்று எழுதி வைக்கப்பட்டிருந்தது.

முதலையைப் பார்த்துவிட்டு, பஸ்ஸில் ஏறப் போகும்போது எங்கள் இயற்பியல் ஆசிரியர், "எல்லாரும் ஒரு முறை கை தட்டுங்கள்" என்றார். "ஏன்?" என்று ஒரு மாணவன் கேட்டான். "யாருடைய கையையாவது முதலை கடித்துவிட்டதா?" என்று பார்க்கத்தான்" என்றார், சிரித்துக்கொண்டே. அப்பொழுது மாணவர்கள் சிரித்த சிரிப்பொலி அந்த முதலைகளையே நடுங்க வைத்திருக்கும்!

— ந. பொன்ராஜ் (3176), கமுதி.

---

## நீயும் நானும்

ஆணவம்: நான் உன்னுள் இருக்க இடம் தருவாயானால், நீ முற்றிலும் அழிவாய்.

கல்வி: நீ சிறந்து விளங்க வேண்டுமானால், என்னை முற்றிலும் உணர்ந்து என் வழி நில்.




உண்மை: 'உண்மையே கூறுகிறேன்' என்று அழுத்திச் சொல்பவன் என் மதிப்பைக் குறைக்கிறான்.

கோபம்: என்னைக்காட்டிலும் பகைவன் உனக்கு இருக்க முடியாது.

செல்வம்: என்னை நல்ல வழியில் சம்பாதித்து நல்ல வழியில் செலவிடுபவனை நான் உலகிலே மேன்மைப்படுத்துவேன்.

சோம்பல்: நான் உன்னிடம் இருந்தால், இன்பம் போல் தோன்றும். ஆனால் நான் உன்னை அணு அணுவாக அழித்துக் கொண்டே இருப்பேன்.

முயற்சி: என்னை நீ கடைப்பிடித்தால், நான் உன்னை உயர்த்துவேன்.

— ஆர். விஜய் (10142), மன்னார்குடி.

# பெரியோரைப் பெற்றெடுத்தவர்கள்

புகழ் பெற்ற மனிதர்களைப் பெற்றெடுத்த தாய்மார்களின் பெயர்களைத் தெரிந்து கொள்வோமா?

வீர சிவாஜி — ஜீஜாபாய்
மகாத்மா காந்தி — புத்லிபாய்
ராஜாஜி — சிங்காரம்மாள்
இராமலிங்க அடிகள் — சின்னம்மையார்
திரு. வி. கலியாணசுந்தரனார் — சின்னம்மையார்
வ.உ. சிதம்பரனார் — பரமாயி அம்மாள்
மகாகவி பாரதியார் — லட்சுமி அம்மாள்
காமராஜர் — சிவகாமி அம்மையார்
ஆறுமுக நாவலர் — சிவகாமி அம்மையார்



கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை — ஆதிலட்சுமி அம்மையார்
ஜவாஹர்லால் நேரு — சொரூப ராணி.

— ஏ. ஆர். ஆனந்த் (421), காரைக்குடி.

# விடை என்ன?

1. பொங்கும் குளத்தில் புதுப் பெண் குளிப்பாள். அவள் யார்?
2. மழைநீர்நிரப்பாத குளம்; மக்கள் வெட்டாத குளம். அது என்ன?
3. கடும் வெயிலில் கருந்தாமரை மலரும். அது என்ன?
4. நாள் ஒன்று போனால், பல் ஒன்று உதிரும். அது என்ன?
5. தண்ணீரில் துவைக்காமல் தானே வெளுத்த வெள்ளை. அது என்ன?

விடை: 1. அப்பளம், 2. இளநீர், 3. குடை, 4. தினசரி காலண்டர், 5. நரைமுடி.

— கே. பி. சுதா (4739), மேட்டூர் அணை.





# பைத்தியத்தின் பதில்!

ஸ்டாண்ட் போட்ட சைக்கிள் ஒவ்வொன்றிலும் ஒரு பைத்தியத்தை உட்கார வைத்தார்கள். ஒவ்வொரு பைத்தியமும் பெடலிலே காலை வைத்துச் சுற்றிக் கொண்டே இருந்தது. ஸ்டாண்ட் போட்டிருந்ததால், சைக்கிளும் நகரவில்லை. ஒரே ஒரு பைத்தியம் மட்டும் பெடலை மிதிக்காமல் சும்மா உட்கார்ந்திருந்தது. அதற்குப் பைத்தியம் தெளிந்துவிட்டது என்று நினைத்து, "நீ ஏன் பெடலைச் சுற்றவில்லை?" என்று ஒரு டாக்டர் கேட்டார்.

"நான் ஏன் சுற்ற வேண்டும்? அது தான் பள்ளமான பகுதியில் தானாக வேகமாக ஓடுகிறதே!" என்றது அந்தப் பைத்தியம்!

— தா. சிந்துகுமார் (4764), திருவட்டார்.




## 3. ஆசை வரும் முன்னே, அழகை வரும் பின்னே

எங்கே போனாள் வீராயி....:?
எப்படிப் போனாள், வீராயி....?

கொடூரமாகச் சீறிப் பாயும் சூறாவளிக் காற்றில் ஆடும் மாடும், மரமும் செடியும் கொடியும் துரும்பாய்ப் பறக்குமாமே....?

அந்த மாதிரி —

கோரப் புயலாக வீறிட்டுத் தாவியோடிய பயங்கரக் காட்டெருதுகளோடு சிக்கிச் சிதைந்து சீரழிந்து....

திகிலும் திணறலுமாகத் திசைக்கு ஒருவராக ஓடினார்கள். "வீராயி! வீராயி!" எனக் கதறலும் உதறலுமாக அலைந்து திரிந்தார்கள். காட்டெருதுகள் திரண்டோடிய திசையில் சற்றுத் தூரம் ஓடிக் களைத்துப் போய், கண்ணீரும், கவலையுமாகத் திரும்பி வந்தான் ஆதி. புளிய மரத்தின் பின்னால் வந்ததும் "டேய்! டேய்! இதோடா...! தோடா, வீராயி!" என்று உள்ளங் குதூகலிக்க, உணர்ச்சி கொப்புளிக்க வீறிட்டுக் கூவினான்

மறு நொடி —

எல்லாரும் ஓடோடி வந்தார்கள்.

ஆசையும் ஆவலுமாகப் பார்த்தார்கள்.

புளிய மரத்தின் அடியில் —

சிறு பொந்து.

அந்தப் பொந்துக்குள்ளே —

கல்லின் குடைவுக்குள் செதுக்கிய சிலை மாதிரி —

புளிய மரத்தின் அடியிலுள்ள சின்னஞ் சிறு பொந்துக்குள்ளே, சுருண்டு முடங்கி மூர்ச்சித்துக் கிடந்தாள் வீராயி!

அடுத்த நொடி —

ஆதியும்பீமனும்வீராயியைப்பொந்துக்குள்ளிருந்து பூப்போல அள்ளி எடுத்தார்கள். புளிய மரத்தின் குளுகுளுத்த நிழலில், ஜில்லென்ற மணலில் கிடத்தினார்கள். ஒருவன், வீராயியின் முகத்தைத் துடைத்தான். இன்னொருவன், அவளின் கால் பாதங்களைச் சூடு கிளப்பித் தேய்த்....

அதற்குள் —

"வீராயி மெல்ல அசைந்தாள், நெளிந்தாள், கண் இமைகளைப் பைய்யச் சிலிர்த்தவாறு திறந்தாள், பார்த்தாள்.

ஆதி
பீமன்
வால்மீகி
நாகன்....

எல்லாரையும் பார்த்ததும் —

சட்டெனத் துள்ளி எழுந்தாள். அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டே "அந்தக் காட்டுப்பிசாசுகள் எங்கே?" எனப் பரபரப்புடன் கேட்டாள், வீராயி.

"அந்த வெறி பிடித்த காட்டெருதுகள் கடும் புயலாகப் பாய்ந்தோடி மறைந்து போயின.....! நீ எழுந்திரு. போகலாம்....." என்று அன்பாகச் சொன்னான் ஆதி.

"நாங்கள் எல்லாரும் மரத்தில் ஏறிக் கொண்டோமே.....! நீயும் மரத்தில் ஏறிக் கொள்வதுதானே.....?"

எனப் பரிவுடன் கேட்டான், வால்மீகி.

வீராயி, மண்ணிலிருந்து எழுந்தாள். கயிற்றுச் சுருணை, தடி, அரிவாள், யாவற்றையும் எடுத்துக் கொண்டு நடந்தாள். ''மரத்தில் ஏறினேன். ஆனால் பிடி தவறி நழுவி, மரத்தடியில் விழுந்துவிட்டேன். அதற்குள்.... காட்டெருதுகள் வந்துவிடவே, மரத்தடியிலுள்ள பொந்துக்குள் அடங்கி ஒடுங்கி, அதிர்ச்சியில் மூர்ச்சித்துப்போனேன்! ஹூம்.....! எப்படியோ அந்தப் பயங்கரக் காட்டெருதுகளிடமிருந்து எல்லாரும் உயிர் பிழைத்துக் கொண்டோமே....! எல்லாம் கடவுள் செயல்!'' என்றவாறே நடந்தாள்.

கணகணவெனக் கனல் பொழிகிற சூரிய கோளம், நடுவானை விட்டுப் பையப் பைய மேற்கு நோக்கி நழுவிக் கொண்டிருந்தது.

அக்கினி மலையை நோக்கி, வெயிலிலும் நிழலிலுமாக விறுவிறுப்பும் சுறுசுறுப்புமாக நடந்து கொண்டிருந்தார்கள், அவர்கள்.

சில விநாடிகளுக்குப் பிறகு —

''அக்கினி மலை இன்னும் எவ்வளவு தூரம் இருக்கும்?'' வெய்யிலின் கானலுக்கு அப்பாலே தோன்றும் அக்கினி மலையைப் பார்த்தபடியே கேட்டான், நாகன்.

''இதுவரையில்....மூன்றுமூன்றரை கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்து வந்திருக்கிறோம். இன்னும் ஏழெட்டு கிலோ மீட்டர் தொலைவைக் கடந்து போனால், அக்கினி மலையை அடைந்து விடலாம்....'' என்றான் ஆதி.

''இன்று சாயங்காலத்துக்குள் அங்கே போய்விட முடியுமா?'' முகத்தில் துளிர்த்துச் சொட்டுகிற வியர்வைத் துளிகளைப் புறங்கையால் துடைத்தவாறே கேட்டான், பீமன்.

''ஒரு கிலோ மீட்டர் தூரத்தை, ஒரு சிறுத்தைப் புலி, ஐம்பது, ஐம்பத்தைந்து விநாடிகளில் பாய்ந்தோடிக் கடந்துவிடும். ஒரு கிலோ மீட்டர் தூரத்தை, ஒரு பந்தயக் குதிரை அறுபத்தைந்து, எழுபது விநாடிகளில் பறந்தோடிக் கடந்துவிடும். ஆனால்.... நாம் ஒரு கிலோ மீட்டர் தூரத்தைக் கடப்பதற்கு எண்பது, எண்பத்தைந்து நிமிஷங்களுக்கு மேலாகின்றதே!'' என்றான் ஆதி.

''ஓ....! அப்படியா!'' என்றாள் வீராயி.

''பராக்குப் பார்க்காமல் நடந்தால்.... சீக்கிரமாகப் போய்விடலாம்'' என்றான் வால்மீகி.

வீராயி சிரித்தாள். சிரிப்பும் குறும்புமாகச் சொன்னாள். ''அழகும், அற்புதமும், ஆபத்தும் சூழ்ந்து நிறைந்திருக்கிற இந்தக் கானகத்தில், பராக்குப் பார்க்காமல் நடப்பதற்குக் குருடனால்தான் முடியும்....!''

''இந்தப் பயங்கரக் காட்டுக்குள்ளே நாம் எல்லாரும் பொழுது போக்குவதற்காக வரவில்லை. வேகமாக நடந்து வாருங்கள்!'' என்றவாறே எல்லாருக்கும் முன்னே விரைந்து நடந்தான், ஆதி. எல்லாரும் அவனைத் தொடர்ந்து சுருக்காக நடந்தார்கள்.

சற்று நேரத்திற்குள் —

சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரத்தை, வேகம் வேகமாக நடந்து கடந்து சென்று கொண்டிருக்கையில் —

வால்மீகி, சடக்கென நின்றான்.

''என்னடா நிற்கிறாய்?'' எனக் கேட்டவாறே அங்கும் இங்குமாகப் பார்த்தான் நாகன்.

''அதோ, எதிரில் காணும் மரங்களுக்கு இடையே....'' என்றவாறே சுறுசுறுப்பாகத் தோளில் கிடக்கிற வில்லையும், முதுகில் தொங்குகிற தோல் பையிலிருந்து ஓர் அம்பையும் உருவி எடுத்தான் வால்மீகி.

அவன் சுட்டிக்காட்டுகிற இடத்தை— எல்லாரும் கவனித்தார்கள்.

மரங்களுக்கு இடையில் —

வடக்கிலிருந்து தெற்காக வளைந்து நெளிந்து தவழ்ந்து கொண்டிருந்தது, ஒரு நீரோடை. அதில் தன்னந்தனியாக மூழ்கிப் பாய்ந்து துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது, ஒரு நரி குள்ள நரி!

அதைக் கண்டதும் —

வீராயி மெல்லச் சிரித்தாள்.


''ஹூம்! தன்னந்தனியே சந்தோஷமாகக் குளித்து விளையாடிக் கொண்டிருக்கிற குள்ள நரியை, எதற்காகக் கொல்ல வேண்டும்? வேண்டாம். வில்லைத் தோளில் மாட்டிக் கொள். அம்பைப் பையில் போட்டுக் கொள்'' என்று வால்மீகியைப் பார்த்துப் புன்சிரிப்புடன் சொன்னான் ஆதி.

## புரிகிறதா?

மநாமன் மவிமருமம்மபி.மபமடிமப் மபமது மகோமகுமலமம். மநீமங் மகமள்.....?

இது என்ன வாக்கியம்? புரிகிறதா? புரியவில்லையென்றால், 'ம' என்றஎழுத்துக்களை அடித்துவிட்டுப் படியுங்கள்; புரியும்.

— எஸ். சிவராஜ் (22), மன்னார்குடி.



"அக்கினிக்கனல்பொங்கும்இந்தக் கொடிய வெயிலில், தண்ணீர்த் தாகத்தினால் நாவு வறண்டு, நெஞ்சம் சுருண்டு உயிர் மருண்டு தவிக்கிற நேரத்தில், இதோ, தண்ணீர்! எனச் சாடைகாட்டியகுள்ள நரிக்கு, உள்ளங் குளிர நன்றி சொல்லாமல்...." என்று வால்மீகியைப் பார்த்துக் குறும்பாகச் சொல்லிக் கொண்டே, நீரோடையை நோக்கித் தாவியோடினான் பீமன். அவனைத் தாவிப் பிடிக்கிற-மாதிரி, எல்லாரும் பாய்ந்தோடினார்கள்.. தப தபவெனத் துள்ளிக் குதித்தோடி வருகிறவர்களைக் கண்டதும் —

ஓநாயைக் கண்ட முயல் மாதிரி —

பூனையைக் கண்ட எலி மாதிரி —

ஒரு துள்ளுத் துள்ளி, நீரோடையிலிருந்து தாவிக் குதித்துப் பாய்ந்தோடிக் கண நேரத்திற்குள் கண்ணுக்குப்புலப்படாமல்மறைந்துபோயிற்று. நரி!

அப்புறம் —

நரி செய்த வேலையை இவர்கள் செய்யத்தொடங்கினார்கள். அதாவது, நீரோடையில் பாய்ந்து விழுந்து, மூழ்கிக் குளித்துக் குதூகலமாகத் துள்ளி விளை....

பத்துப் பதினைந்து நிமிஷங்களுக்குள் —

"உம்....ம்.... புறப்படுங்கள்.... புறப்படுங்கள்" என்று துருதுருத்தவாறே நீரோடையிலிருந்து வெளியேறினான் ஆதி. உடனே எல்லாரும் ஏக்கமும் தவிப்புமாக அரைகுறை மனத்துடன் நீரோடையை விட்டுக் கரையேறி நடந்தார்கள்.... நடந்தார்கள். அப்படியும் இப்படியுமாகப் பராக்குப் பார்த்தவாறே நடந்து கொண்டிருக்கையில்....

திடீரென்று —

மந்தையிலிருந்து பிரிந்தோடுகிற ஆடு மாதிரி —

பண்ணையிலிருந்து பறந்தோடுகிற கோழி மாதிரி —

நண்பர்களை விட்டுக் குபீரெனத் தாவியோடினான். கூப்பிடு தூரத்தில் பச்சைப் பசேலென அடர்ந்து சூழ்ந்து காணும் மரங்களை நோக்கி விரைந்தோடினான். தாழ்ந்து பரந்து செழித்து வளர்ந்திருக்கிற மாமரங்களில் கொழுத்துப் பழுத்துத் தொங்குகிற பொன்னிற மாம்பழங்களை நோக்கிப் பாய்ந்தான். ஓரிரு மாம்பழங்களை ஆசையும் ஆவலுமாகப் பறித்தான் பீமன்.

மறுநொடி —


"அய்யோ....!" என்று வீறிட்டு அலறினான்!

அவன் அலறுவதைக் கேட்டதும்—திகீரென்றது!

"என்னடா....? என்னடா....?" என்று நெஞ்சமதிரக் கூவியவாறே, எல்லாரும் துள்ளிக் குதித்து ஓடினார்கள், பார்த்தார்கள்.

மாமரங்களிலிருந்து உதிரும் பழங்கள், மண்ணில் அழுகிப் புழுத்துப் புழுத்து—புழுத்துநெளிகிறபுழுக்களைக் கொத்தித் தின்ன வரும் சில பறவைகள். அவற்றில் ஒன்றைப் பதுங்கிக் கிடந்து, பாய்ந்து கவ்விய மலைப்பாம்புக் குட்டியைப் பழம் பறிக்கிற பரபரப்பில், பார்க்காமல் மிதித்துவிட்ட பீமனின் இடதுகாலைக் கவ்வியிறுக்கி...

கௌதாரிப் பறவையைக் கவ்விக் கொண்டிருக்கிற மலைப் பாம்புக் குட்டியை—தாசரிப் பாம்பைக் கண்டவுடனே —



**ஏன் உதைத்தாய்?**

அம்மா: தம்பியை காலால் எட்டி ஒதைச்சியாமே ஏண்டா?

பையன்: என்னை கழுதைன்னு திட்டினான் அம்மா!

— கடலூர் கன்னியப்பன்.

வால்மீகி பாய்ந்தான். பீமனின் காலைச் சுருட்டிக் கொண்டிருக்கிற மலைப்பாம்பின் கழுத்தைக் கப்பெனப் பற்றினான். இன்னொரு கையால் வாலைப் பிடித்தான். "பீமா.... காலைச் சுழற்றி வளைத்துப் பாம்பின் பிடியிலிருந்து காலை விடுவித்துக் கொள்!" என்றான்.

அவனது யோசனையின்படியே, மலைப்பாம்பின் இறுகிய பிடியிலிருந்து காலைப் பைய விடுவித்துக் கொண்ட பீமன், அச்சமும் அதிர்ச்சியுமாகத் துள்ளிப் பாய்ந்து அப்பாலே விலகியோடினான்!

மலைப் பாம்பின் தலையையும் வாலையும் உறுதியாகப் பற்றிக் கொண்டு மரத்தடியை விட்டு வந்தான். சுழன்றான். கிறுகிறுவெனச் சுழன்று கைப்பிடியிலிருக்கிற மலைப் பாம்பை, வேகமாக வீசியெறிந்தான், வால்மீகி.

வீசியெறிப்பட்ட மலைப் பாம்பு, வளைந்து நெளிந்தவாறே சுழன்று போய்ச் சற்றுத் தூரத்திலேயுள்ள, ஒரு சிறு செம்பூராங்கல் பாறைக் குன்றின் மீது 'பொத்'தென விழுந்து சுருண்டது.

அப்புறம் —

எல்லாரும் நடந்தார்கள்.

"ஹூம்! ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பார்களே! அது சரிதான்!" என்று நடந்தவாறே குத்தலாகச் சொன்னாள் வீராயி.

பெருமூச்செறிந்த பீமன், முகத்தில் அசடு வழியச் சொன்னான். "இல்லை, வந்து பசி....! அழகு அழகான மாம் பழங்களைப் பார்த்துவிட்டு ஆசை ஆசையாக ஓடினேன்."

"ஆசையாக ஓடி அந்த மலைப் பாம்பிடம் காலைக் கொடுத்துவிட்டுக் குலையதிரக் கூவினாயாக்கும்—போடா, மண்டு!" என்று அன்புடன் கடிந்து கொண்டான் ஆதி.

"ஆசை வரும் முன்னே, அழுகை வரும் பின்னே! என்பது பழைய மொழிதான் என்றாலும், இன்றையப் பழக்க வழக்கங்களுக்குப் பொருந்தி வரும் பொன்மொழிதான்!" எனப் புன்சிரிப்புடன் சொன்னாள், வீராயி.

"ஆமாம்.... அது என்ன பாம்பு?" என்றான் நாகன்.

"அது... மலைப் பாம்புக் குட்டி. ஜனங்கள் அதைத் தாசரிப் பாம்பு எனச் சொல்லுவார்கள்" என்றான் வால்மீகி.

"இந்த உலகத்திலே சுமார் மூவாயிரம் இனத்தைச் சேர்ந்த பாம்புகள் இருக்கின்றன. அவைகளுள் முந்நூறு இனம் விஷப் பாம்புகள்!" என்றான் ஆதி.

"அம்மாடீ!" பீமன் நெஞ்சம் சிலிர்த்தான்.

"இந்த மூவாயிரம் இனப் பாம்புகளுள், சுமார் முந்நூற்றி ஐம்பது இனப் பாம்புகள், நம்முடைய தேசத்தில் உள்ளன. இவைகளுள், எழுபது இனப் பாம்புகள் விஷம் உள்ளவை. இவ் விஷப் பாம்புகளுள் முப்பது இனப் பாம்புகள் கடலில் வாழ்கின்றன. நாற்பது இனப் பாம்புகள் நிலத்தில் உலாவுகின்றன..." என்று கூறினான் ஆதி.

"இப்பாம்புகளுள் நாகப் பாம்பு, கண்ணாடி விரியன், கட்டு விரியன், சுருட்டை எனும் பாம்புகள் கொடிய விஷம் உள்ளவை. இப்பாம்புகளின் கொடிய விஷத்தின் கொடூரமெல்லாம், நான் உங்களுக்குக் கொடுத்திருக்கிற வெண்ணிற மருந்து உருண்டைகளிடம் இளகி உருகி முறிந்து மறைந்துவிடும்!" என்று பெருமையும் பூரிப்பும், நம்பிக்கையும்,

நகைப்புமாகச் சொன்னான் வால்மீகி.

''பலே! பலே!'' எனச் சிரித்தான் பீமன்.

''பாம்பு கொத்தி விஷமேறி இறப்பவர்கள், நாற்பது பேர்கள் என்றால், 'ஐயோ! பாம்பு கொத்திவிட்டதே!' என்கிற திகிலில் இறப்பவர்கள், அறுபது பேர்கள்!'' என்றான் ஆதி.

''மலையில் குபீரிட்டுக் கொப்புளிக்கிற அக்கினியைப் பார்த்துவிட்டு, அது ஒரு பூதம்! பிசாசு! என்று நம்பி அஞ்சி அதிர்ந்து ரத்தங் கக்கிச் சாகிறார்களே! அந்த மாதிரிதான்! ஹூம்! புலி அடிப்பதற்குள் கிலி அடித்து விடும் என்கிறார்களே அது உண்மை தான்!'' என்று எரிச்சலுடன் சொன்னாள் வீராயி.

இவ்வாறாக —

என்ன என்னவோ பேசிக் கொண்டே நடந்தார்கள். கண்பட்ட இடமெல்லாம் பச்சைப் பசேலெனும் காட்டு மரங்களும், கால்பட்ட இடமெல்லாம் கல்லும் கரடும் செடியும் கொடியும், கோரைப் புற்களுமாய்த் தழைத்திருக்கிற ஆரணியப் பூமியிலே, நடந்து கொண்டிருந்தார்கள்....

அக்கினி மலையின் சிகரத்திலே இறங்குகிறமாதிரி, மேற்கு அடிவானத்தின் சரிவிலே பையப் பைய நழுவிக் கொண்டிருந்தது, ரத்தச் சிவப்பாய்க் கனலும் சூரிய வட்டம். அதனுடைய ஒளிக் கிரணங்களால் அடி வானத்து மேகங்களில் பலவகையான விசித்திர நிறங்கள் தோன்றி ஜாலங் காட்டியது!

மேகங்களில் கோலமிடும் சூரியக் கதிர்களின் வர்ண ஜாலங்களை ரசித்த வாறே நடந்த வீராயி, கேட்டாள். ''இன்னும் சற்று நேரத்திற்குள் பகல் மறைந்துவிடும். இருள் வந்துவிடும். அதற்குள் அக்னி மலையை அடைந்து விட முடியுமா?''

''முடியாது!'' என்றான் நாகன்.

''இன்னும் மூன்று மூன்றரை கிலோ மீட்டர் தூரம் நடந்தாக வேண்டும்'' என்றான் பீமன்.

''அப்படியென்றால், இந்த இரவை எப்படிக் கழிப்பது? எங்கே தங்குவது?'' என்றான் நாகன்.

''ஏதாவது ஒரு மரத்தில் ஏறிக் குரங்குகள் மாதிரி'' என்று வால்மீகி மேலும் சொல்வதற்குள் —

அக்கம்பக்கங்களிலுள்ள மரங்களிலிருந்து கிளம்பிய திடீர்க் கீச்சுக் கதறல் நெஞ்சை உலுப்பியது!

அதென்ன கதறல்....?



சுற்றும்முற்றும் கவனித்தார்கள்.

மரங்களை விட்டு மேலெழும்பி வானவெளியில் சிறகடித்து அலைகிற 'பலவகையான பறவைகள், 'க்கீ.... க்கீ....' எனக் கூவின.

பறவைகளைக் கண்டதும் —

''டேய்....! ஜாக்கிரதை! ஏதேனும் புலி, சிறுத்தை போன்ற கொடிய மிருகங்களைக் கண்டால்தான், பறவைகள் அஞ்சிப் பறந்து அலறும்....!'' என்று பயமும் பதற்றமுமாகச் சொன்னான் வால்மீகி. அவனது கைகள், அவனையும் அறியாமல் வில்லையும் அம்பையும் எடுத்துக் கொண்டன!

மறுநொடி —

''கொர்ர்ர்.... கிறீச்.... கிறீச்....!

''உர்ர்ர்.... கிறீச்.... கிறீச்....!''

வேட்டைக்காரனைக் கண்ட வேங்கை மாதிரி —

கோனைரைப்பார்த்தஓநாய்மாதிரி—

குறவனைக் கண்ட நாய் மாதிரி —

மரங்களை விட்டு இறங்கின. தாவிக் குதித்தோடி வந்தன. அக்கம்பக்கங்களில் குபுகுபுவெனச் சூழ்ந்து கொண்டன. ஏதோ ஓர் எரிச்சலும், என்னவோ ஒரு கோபமுமாகக் குமுறின! கிறீச்சிட்டு உறுமிக் கொக்கரித்தன!

எவை....?

குரங்குகள்! குரங்குகள் நூற்றுக் கணக்கான குரங்குகள்! பல்லைப்பல்லை இளித்துக் காட்டி வெறித்துக் கூவியபடி வரும் குரங்குப் பட்டாளத்தைப் பார்த்ததும் —

''ஆ....! இத்தனை நூறுகுரங்குகளிடமிருந்து எப்படித் தப்பிச் செல்வது?'' என்று உள்ளஞ் சிலிர்க்க அலறினான் நாகன்.

''பயப்படாதீர்கள்! கோல் எடுத்தால் குரங்கு ஆடும் என்பார்கள். எல்லோரும் கைத்தடிகளைத் தலைக்கு மேல் தூக்கி....'' வீராயி மேலும் சொல்லுவதற்குள் —

வால்மீகி இடைமறித்துச் சொன்னான். ''வீராயி, சும்மாயிரு. எல்லாரும் குரங்குகளைப் பார்த்துக் கொண்டே அசையாமல் நில்லுங்கள். இந்தக் குரங்குகளுக்குத் தகுந்தபடி ஒரு வேடிக்கை காட்டுகிறேன்.''

''என்ன வேடிக்கை?'' என்றான் ஆதி.

''ஒரு இரண்டு நிமிஷங்களில்....'' என்றவாறே, வால்மீகி, கால் சட்டைப் பைக்குள் கையைத் திணித்துத் துழாவி ஒரு சின்னஞ் சிறு எஃகுத் துண்டை எடுத்தான். முண்டாசுத் துண்டை அவிழ்த்தான். அதன் ஒரு முனையைச் சுருட்டி, இடது கையில் பிடித்துக் கொண்டான். அருகில் உள்ள சிறு பாறாங் கல்லை அணுகி உட்கார்ந்தான். எஃகுக் கம்பியைப் பாறாங் கல்லில் வேகமாக, அழுத்தமாக உரசினான். எஃகுக் கம்பியிலிருந்து தீப்பொறிகள் தெறித்தன. தெறித்துப் பாயும் தீப்பொறிகள், துண்டு முனையில்படுமாறு, மேலும் மேலும் உரசினான்... உரசினான்....

சில விநாடிகளில் —

தீப்பொறிபட்ட முண்டாசுத் துண்டின் முனையில் நெருப்பேறிப் புகைந்தது. புகையும் நெருப்பை ஊத...



## முன்வரவில்லை

ஒரு பெண்ணை ஏசுநாதர் முன்பு கொண்டு நிறுத்தி, ''இவள் பாவம் செய்தவள். இவளைக் கல்லால் அடிக்கலாமா?'' என்று சிலர் கேட்டார்கள்.

''உங்களில் பாவம் செய்யாதவர் யாரோ அவர் முதலில் ஒரு கல்லை எடுத்து அடிக்கட்டும்'' என்றார் ஏசுநாதர்.

கல் எறிய ஒருவர்கூட முன்வரவில்லை.



ஊத.... ஊத.... நெருப்பு கனிந்து கனன்றது.

உடனே —

முழங்கால் அளவு உயரத்திற்கு வளர்ந்திருக்கிற கோரைப் புற்களைச் சேர்த்துச் சுருட்டிப் பிடித்துக் கொத்தாகப் பிடுங்கினான். முண்டாசுத் துணியின் நெருப்பைப் புல் கட்டுக்கு நடுவில் வைத்து ஊதி.... ஊதி.... ஊதி....

புல் கட்டு குப்பென எரிந்தது!

அடுத்த நொடி —

முண்டாசுத் துண்டின் நெருப்பை எடுத்துக் கொண்டான். எரிகிற புல்லைக் கோரைப் புற்களில் வைத்துத் தீமூட்டினான், வால்மீகி. கோரைப் புற்கள் எரிந்தன. உஸ் உஸ்ஸென வீசும் காற்றில் ஜிகுஜிகுவெனத் தீப் பற்றிக் கொண்டு பரவிப் பாய்ந்தன! குபு குபுவெனப் புகைந்து திகுதிகுவென எரிந்து பரவும் அக்கினியைப் பார்த்த நொடியே —

குரங்குகள் கிறீச்சிட்டன! அஞ்சி அதிர்ந்து, அங்கும் இங்குமாய்ச் சிதைந்து சிதறிப் பாய்ந்தோடி மறைந்தன!

''சபாஷ்டா, வால்மீகி!'' வால்மீகியின் முதுகில் மகிழ்ச்சிப் பூரிப்புடன் தட்டிக் கொடுத்தான் ஆதி.

மறுநொடி —

''ஆமாம்... போகிற வழியெல்லாம் தீப்பிடித்து எரிகிறதே! இந்த அக்னியை எப்படிக் கடந்து போவது?'' என்று தங்களுக்கு முன்னே பரந்து விரிந்து குமுறி எரியும் கோரைப் புல் தீயை வெறித்துப் பார்த்தவாறே கேட்டான் பீமன்.

ஆதி மெல்லச் சிரித்தவாறே சொன்னான். ''நம்முடைய ஊரில், காளி கோவிலில் தீமிதி விழா நடக்கும் போது, நெருப்புக் குழிக்குள் தாவிக் குதித்துப் பாய்ந்தோடுகிற மாதிரி, இந்தக் கோரைப் புல் தீக்குள் புகுந்து துள்ளிக் குதித்[illegible]''


''ஆமாம், வாருங்கள். ஒரே ஓட்டமாகப் பாய்ந்தோடிவிடலாம்!'' என்றான் வீராயி.

அடுத்த நொடி —

எல்லாரும் தாவினார்கள். சடச்சடவெனக் குமுறியெரியும் கோரைப் புல் தீக்குள் பாய்ந்தார்கள். மழைக் காலத்துப் புயல் காற்று மாதிரி, 'ஜிவ்வ்....'வெனப் பறந்தோடினார்கள்!

(தொடரும்)


# ப்ரெஞ்சு நாட்டு



* சிறுவன் நாற்காலியின் கால் ஒன்றை உடைத்து விட்டான்.
''இனி அது பயன்படாதேடா!''
''ஏன் பயன்படாது? நான் இரண்டு கால்களில் நிற்கிறேனே, அது மூன்று கால்களில் நிற்காதா?''



* பையன் பூனையின் வாலைப் பிடித்து இழுத்தான். அது கத்தியது. சத்தத்தைப் பொறுக்க முடியாத அம்மா:
''டேய்! பூனையின் வாலைப் பிடித்து இழுக்காதே!''
''நான் இழுக்கவில்லை அம்மா. நான் வாலைப் பிடித்துக் கொண்டிருக்கிறேன். அதுதான் இழுக்கிறது.''




* சரித்திர வகுப்பில் ஆசிரியர் கேட்டார்:
''அரசன் இறந்தால், அவன் மகன் என்ன ஆவான்?''
நெடுநேரம் யோசித்துவிட்டு மாணவன் சொன்னான்: ''தந்தையற்றவன் ஆவான்.''



* ''காதுகளின் பயன் என்ன?''
''தொப்பி-பெரிதாக இருந்தால், கண்களை மறைக்காமல் தாங்கிக் கொள்ளும்.''




* அம்மாவும் மகனும் தோணியில் போனார்கள். காற்று அதிகம் இருந்ததால், தோணி அப்படியும் இப்படியும் ஆடிக் கொண்டே சென்றது.
''அம்மா, தோணி ஏன் நொண்டுகிறது?''




* தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தார்கள். குதிரைப் பந்தயம் நடந்து கொண்டிருந்தது. சிறுமி தாயைப் பார்த்து, ''இந்தக் குதிரைகள் எதன் பின்னால் ஓடுகின்றன?''
''எதன் பின்னாலும் இல்லை. முதலில் வரும் குதிரைக்குப் பரிசு கிடைக்கும். அதற்காகத்தான் ஓடுகின்றன.''
''முதலில் வரும் குதிரைக்குத்தானே! பின் ஏன் மற்றக் குதிரைகளும் அதன் பின்னால் ஓடுகின்றன?''

# நகைச் சுவை




* வெளியில் சென்று வீடு திரும்பிய அம்மா, தன் மூன்று மகள்களையும் பார்த்து,
"பீங்கான் பாத்திரங்களைக் கழுவி வைத்தீர்களா?"
முதல் மகள் : நான்தான் அவற்றைக் கழுவினேன்.
இரண்டாம் மகள் : நான்தான் அவற்றைத் துடைத்து அடுக்கினேன்.
அம்மா : (மூன்றாம் மகளிடம்) நீ ஒன்றுமே செய்யவில்லையா!
மூன்றாம் மகள் : செய்தேனே! உடைந்த பீங்கான் துண்டுகளைப் பொறுக்கிப் போட்டுச் சுத்தம் செய்தேன்.



* "ஒளி ஊடுருவிச் செல்லும் உலோகம் இருக்கிறதா?"
"இருக்கிறதே!"
"உண்மையாகவா? எது?"
"வலைக் கம்பி."



* "நெடுநேரமாக அகராதியில் என்ன தேடுகிறாய்?"
"இதில் எல்லாம் இருக்கும் என்றீர்களே! என் கணக்குக்கு விடை இல்லையே அப்பா."



* "சித்தப்பா! நேற்று இரவு நீங்கள் என் கனவில் வந்தீர்கள். எனக்கு நூறு ரூபாய் கொடுத்தீர்கள்."
"அப்படியா! சரி, இந்த ஆண்டு உன் பிறந்த நாளுக்காக அதையே என் அன்பளிப்பாக வைத்துக் கொள்."



* "ஏன் அழுகிறாய்?"
"ராமுவால் எனக்குக் கை வலிக்கிறது."
"எப்படி?"
"நான் அவனைக் குத்தப் போனேன். அவன் குனிந்து விட்டதால், என் கை சுவரில் பட்டுவிட்டது."

— க. சச்சிதானந்தம் தொகுத்து, புதுச்சேரி, சாரதா பதிப்பகம் வெளியிட்டுள்ள 'பிரெஞ்சுப் பூக்கள்' என்ற நூலிலிருந்து.

# சித்திரப் புதிர்! (10)

ஆழி




1

இந்தப் பிராணியின் முக்கிய இரை யூகலிப்டஸ் இலைதான். என்ன பிராணி இது?



2

பூர்த்திசெய்யுங்கள்:
இவர் உலகின் முதல் ________ வீரர்,



3


விஷப்பாம்புகள் அதிகம் உள்ள நாடு...
அ. இந்தியா, ஆ. ஆப்பிரிக்கா
இ. ஆஸ்திரேலியா.



4


சிங்கம் எத்தனை ஆண்டுகள் உயிர் வாழும்?
அ. 20. ஆ. 35 இ. 40

5



இதில் எத்தனை கன சதுரங்கள் இருக்கின்றன?

6



இரண்டு படங்களுக்கும் 7 வித்தியாசங்கள் இருக்கின்றன. கண்டுபிடியுங்கள்.

விடை வேறு பக்கம்



# நட்பின் பெருமை

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

கோபாலன் அன்று மிகவும் சுறுசுறுப்பாக இருந்தார். அவர் போஸ்டாபீசில் பணியாற்றும் அதிகாரி. அன்று மேலதிகாரி யாரோ வருவதாக இருந்தது. அவரது ஒரே மகன் ரமணன், அவரிடம் என்றுமில்லாத அளவு நச்சரித்துக்கொண்டிருந்தான்.

"அப்பா, நேற்றே நீங்கள் நட்பு பற்றிக் கூறுவதாகச் சொன்னீர்களே! இப்பொழுது சொல்லுங்கள்" என்றான்.

அவர் காதில் போட்டுக்கொண்டதாகவே தெரியவில்லை. குளித்து உடை மாற்றினார்: தனது ஆசார அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டார். சிறிது நேரம் கடவுளை நினைத்துக் கண்மூடி வணங்கினார். இது அவரது தினசரி வழக்கம். ரமணனும் தந்தையைப் பின்பற்றியே இச்செயல்களில் ஈடுபடுவான்.

வழிபாடு முடிந்து கோபாலன் உணவை மெதுவாகவே உண்பார். ரமணனும் அப்படியே. உண்டவுடன், மறுபடியும் நட்புப் பற்றிய கேள்விக் கணையைத் தொடுத்தான். அவர் அமைதியாக அலுவலகம் புறப்படும்போது, "இன்று மாலை வந்தவுடன் பேசுவோம்" என்றார்.

மாலையில் திரும்பி வந்தவுடன் பிடித்துக் கொண்டான். அவரும் அவனுக்காகத் திருக்குறள், மற்றும் சில நூல்களில் இருந்து செய்திகளை மனத்தில் திரட்டி வைத்திருந்தார். எப்பொழுதுமே அப்படித்தான். மகனை அவையில் முந்தி இருக்கச் செய்யும் கடமை தனதே என்பதை நன்குணர்ந்த தந்தை அவர்.

"ரமணா, நட்பிற்கான இலக்கணத்தை வள்ளுவர் நன்கு எடுத்துக் கூறியுள்ளார். ஒருவனை ஆராய்ந்து அறிந்து, அதன் பிறகே நட்புக்கொள்ள வேண்டும். சிரித்து மகிழ்வதற்காக நட்புக் கொள்ளக் கூடாது. அவையில் உள்ளவன் ஆடை நழுவ அவனது கை விரைந்து சென்று பற்றி உதவுவது போல, நண்பனுக்குத் துன்பம் வரும்பொழுது நாமாக விரைந்து சென்று உதவி அவனது துன்பத்தைத் துடைக்க வேண்டும். என்றும் நண்பன் தவறு செய்யுங்கால் அவனை இடித்துக் கூறி, நல்வழிப்படுத்த வேண்டுமென்றும் கூறியுள்ளார். விளக்கமாக ஒரு நிகழ்ச்சி கூறுகிறேன்.

பாரதக் கதை. துரியோதனனுக்குக் கர்ணன் நண்பனானான். உதவினான். கடைசிவரை நின்று உதவி உயிரையும் கொடுத்தான். ஆனால், துரியோதனன் தவறு செய்யும்பொழுது இடித்துக் கூறவில்லை. அவை நடுவே திரௌபதியை அழைத்துவந்து அவமானப்படுத்தும் பொழுது கர்ணனும் இருந்தான். அப்பெரிய தவறுக்கு இவனும் உடந்தையாகி இருக்க வேண்டாம். நகுதற் பொருட்டு அன்று நட்டல் என வள்ளுவர் கூறியதை இங்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்பொழுது நட்புக் கொள்ளும் தன்மை உனக்கு நன்கு புரிந்திருக்கும்.

# சித்திரப் புதிர்-10 விடை

1. கோலா கரடி
2. இவர் உலகின் முதல் விண்வெளி வீரர் யூரி ககாரின்.
3. இ.
4. அ.
5. 34 கன்சதுரங்கள்
6. 1. அலகில் துவாரம்; 2. கழுத்தில் கோடு; 3. மார்பில் புள்ளி; 4. இறக்கையில் கோடுகள்; 5. இறக்கை நுனியில் கறுப்பு; 6. காலில் கோடுகள்; 7. வாலில் கோடுகள்.

# மகாத்மாவின் பொன் மொழிகள்

* நாட்டிலேயே மிகப் பெரிய தொழிற்சாலைகள் பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும்தான். அங்குதான் எதிர்கால உலகமே உருவாக்கப்படுகிறது.
* உடல் வளர்ச்சிக்கு உணவு அவசியம். உள்ள வளர்ச்சிக்குச் சிந்தனை அவசியம். ஆன்ம வளர்ச்சிக்குப் பரோபகாரம் அவசியம்.
* தெய்விகக் கணக்குப் புத்தகத்தில் நமது செயல்களைத்தான் பதிவு செய்கிறார்கள். நாம் படிப்பது, பேசுவது ஆகியவற்றைப் பதிவு செய்வதில்லை.
* உண்மை அன்பு இதயத்தின் தூய்மையில்தான் இருக்கிறது.
* பிரார்த்தனை என்பது உதட்டிலிருந்து வெளிப்படுவதல்ல. உள்ளத்தின் ஆழத்தில் உதயமாவது.
* உனக்கு நீயே நீதிபதியாக இரு. உண்மையில் நீ மகிழ்ச்சியாக இருப்பாய்.
* முள் நிறைந்த செடியிலேதான் முழு அழகு வாய்ந்த ரோஜா மலர் பூக்கிறது. அது போலவே சொல்லொணா துன்பங்களுக்கிடையேதான் உண்மை பூத்து மலர்கிறது.



— ஆர். எஸ். சுப்பிரமணியன்

நட்பு என்பது பொருளைக் கொண்டோ, ஒருவன் செய்யும் உதவியை வைத்தோ மதிப்பிடுவது அன்று. ஒத்த உள்ளம் அன்பினால் பிணைவது நட்பு. ஒருபோதும் வேறுபடுதல் என்ற நிலை இன்றி நாளும் வளர்மதி போல வளர்ந்து வருவது நட்பாகும்.

துன்பம் வரும்பொழுதுதான் நமது உண்மையான நண்பனை அடையாளம் கண்டு கொள்ள முடியும். செல்வம் உள்ளவரை நம்மைச் சுற்றி வருவார் பலர். அற்ற குளத்தில் அருநீர்ப் பறவை போல், செல்வம் நீங்கியவுடன் நம்மைப் பிரிந்து சென்று விடுவர். எனவே, மிகவும் கவனமாக இருக்க வேண்டும். புரிகிறதா? இராமாயணத்தில் ஒரு சம்பவம் கூறுகிறேன், கேள்:

அரக்கர் குலத் தோன்றலாகிய விபீஷணன், தகாது செய்த தன் அண்ணனை இராவணனைத் தட்டிக் கேட்டான். அவன் செவி சாய்க்கவில்லை. உடனே அவனுடன் இருப்பது தவறு என்று எண்ணி, ராமபிரானிடம் சென்று சரணடைந்தான். ராமபிரான் அவனது உள்ளக்குறிப்பை உணர்ந்து ஏற்றுக் கொண்டார். தன் எதிரியின் உடன் பிறந்தவன் என்ற காரணத்திற்காக, அவனைத் தள்ளி விடாது அவனையும் அன்பால் ஏற்றுக் கொண்ட பெருமை ராமபிரானுக்கு உண்டு. அவனைத் தன் உடன் பிறந்தவனாகவே ஏற்றுக் கொண்டார். இறுதியில், அவனை இலங்கையின் அரசனாகவே முடிசூட்டித் தன் கடமையைச் செய்தார். இராம அவதாரத்தின் நோக்கம் பாபம் அழிவதோடு அறம் வெல்லவும் வேண்டுமென்பதே. இவ்வாறு, கொள்ளத்தக்க, நட்பு இது, தள்ளத்தக்க நட்பு இது, என அறிந்து ஆராய்ந்து செயல்பட வேண்டும்.

தகாத நட்பு பெருந் துயரம் தரும்.

குறள்:

நகுதற் பொருட்டன்று நட்டல்;
மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு.

# புகழைத் தேடிச் சென்றார்; புகழுடன் திரும்பி வந்தார்!



**தேவி நாச்சியப்பன்**

டென்மார்க் நாட்டிலுள்ள ஓடென்ஸ் நகரம் முழுவதும் அன்று விழாக்கோலம் கொண்டிருந்தது. நகர மண்டபம் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு பெண்களும், ஆண்களும் குழந்தைகளுமாகக் கூட்டம்பெருகி வழிந்தது. குழந்தைகளுக்கு அன்று பள்ளி விடுமுறை. அங்கு அப்படி யார் வந்திருப்பார்கள் என்று தானே கேட்கிறீர்கள்?

அதே ஊரில் 1805—ஆம் ஆண்டில் பிறந்து வளர்ந்தவர். வெளியூர் சென்று 50 ஆண்டுகள் கழித்துத் திரும்பிவந்தார். அவருக்குத்தான் அந்த மகத்தான வரவேற்பு. அவர் யார் தெரியுமா? அவர்தான் குழந்தைக் கதைகள் எழுதி உலகப் புகழ் பெற்ற ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சன்!

உங்களில் பலர் அவருடைய தேவதைக் கதைகளையும் மற்ற கட்டுக்கதைகளையும் படித்திருக்கலாம். சிலர் கேட்டிருக்கலாம். சென்ற இதழில்கூட 'தீக்குச்சி விற்கும் சிறுமி' கதையைப் படித்திருப்பீர்களே, அவருடைய கதைகள் ஒன்றல்ல, இரண்டல்ல. 120 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன!

ஆண்டர்சனின் தந்தை செருப்புத் தைப்பவர்; தாய் துணி வெளுப்பவள். இருந்தும் அவருடைய பெற்றோர்கள் அவரை நல்ல முறையில் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வர ஆசைப்பட்டார்கள். ஆனால் ஆண்டர்சனுக்குப் படிப்பில் அக்கறையே இல்லை. அதனால் பாதியிலேயே படிப்பு நின்றது.

ஆண்டர்சனுக்கு, அவருடைய தந்தை ஒரு சிறிய நாடக மேடையைச் செய்து கொடுத்திருந்தார். ஆண்டர்சன் தன் பொம்மைகளுக்குத் துணி தைத்துப் போட்டு, நடிகர்கள் போல் நிற்க வைப்பார். அந்த நடிகர்கள் நடிப்பதற்கான நாடகத்தைத் தானே கற்பனை செய்து தயாரிப்பார். அவற்றில் வரும் ஒவ்வொரு பாத்திரமாகவும் தானே மாறி மாறித் தனி நடிப்புப் போல உணர்ச்சி ததும்பப் பேசி மகிழ்வார்.

ஆண்டர்சன் 14 வயதுச் சிறுவனாக இருந்தபோதே அவருடைய தந்தை இறந்துவிட்டார். ஆண்டர்சனுக்கு உள்ளூரில் இருக்கவே பிடிக்கவில்லை. டென்மார்க்கின் தலைநகரான கோபன்ஹேகனுக்குச் செல்ல ஆசைப்பட்டார். தாயிடம் விஷயத்தைக் கூறினார். ''அங்கு போய் என்ன செய்வாய்?'' என்று அவர் தாயார் கேட்டார். அதற்கு ஆண்டர்சன், ''பொருள் தேடப் போகிறேன்'' என்று சொன்னார்? அதுதான் இல்லை. 'புகழ் தேடப் போகிறேன்' என்றார். அது எப்படிப் புகழ் தேடுவது என்று ஆச்சரியப்படுகிறீர்களா? ஆண்டர்சனின் தாயாரும் அப்போது அப்படித்தான் நினைத்தார். ஆனால், பிற்காலத்தில் டென்மார்க் நாட்டு மக்கள் மட்டுமல்லாமல் உலகமே அவரைப் புகழ ஆரம்பித்தது!

ஊரை விட்டுப் புறப்படும்போது, கோபன்ஹேகனிலுள்ள புகழ் பெற்ற ஒரு நடிகையிடம் கொடுப்பதற்காகத் தனக்குத் தெரிந்த அச்சகத்தாரிடமிருந்து ஒரு பரிந்துரைக் கடிதம் வாங்கிச் சென்றார் ஆண்டர்சன். அதை அந்த நடிகையிடம் கொடுத்

தார். அந்த நடிகை, ''உனக்கு நடிக்கத் தெரியுமா?'' என்று கேட்டார். ஆண்டர்சன் மகிழ்ச்சியுடன், ''ஓ, நடிக்கத் தெரியுமே!'' என்று கூறியதோடு நிற்கவில்லை. உடனேயே ஆடிப்பாடி நடித்துக் காட்டவும் செய்தார்.

கிழிந்த ஆடையுடன் வந்த ஏழை ஆண்டர்சனை அந்த நடிகைக்குப் பிடிக்கவில்லை. ''இப்போது எந்த உதவியும் செய்ய முடியாது. பிறகு பார்க்கலாம்'' என்று கூறி அனுப்பிவிட்டார். நடிகனாக ஆசைப்பட்ட ஆண்டர்சன், பாவம், ஏமாற்றத்துடன் திரும்பினார்.

ஆண்டர்சன் ஊரிலிருந்து கொண்டு வந்த பணம் (37 ஷில்லிங்) முழுவதும் தீர்ந்துவிட்டது. அவருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஊருக்குத் திரும்பிவிடலாமா? என்றுகூட ஒரு சமயம் நினைத்தார். ஆனாலும் தாயிடம் சொன்னதுபோல் புகழ் தேடாமல் திரும்பக்கூடாது என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டார்.

ஆண்டர்சனின் குரல் இனிமையாக இருக்கும். சிலர் கூறிய அறிவுரைப்படி இசைவாணராக முயற்சி எடுத்துக் கொண்டார். அந்த நகரத்தில் உள்ள புகழ் பெற்ற இசைவாணர் ஒருவர் வீட்டிற்குச் சென்றார். அவர் ஆண்டர்சனைப் பாடச் சொல்லிக் கேட்டார். கேட்டதும், ''தம்பி, நீ இங்கேயே தங்கிக் கொள்ளலாம். உனக்கு உணவும், துணியும் கொடுக்கிறேன்.'' என்றார். ஆண்டர்சனுக்கு அளவில்லாத மகிழ்ச்சி.

இசைவாணர் ஆண்டர்சனுக்குத் தினமும் இசைப் பயிற்சி அளித்து வந்தார். ஆண்டர்சனும் கவனமாய்க் கற்றுக் கொண்டார். இருந்தும், அவருடைய 15 வது வயதில், அவர் குரல் மாறிவிட்டதால், ''உன் குரல் முறிந்துவிட்டது. சிறிதுகூட இனிமை இல்லை'' என்று கூறி, இசைவாணர் அவரை ஊருக்குத் திரும்பிப் போகும்படி கூறிவிட்டார்.

ஆண்டர்சன் இசைவாணர் வீட்டை விட்டு வெளியேறினார். ஆனால், ஊருக்குத் திரும்பவில்லை. அவருக்கு





மிகவும் கவலையாக இருந்தது. 'நடிகனாகவும் முடியவில்லை; இசைக்கலைஞர் ஆகவும் வழியில்லாமல் போய்விட்டதே!' என்று மிகவும் வேதனைப்பட்டார். இருந்தும் திடமனத்துடன், 'நான் ஒரு நாடகாசிரியனாகவும் சிறந்த கவிஞனாகவும் வருவேன்' என்று கூறிக் கொண்டார்.

அன்று முதல் நிறைய நாடகங்கள் எழுத ஆரம்பித்தார். சிறு வயதில் வீட்டில் நடத்திய பொம்மை நாடகங்களுக்கு, தான் எழுதிய நாடகமும், பாட்டும் அவருக்கு இப்போது கை கொடுத்தன. அவர் எழுதிய நாடகங்களைப் பலரிடம் விலை கூறிப் பார்த்தார். வாங்குவதற்கு ஆளே இல்லை. பாவம், ஆண்டர்சன் சாப்பாட்டிற்கே திண்டாடினார்.

இப்படி இருக்கையில் ஒருநாள், ஆண்டர்சன் காலின் என்னும் ஒரு பெரியவரைச் சந்தித்தார். அவரிடம் ஆண்டர்சன் தான் எழுதிய நாடகங்களையும், கவிதைகளையும் கொடுத்தார். அவர் எல்லாவற்றையும் படித்துப் பார்த்தார். கருத்து, எழுத்து நடை எல்லாம் நன்றாக இருந்தன. ஆனாலும், அவற்றில் ஏகப்பட்ட எழுத்துப் பிழைகளும், இலக்கணப் பிழைகளும் இருந்தன. 'இவனை ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்த்துப் படிக்க வைத்தால், இவனுக்கு நல்ல எதிர்காலம் உண்டு' என்று காலின் நினைத்தார். உடனே, ஆண்டர்சனை ஒரு பள்ளியில் சேரும்படி கூறினார். பதினெட்டு வயது ஆண்டர்சன், எட்டு வயதுக் குழந்தைகளுடன் உட்கார்ந்து படித்தார். இளமையில் ஒழுங்காகக் கல்வி கற்கவில்லையே! என்று வருந்தினார். ஆனாலும், பிறகு நன்றாகப் படித்து வெற்றி பெற்றார்.

ஆண்டர்சன் பள்ளியில் சேர்ந்த ஐந்து ஆண்டுகளில் அவருடைய புத்தகம் ஒன்று வெளிவந்தது. அவர் எழுதிய நாடகமும் மேடையில் நடிக்கப்பட்டது.

அதற்குப் பின்னர் அவர் நாவல்கள் சிலவற்றை எழுதினார். நாவல், நாடகம், கவிதை முதலிய பல துறைகளில் ஈடுபட்டார். இருந்தபோதிலும், அவருக்குப் பெருமை தேடித் தந்தது அவர் எழுதிய குழந்தைக் கதைகளே!

அவர் அடிக்கடி குழந்தைகளை அழைத்து வைத்துக் கொண்டு கதை சொல்லுவார். கதை சொல்லும் போது அந்தக் கதையில் வரும் பாத்திரங்கள் போல மெய்ப்பாடு தோன்ற நடித்தும் காட்டுவார். குழந்தைகளுக்குக் கதை சொல்லுவதென்றால் அவருக்கு மிக்க மகிழ்ச்சி. ஆனால், அவருக்குக் குழந்தைகளே கிடையாது. அவர்தான் திருமணமே செய்து கொள்ளவில்லையே! ஆண்டர்சன் எழுதிய கதைகள் பத்திரிகைகளில் வெளிவந்தன. பிறகு புத்தகங்களாக வெளிவந்தன. பல தேசங்களுக்கும் அவரது கதைகள் பரவின.


டென்மார்க் அரசியலார் ஆண்டர்சனை ஜெர்மன், பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைத்தனர். ஆண்டர்சன் செல்லும் முன்பே அவர் கதைகள் அந்நாடுகளில் பரவியிருந்ததால், அவருக்கு அங்கெல்லாம் சிறப்பான வரவேற்பும் பாராட்டும் கிடைத்தன. அந்த உற்சாகத்தில் அவர் பல கதைகள் எழுதினார்! அவர் காலத்திலேயே அவர் எழுதிய 156 கதைகள் புத்தகங்களாக வெளிவந்தன.

ஒடென்ஸ் நகரிலே ஆண்டர்சன் பிறந்த வீடு இப்போது ஒரு கலைக்கூடமாக விளங்குகிறது. அங்கு ஆண்டர்சன் எழுதிய கையெழுத்துப் பிரதிகள், அவர் தொடர்பான கடிதங்கள், புகைப்படங்கள், சித்திரங்கள், முதலியன காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவர் எழுதிய புத்தகங்களும் அவரைப் பற்றிய புத்தகங்களும் அங்குள்ளன. ஒடென்ஸ் நகருக்குச் செல்பவர்கள் நிச்சயம் அவற்றைப் பார்க்காமல் திரும்ப மாட்டார்கள்.

புதிர்க் கதை 7

# உண்மைக்கும் பொய்க்கும் எவ்வளவு தூரம்?

எ. சோதி



முன்னொரு காலத்தில் தென்றல் நாட்டைச் செழியன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் மிகவும் நேர்மையானவன். அதனால், அவன் புகழ் உலகெங்கும் பரவி இருந்தது.

அந்த அரசனுக்கு ஒரே மகள். அவள் பெயர் எழிலரசி. பெயருக்கு ஏற்றபடி பேரழகியாக விளங்கினாள்.

பல நாட்டு அரசர்களும் எழிலரசியின் அழகைப் பற்றிக் கேள்விப்பட்டனர். அவளைத் திருமணம் செய்து கொள்ள நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு வந்தனர்.

அரசன் செழியனுக்குத் தன் மகளை எந்த அரசனுக்கு மணம் செய்து தருவது என்று தெரியவில்லை.

'யாருக்கு மணம் செய்தாலும் மற்ற அரசர்கள் கோபம் கொள்வார்கள். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நம் மீது போர் தொடுத்தால் என்ன செய்வது?' என்று சிந்தித்தான்.

இது குறித்துக் கலந்து பேசத் தன் அமைச்சரை அழைத்தான். அவரிடம் ''என் மகளை யாருக்குத் திருமணம் செய்து வைத்தாலும் குழப்பம் ஏற்படும்போல் தெரிகிறது. அதை நீக்க நல்ல வழி ஒன்று சொல்லும்'' என்று கேட்டான் அரசன்.

இதைக் கேட்ட அமைச்சர், ''அரசே! நம் இளவரசியை மணக்க விரும்பும் எல்லா அரசர்களையும் இங்கு வரவழைப்போம். அவர்களுக்குப் பல வகையான அறிவுப் போட்டிகள் வைப்போம். எல்லாப் போட்டிகளிலும் யார் வெற்றி பெறுகின்றாரோ, அவருக்கே எழிலரசியைத் திருமணம் செய்து வைக்கலாம். அப்போது நம் மீது யாரும் குறை சொல்ல மாட்டார்கள்'' என்று சொன்னார்.

அரசனுக்கும் அது நல்ல வழியாகப் பட்டது. ''சரி! நாம் வைக்கும் போட்டிகளில் பலர் வெற்றி பெற்றுவிட்டால் என்ன செய்வது?'' என்று கேட்டான்.

''அரசே! நாம் வைக்கும் போட்டி

கள் இப்படித்தான் இருக்க வேண்டும். முதல் போட்டி எளிதாக இருக்க வேண்டும். அடுத்தது சிறிது கடின மானதாக, மூன்றாவது மிகக் கடின மானதாக இருக்க வேண்டும். கடைசியாக ஒரே ஒருவர் வெற்றி பெறும் வரை போட்டிகளை நடத்திக் கொண்டே இருப்போம்'' என்றார் அமைச்சர்.

இதை ஏற்றுக் கொண்டான் அரசன்.

உடனே எல்லா நாட்டிற்கும் திரு மணப் போட்டி குறித்து ஓலை அனுப் பப்பட்டது.

பல நாட்டு அரசர்களும் தென்றல் நாட்டிற்கு வந்து சேர்ந்தனர்.

போட்டியின் தொடக்கநாள். அதில் கலந்து கொள்ள வந்திருந்த அரசர் களுக்குச் சிறப்பான வரவேற்பு அளிக் கப்பட்டது. அவர்களும் தங்களுக்குரிய இருக்கைகளில் அமர்ந்தனர்.

பிறகு அரசன் செழியன் எழுந் தான். அவர்களைப் பார்த்துப் போட்டி யின் விதிமுறைகளைச் சொல்லத் தொடங்கினான்:

''போட்டியில் கேட்கப்படும் வினாக் களில் ஏதேனும் ஐயம் இருந்தால், தெளிவு பெறலாம். உங்களுக்குத் தோன்றும் சிறந்த விடையை ஓலையில் எழுத வேண்டும். அதன் அடியில் எழுதியவர் பெயரைக் குறிப்பிட வேண்டும். விடையை எல்லோர்க்கும் கேட்கும்படி வாயால் சொல்லக் கூடாது. பிறர்க்குக் குறிப்பாகவும் தெரியப்படுத்தக் கூடாது. அப்படிச் செய்பவர்கள் யாராயினும் அவர்கள் போட்டியிலிருந்து நீக்கப்படுவார்கள். உங்களுக்குச் சம்மதம்தானே!'' என்று கேட்டான் அரசன்.

போட்டிக்கு வந்திருந்த எல்லாரும் தலையசைத்துத் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தனர்.

''இனி அமைச்சர் போட்டியை நடத்துவார்'' என்று கூறிவிட்டு அமர்ந் தான் அரசன்.

அமைச்சர் எழுந்தார்.

''முதல் போட்டி இதுதான். ஓர் ஊரில் இரண்டு பிச்சைக்காரர்கள் இருந்தனர். அதில் ஒருவன் கால் இல் லாதவன்; மற்றவன் கண் தெரியாத வன். இருவருமே நண்பர்கள்.

திடீரென்று அந்த ஊரில் கடும் பஞ் சம் ஏற்பட்டது. அதனால் அங்கிருந்த மக்கள் பலர் பிழைப்பை நாடி வெளி யூர் சென்றுவிட்டனர்.

பலநாட்களாகப்பிச்சையேகிடைக் கப் பெறாமல் இருவரும் வாடினர்.

''எப்படியேனும் நாமும் வெளி யூர் செல்ல வேண்டும்'' என்றான் பார்வை தெரியாதவன்.

அதற்குக் கால் இல்லாதவன், ''எனக்கோ நடப்பதற்குக் கால்கள் இல்லை. உனக்கோ பார்ப்பதற்குக் கண்கள் இல்லை. நமக்கு உதவி செய் வதற்கோ இங்கு யாருமில்லை. நம் மால் எப்படி வெளியூர் செல்ல முடி யும்?'' என்று கேட்டான்.

கண் தெரியாதவன், கால் இல்லா தவனுக்கு நல்ல வழி ஒன்றைச் சொன் னான். அதன்படி இருவரும் வெளியூர் போய்ச் சேர்ந்தனர்.

இருவரும் எப்படி வெளியூர் சென் றிருப்பார்கள்? இதுதான் போட்டி'' என்றார் அமைச்சர்.

பல அரசர்கள் மிக எளிதாகப் பதில் கண்டுபிடித்துவிட்டனர். சில ரால் முடியவில்லை. எல்லோரும் தாங் கள் எழுதிய பதிலை அமைச்சரிடம் தந்தனர்.

சிறிது நேரம் கழிந்தது.

அமைச்சர் அவர்களைப் பார்த்து, ''கண் தெரியாதவன் தோள் மேல் கால் இல்லாதவன் அமர்ந்து கொண் டான். கண் பார்வை உடையவன் வழி சொல்ல, கால்களையுடையவன் அவன் சொன்னபடியே நடந்தான். இருவரும் வெளியூர் சென்றனர் — என்ற சரியான விடையை இருபது அரசர்கள் எழுதி உள்ளனர்.

அவர்கள் மட்டும் இரண்டாம் போட்டியில் கலந்து கொள்ளலாம். மற்றவர்கள் செல்லலாம்'' என்றார்.

தோற்ற அரசர்கள் தலை குனிந்தபடி வெளியேறினர்.

அமைச்சர் வெற்றி பெற்ற அரசர் களைப் பார்த்து இரண்டாம் போட் டியை அறிவித்தார்.

''ஓர் ஊரிலிருந்து இன்னோர் ஊருக் குச் செல்லும் சாலை. அவ்வழியே வந் தான் ஒருவன். அவன் சாலை ஓரத்

தில் விறகு வெட்டிக் கொண்டிருந்த ஒருவனைப் பார்த்தான்.

அந்த விறகு வெட்டியிடம், "இந்த வழியே இரண்டு காலில் மூன்று பேர் போனதைப் பார்த்தாயா?" என்று கேட்டான் வந்தவன்.

இதைக் கேட்ட விறகு வெட்டி சிந்தித்தான். அந்த வழியே சென்றவர்கள் எல்லாம் அவன் கண் முன்னர் வந்தனர். பிறகு ஏதோ நினைத்தவனாய், "ஆமாம்! போய் அரைமணி நேரம் இருக்கும்" என்று பதில் சொன்னான்.

"நன்றி!" என்று சொல்லிவிட்டு வந்தவனும் மகிழ்ச்சியோடு விரைந்து சென்றான்.

இப்பொழுது நீங்கள் கண்டுபிடிக்க வேண்டியது, வந்தவனுக்கு விறகு வெட்டி சொன்ன பதிலில் எந்த மூன்று பேரைக் குறிப்பிட்டான் என்பது தான்" என்று சொல்லி முடித்தார் அமைச்சர்.

இந்தப் போட்டியைக் கேட்டு எல்லா அரசர்களும் குழம்பிவிட்டனர். அவர்களுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை.


எல்லோரும் தங்களுக்குத் தோன்றிய விடையை எழுதி அமைச்சரிடம் தந்தனர்.

எல்லாவற்றையும் படித்துப் பார்த்தார் அமைச்சர்.

பிறகு அவர்களைப் பார்த்து, "நிறைமாதக் கர்ப்பிணியான ஒரு பெண் இடுப்பில் கைக்குழந்தையுடன் அந்த வழியே சென்றிருக்கிறாள். பெண், வயிற்றில் உள்ள குழந்தை, இடுப்பில் உள்ள குழந்தை ஆக மூன்று பேர். நடந்து சென்றதோ பெண் மட்டும் தான். 'இதைத்தான் இரண்டு காலில் மூன்று பேர் போவதைப் பார்த்தாயா?" என்று வந்தவன் குறிப்பாகக் கேட்டான்' என்று இரண்டு அரசர்கள் விடை எழுதி உள்ளனர்.

வேறு மூன்று அரசர்கள், 'எவனோ ஒருவன் இரண்டு குழந்தைகளைத் தோளில் தூக்கிக் கொண்டு அந்த வழியேபோயிருக்கிறான். இதைத்தான் வந்தவன் புதிர் போல அப்படிக் கேட்டான்" என்று எழுதி உள்ளனர்.

இரண்டுமே சரியான விடைகள் தாம்!" என்றார் அமைச்சர்.



ஆசிரியர்: பால் கணக்கு போட்டுக் கிட்டு வரச் சொன்னேனே, எங்கே?

பையன்: பால் கணக்கில் தண்ணி விழுந்து அழிஞ்சி போச்சு சார்!

— கடலூர் கன்னியப்பன்.

வெற்றி பெற்றவர்களைத் தவிர மற்றவர்கள் அந்த இடத்தைவிட்டு வெளியேறினார்கள்.

அமைச்சர் ஐந்து அரசர்களையும் பார்த்து, 'உண்மைக்கும் பொய்க்கும் எவ்வளவு தூரம்? ஏன்?" — இதுதான் மூன்றாம் போட்டி" என்றார்.

இதைக் கேட்ட ஐவருமே கலங்கி விட்டனர்.

அவர்களில் ஓர் அரசன் எழுந்து, "இந்தப் போட்டியில் எனக்குச் சில ஐயங்கள் உள்ளன. கேட்கலாமா?" என்றான்.

"கேட்கலாம்" என்றார் அமைச்சர்.

உடனே அந்த அரசன், "பருப்பொருள்களுக்கிடையேதான் தூரத்தைக் கண்டுபிடிக்க முடியும். மதுரைக்கும் தஞ்சைக்கும் எவ்வளவு தூரம்? உங்களுக்கும் எனக்கும் எவ்வளவு தூரம்? என்று கேட்டால் துல்லியமாக அளந்து சொல்லிவிடலாம்.

உள்ளத்தால் மட்டுமே அறிந்து உணரக் கூடியது நுண் பொருள். அப்படிப்பட்ட பொருள்களுக்கிடையே உள்ள தூரத்தை எப்படிக் கணக்கிட

முடியும்? அன்புக்கும் கொடுமைக்கும் எவ்வளவு தூரம்? பெருமைக்கும் சிறுமைக்கும் எவ்வளவு தூரம்? என்பவற்றிற்கு எப்படி முயன்றாலும் விடை கண்டு பிடிக்க முடியாது. அது போல உண்மைக்கும்பொய்க்கும்உள்ளதூரத்தையும் கண்டுபிடிக்க முடியாது.

அதனால் இந்தப் போட்டியே அறிவோடு தொடர்புடையது அல்ல. வேறு போட்டியை வையுங்கள்'' என்றான்.

அதற்கு அமைச்சர், ''எந்தக் காரணத்தை முன்னிட்டும் போட்டியை மாற்ற இயலாது. உங்களுக்குத் தோன்றுகின்ற பதிலை எழுதுங்கள்'' என்றார்.

அதே அரசன் மீண்டும் எழுந்தான். ''உண்மைக்கும் பொய்க்கும் உள்ள தூரத்தை நூற்றுக்கு நூறு பங்கு சரியாகச் சொல்ல முடியாது. பெரும்பாலோர் ஏற்றுக் கொள்ளக் கூடிய தூரத்தைச் சொல்ல முடியும். அதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்களா?'' என்று கேட்டான்.

இதைக் கேட்ட அமைச்சர், ''யார் எழுதுகின்ற விடை பொருத்தமாக இருக்கின்றதோ அவர் வெற்றி பெற்றவர் ஆவர்'' என்றார்.

எல்லா அரசர்களும் தாங்கள் பதில் எழுதிய ஓலையை அமைச்சரிடம் தந்தனர்.

அவற்றில், ஓர் அரசன் ஆயிரம் கல் தூரம், இன்னோர் அரசன் நூறு கல் தூரம், மற்றோர் அரசன் நூறு அடி தூரம், வேறோர் அரசன் பத்தடி தூரம் என்றும் எழுதியிருந்தனர்.

விளக்கம் கேட்ட அரசன் மட்டுமே சரியான தூரத்தை எழுதி அதற்கான விளக்கமும் தந்திருந்தான். அவனே எழிலரசியைத் திருமணம் செய்து கொண்டான்.

அந்த அரசன் எழுதிய தூரம் எவ்வளவு? அதற்கான விளக்கம் என்ன?

விடை 75-ஆம் பக்கம்.

# எங்கள் வீட்டு நாய்

நாங்கள் வீட்டில் லேஸி (Lacy) என்று ஒரு நாய் வளர்த்தோம். பெயரில்தான் லேஸியாக இருந்ததே தவிர, படுச் சுட்டி. காலையில் லேஸி முகத்தில் விழித்தால் அன்று முழுவதும் அதிர்ஷ்டம்தான். பள்ளி போகும்போது அவனுக்கு 'டாடா' சொல்லாமல் போனால் அன்று முழுவதும் அவன் என்னவோ போலிருப்பான். திருப்பதிலட்டுத்தான் அவனுக்குப்பிடித்த உணவு. தினமும் தாத்தாவுடன் கோயிலுக்குப் போவான்.

தீபாவளி வந்துவிட்டால் போதும், லேஸி பாடு ஜாலிதான்! வெடி என்றால் பயம்! ஆனால் மத்தாப்பு வாணங்கள் விடும்போது பக்கத்தில் நின்று வேடிக்கை பார்ப்பான். தீபாவளி ஸ்வீட்டை ருசி பார்ப்பான்.

ஆனால் எங்கள் இனிய நண்பன் ஒரு வருடத்திற்கு முன் எங்களை விட்டுப் பிரிந்துவிட்டான். ஆனால், அவனது நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சில் பசுமையாய் நிலைத்திருக்கும்.

— எம். நிர்மலா (520),
சின்னக் காஞ்சிபுரம்.



# கழைக் கூத்தாடி

ந.கி.இராமசாமி



டமடமன்னு வாசலின் முன்பு கொட்டு சப்தம் கேட்டது. வீட்டிற்குள் அமர்ந்து பள்ளிக் கணக்கைப் போட்டுக் கொண்டிருந்த சாந்தி, புத்தகத்தை மூடி வைத்துவிட்டு வாசலுக்கு ஓடி வந்தாள்.

கழைக் கூத்தாடி ஒருவன் நடு ரோட்டில், பழைய அழுக்குத் துணியின் மீது கர்ணம் அடித்துக் காட்டிக் கொண்டிருக்க, அவனது மனைவி சற்று தள்ளி அமர்ந்து, மேளத்தைத் தட்டிக் கொண்டிருந்தாள்.

கூத்தாடி கர்ணம் போடுவதையும், மேளச்சப்தத்தையும்கேட்டு, தெருவில் வருவோர், போவோரல்லாம் கூடி நின்று வேடிக்கைப் பார்க்கலானார்கள்.

சாந்திக்கு அந்தக் கழைக் கூத்தாடியின் சர்க்கஸ் வேலை முதலில்-மிகவும் பிடித்திருந்தது. எனவே ஆர்வம் மிகுதியால், இன்னும் கொஞ்சம் நன்றாகப் பார்க்க வேண்டுமென்று, விறுவிறு என்று மாடிக்கு ஓடிச் சென்று, மாடி ஜன்னல் கதவைத் திறந்து, ஜன்னல் கம்பியில் முகத்தைப் புதைத்து, தன் விழிகளைக் கீழே ஓட்டினாள்.

இப்பொழுது அந்தக் கழைக் கூத்தாடி கர்ணம் போடுவதை நிறுத்தி விட்டு, ஓர் இரண்டு வயதுப் பெண் குழந்தையைக் கைகளில் நிற்கவைத்து,

"பெரியோர்களே, தாய்மார்களே, உங்களுக்கு ஒரு சலாம். இப்போ, இந்தப் பொண்ணை, ஒரு மூட்டையாகக் கட்டி மூடப் போறேன். அப்படியே ஒரு பாட்டுப் பாடப்போறேன். மூட்டைக்குள்ளேருந்து, இவள் பிரமாதமா 'டான்ஸ்' ஆடப் போறா.... பாருங்கள்" என்று சொல்லவும், அவன் மனைவி ஹோவென்று குரல் கொடுத்து டமாரத்தை வெகு வேகமாகத் தட்டினாள்.

. சாந்திக்கு அந்தக் குழந்தையைக் கண்டதும் 'பகீர்' என்றது. பார்க்க ரொம்ப அழகான சுருட்டை முடியுடன், அகல்மான கண்களுடன் இருந்தது. ஒட்டுப் போட்ட சின்ன கவுனை அணிந்திருந்தது.

முகத்தில் பவுடர் போட்டு, கன்னத்தின் இரு பக்கங்களிலும் பெரியதாக கறுப்பு சாந்து இடப்பட்டிருந்தது. வரிசை வரிசையாக இருந்த பற்களையும் பிஞ்சுக் கைகளையும் பார்த்து, சாந்திக்கு அந்தக் குழந்தையின் மீது இரக்கம் பிறந்தது.

கண்ணைத் துடைத்துக்கொண்டு,

மீண்டும் சாந்தி பார்வையைத் திருப்பியபொழுது அந்தக் கழைக் கூத்தாடி, குழந்தையை ஒருசின்ன மூட்டையாகத் துணிக்குள் வைத்துக் கட்டிவிட்டான்.

சிறிய கால்பந்து போல் சுருண்டு கிடந்தாள் அந்தக் குழந்தை.

ஒரு நிமிடம் கழிந்திருக்கும். இப்பொழுது அவன், ஒரு புல்லாங் குழலொன்றை எடுத்து, ஒரு டப்பாங்குத்து ராகத்தை இசைத்தான். அதற்குத் தகுந்த மாதிரி அவன் மனைவி மேளத்தைத் தட்டினாள்.

மூட்டையினுள் குப்புறப்படுத்துக் கிடந்த அந்தக் குழந்தை அந்தப் பாட்டிற்கேற்பத் தவளை போலக் குதிக்க, கூடியிருந்த ஜனங்கள் அந்தக் காட்சியை மிகவும் ரசித்தது.

சாந்திக்குத் துக்கம் ஆறுகப் பெருகலாயிற்று. 'இந்த இரண்டு வயதுக் குழந்தையை மூச்சு முட்ட இப்படி மூட்டையாகக் கட்டி ஆட வைக்கிறானே, பாவி, இவன் நன்றாக இருப்பானா? அந்தக் குழந்தைக்கு 'எவ்வளவு கஷ்டமாக இருக்கும்?' இதை இந்த ஜனங்களும் ரசிக்கிறார்களே! இவர்களில் ஒருத்தருக்காவது மனசிலே இரக்கமென்பதே இருக்காதா?' என்று துடித்த சாந்தி, முருகனை மனக்கண் முன் நினைத்து —

''முருகா, இந்தக் குழந்தைக்கு ஒண்ணும் கஷ்டத்தைக் கொடுக்காமல் காப்பாற்று'' என்றுவேண்டிக்கொண்டாள்.

இதற்குள் அவன் தன் பாட்டை நிறுத்திவிட்டு, குழந்தையிருந்த அந்த மூட்டையின் மீது ஒரு கர்ணம் அடித்துத் தலைகீழாக நின்றான்.

கூட்டம் இதைக் கண்டு கைத்தட்டி ஆரவாரித்தது. சாந்திக்கு உயிரே போய்விட்டது போல் தோன்றியது. கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

இரண்டு நிமிஷம் கழித்து, அந்தக் கழைக் கூத்தாடி, அந்தத் துணி மூட்டையை அவிழ்த்து, அந்தக் குழந்தையைத் தூக்கி, நாலாபக்கமும் நின்ற ஜனங்களிடம் காட்ட —

அந்தக் குழந்தை கூட்டத்திற்கு தன் இரு பிஞ்சுக் கரத்தையும் நீட்டி வணக்கம் சொல்லி, காசு கேட்டது.

'நம்ப அப்பா, அம்மா, நம்ப மீது எவ்வளவு பாசமா இருக்கிறாங்க! கேட்டதெல்லாம் வாங்கித் தர்றாங்க. புத்தகம், பூட்ஸ், சாக்ஸ், வாட்டர் பேக், தினமும் ஸ்கூலுக்குப் போக வர ரிக்ஷா, யூனிபார்ம் எல்லாம் கிடைக்குது. ஆனால் பாவம், இந்தக் குழந்தை சாப்பாட்டுக்காக எவ்வளவு கஷ்டப்படறது. அப்பா வரட்டும். அப்பா கிட்டே சொல்லி, இந்தக் குழந்தைக்கும் ஏதாவது வாங்கித் தரணும்.'

இப்படியாக சாந்தியின் பிஞ்சு மனசு, அந்தக் கழைக் கூத்தாடியின் குழந்தையின் மீது பாசம் வைத்து — சொல்லிக் கொண்டது.

சாந்தி இப்பொழுது கண்ணை விழித்துப் பார்த்தபொழுது, அந்தக் குழந்தை ஒரு கம்பின் மீது மல்லாக்கப் படுத்துக் கொள்ள, அந்தக் கம்பின் அடிப் பகுதியை, அந்தக் கழைக் கூத்தாடி தன் பல்லால் தாங்கிக் கொண்டிருந்தான்.

சுமார் பதினைந்து அடி நீளமுள்ள அந்தக் கழியின் மேல் நுனியில் ஆகாயத்தைப் பார்த்துப் படுத்துக் கொண்டிருந்த அந்தக் குழந்தை, எந்த நிமிஷமும் கீழே விழுந்துவிடும் போல் இருந்தது!

கூட்டத்திலுள்ள பெண்கள் பலருக்கு இந்தக் காட்சி அடி வயிற்றைக் கலக்கியது. ஆண் பிள்ளைகள் ரொம்பவும் ஆர்வமாக இந்தக் காட்சியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

டமாரம் நன்றாகவே முழங்கிக் கொண்டிருந்தது.

மனத்தில் 'திக் திக்' என்று பயம் பிடித்துக் கொள்ள, கண்ணை மூடாமல் சாந்தி பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது —

திடீரென்று அந்தக் கழைக் கூத்தாடி, பல்லிலிருந்த அந்தக் கழியை உதறிவிட்டு, மேலேயிருந்து கீழே விழுந்த அந்தக் குழந்தையைத் தன் கையால் தாங்கிக் கொண்டான்.

ஒரு நொடிப் பொழுதில் நடந்த இந்தச் சம்பவம், அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது. கூட்டம் ஜோராகக் கைதட்டியது.

அந்தக் குழந்தை ஒரு பழைய அலுமினியத் தட்டைக் கையிலெடுத்துக் கொண்டு, காசு கேட்க கூட்டத்தைச் சுற்றி வந்தது.

சிலர் காசு போட்டனர். சிலர் கையை விரித்து விட்டுச் சென்றனர். சாந்தி, கீழே இறங்கி அம்மாவிடம் சொல்லி, ஒரு ரூபாயை வாங்கி அந்தக் குழந்தைக்குக் கொடுத்தாள்.

அன்று மாலே வீட்டுக்கு வந்த சாந்தியின் தந்தை, சாந்தியைத் தேடினர். சாந்தியை வழக்கமாக இருக்கும் இடத்தில் காணவில்லே. மாடிக்குச் சென்றபொழுது, ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து எதையோ பறி கொடுத்தவள்போல் 'சோகமாக' அமர்ந்து கொண்டிருந்த சாந்தியைக் கண்டு பதறிப் போனர்.

"என்னம்மா சாந்தி.... உடம்புக்கு என்ன?" சாந்தியைத் தூக்கிக் கொண்டு பாசத்தோடும், பரிவோடும் கேட்டார்.

சாந்திக்கு அழுகை அழுகையாக வந்தது.

சாந்தியின் தந்தை ஒரு போலீஸ் அதிகாரிதான். எதற்கும் பயப்படாதவர்தான். ஆனல், அவருக்கு சாந்தியின் மீது அளவற்ற பாசம். சாந்தி மனம் வருத்தப்பட்டால், அவருக்குத் தாங்கவே தாங்காது!

சாந்தியைச் சமாதானப்படுத்தி, என்னவிஷயம்என்றுகேட்டபொழுது திக்கி.... திக்கி.... அந்தக் கழைக் கூத்தாடியின் குழந்தையைப் பற்றிச் சொல்லி, அந்தக் குழந்தைக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று இரக்



# புதிர்க்கதை-7 விடை:

''உண்மைக்கும் பொய்க்கும் உள்ள தூரம் நான்கு விரற்கிடை தூரமாகும்.
கண்ணால் காண்பது மெய். காதால் கேட்பது பொய். கண்ணுக்கும் காதுக்கும் இடையே உள்ள தூரம் நான்கு விரல்களுக்கிடையே உள்ள தூரமே!
ஆகவே உண்மைக்கும் பொய்க்கும் உள்ள தூரம் நான்கு விரற்கிடை தூரமாகும்.''

கத்தோடு கேட்டுக் கொண்டாள்.

''இவ்வளவுதானே. இப்பவே போய் அந்தக் குழந்தைக்குப் பணம் துணிமணி கொடுத்துட்டு வரலாம். நீயும் வா.'' என்று சொன்னவுடன் சாந்தி ஆசையுடன் தலையை ஆட்டினாள்.

போலீஸ் உடையிலிருந்த சாந்தியின் தந்தை, யூனிபார்மைக்கூடக் கழற்றாது, சாந்தியை அழைத்துக் கொண்டு உடனடியாக ஜீப்பில் ஏறி, அந்தக் கழைக் கூத்தாடியைத் தேடிப் புறப்பட்டார்.

அந்த ஊருக்கு வெளியேயுள்ள மண்டபத்தின் ஓரத்தில், அந்தக் கழைக் கூத்தாடி இருப்பது தெரிந்தது.

ஜீப்பை நிறுத்திவிட்டு, சாந்தியின் கையைப் பிடித்துக்கொண்டு அந்த மண்டபத்தை நோக்கி சாந்தியின் தந்தை வருவதைப் பார்த்து, அந்தக் கழைக் கூத்தாடி அலறி ஓடினான்.

போட்ட சாமானை அப்படியே போட்டுவிட்டு, அவன் மனைவியும் அவன் பின்னே ஓட, அந்தக் குழந்தை மட்டும் தனியே நின்றுகொண்டு பரிதாபமாக அழ ஆரம்பித்தது.

எதற்காகத் தன்னைக் கண்டு அந்தக் கழைக்கூத்தாடியும், அவன் மனைவியும் ஓடவேண்டும்?

தான் போலீஸ் அதிகாரியின் உடையில் இருப்பதால், பயந்து ஓடுகிறார்கள் என்று நினைத்தாலும், எதற்காக இந்தக் குழந்தையை விட்டுவிட்டு ஓட வேண்டும் என்று அவருக்குச் சந்தேகம் வந்தது.

சாந்தியை அங்கேயே நிற்கச் சொல்லி, தான் ஒரே ஓட்டமாக ஓடினார். அடுத்த ஐந்து நிமிடத்தில் அந்தக் கூத்தாடியைக் கையோடு இழுத்துக் கொண்டு வந்தார்.

''என்னை விட்டுடுங்க, இனிமே இந்த மாதிரி தவறு செய்யமாட்டேன். என்னை விட்டுடுங்கோ'' என்று கதறினான் அந்தக் கூத்தாடி.

சாந்திக்கு ஒன்றும் புரியவில்லை. அந்தக் குழந்தை இதற்குள் சாந்தியிடம் ஒட்டிக் கொண்டது.

சாந்தியின் தந்தை ஒரு முறை முறைக்க, அந்தக் கூத்தாடியும் அவன் மனைவியும் பயந்தபடி ஜீப்பில் ஏற, சாந்தியையும், அந்தக் குழந்தையையும் அழைத்துக் கொண்டு சாந்தியின் தந்தை ஜீப்பை ஓட்டினார்.

ஜீப் போலீஸ் ஸ்டேஷன் முன்னால் நின்றது.

போலீஸ் ஸ்டேஷனுள் கைகட்டி நின்று, அந்தக் கழைக் கூத்தாடி வாக்கு மூலம் ஒன்று சொன்னான்.

''இந்தக் குழந்தை என்னுடையதல்ல. நரசம்பேட்டை என்னும் கிராமத்திலிருந்து மூன்று மாதங்களுக்கு முன்பு தூக்கிக்கொண்டு வந்தேன். பிழைப்புக்காக இந்தக் குழந்தையைக் கொண்டு வந்து பழக்கினேன்.''


எல்லோருக்கும் இதைக் கேட்டு ஆச்சரியம்.

சாந்தியின் தந்தை, நரசம்பேட்டைக்கு ஆள் அனுப்பி, அந்தக் குழந்தையின் உண்மையான 'பெற்றோரை அழைத்து வரச் சொல்லி, அந்தக் குழந்தையை அவர்களிடம் ஒப்படைத்தார். குழந்தையைக் காணமல் துடித்துக் கொண்டிருந்த அந்தப் பெற்றோர்கள் அதிக மகிழ்ச்சி அடைந்தார்கள்.

''எல்லாம் சாந்தி செய்த முயற்சிதான். இல்லை என்றால் ஒரு பெரிய 'குழந்தைத் திருட்டை' என்னால் கண்டு பிடித்திருக்க முடியாது'' என்று பெருமை பொங்க எல்லோரிடத்திலேயும் சொல்லிக் கொண்டிருந்தார், போலீஸ் அதிகாரியான சாந்தியின் தந்தை.

ஒரு குழந்தையைக் காப்பாற்றியதற்காக, மனத்திற்குள் 'முருகனை' வணங்கிக் கொண்டிருந்தாள் சாந்தி!

# புதைத்து வைத்த செம்பு




பழைய கதை;


புதிய பாடல்

அந்தணர் ஒருவர் அதிகா லேயிலே
   ஆற்றில் குளிக்கச் சென்றனராம்.
அவரது கையில் இருந்த செம்பை
   ஆற்றின் மணலில் புதைத்தனராம்.
அந்தஇ டத்தில் மணலேக் குவித்தே
   அடையா ளம்என வைத்தனராம்.
அதனைப் பார்த்தவர் கோபுரம் இதுபோல்
   அமைப்பது 'சாஸ்திரம்' என்றனராம்.

அந்தணர் ஆற்றில் இறங்கிக் குளித்திட
   அவர்போல் கையில் செம்புடனே
வந்தவர் பலபேர் மண்ணில் செம்பை
   மறைத்துமே கோபுரம் அமைத்தனராம்.
இந்தக் காட்சியை அந்தணர் கரையில்
   ஏறி வந்ததும் கண்டனராம்.
சிந்தனை செய்தும் செம்புள்ள இடமே
   தெரியா ததனுல் திகைத்தனராம்.

கரையில் கட்டிய கோபுரம் அனைத்தும்
   கலேத்துத் தேடிட முயன்றனராம்
கண்டு பிடித்திட வில்லே. மேலும்
   கலேப்பதை மற்றவர் பார்த்தனராம்
விரைந்தே வந்து, "பிறரது செம்பை
   விரும்பித் தோண்டி எடுப்பதுவோ!
மிகவும் மோசம்" என்றதும் அந்தணர்
   வெறுங் கையுடனே திரும்பினராம்!

# ஆடாமல் அசையாமல்



# 12 மணி நேரம்!

சென்னை சின்மயா வித்யாலயாவில் ஒரு கண்காட்சி நடந்தது. அதிலே வட இந்தியா சம்பந்தமான பிரிவில், 'மீரா'வைப் போலவே வேடமணிந்து, கண்காட்சி நடந்த இரண்டு தினங்களிலும் கையில் தம்பூரா ஏந்தி அசையாமல் உட்கார்ந்திருந்தாள் ஒரு மாணவி. இரண்டு நாட்களிலுமாகச் சேர்த்து அவள் அப்படி இருந்தது, சுமார் 12 மணி நேரம். சிலை போல உட்கார்ந்திருந்தது பற்றிச் சொன்னாள், 'சங்கீதா' என்கிற அந்த எட்டாம் வகுப்பு மாணவி:

இந்த வருஷம் ஸ்கூலில் ப்ராஜக்ட் எக்ஸிபிஷனில் புதுமையான விஷயம் உயிருள்ள மாடல்கள். 'பக்த மீரா மாடலுக்கு ஒரு மாணவி தேவை. உனக்கு அது பொருத்தமாய் இருக்கும். செய்கிறாயா?' என்று கேட்டதும், நான் 'சரி' என்று தலையை ஆட்டினேன்.

எக்ஸிபிஷன் தினத்தன்று என் அக்கா ஷர்மிளாவும் நானும் ஸ்கூலின் பக்கத்திலேயே இருக்கும் மியூஸிக் மிஸ் வீட்டிற்குப் போய்விட்டோம். அங்கே மேக்அப் போட்டுக் கொண்டு ஸ்கூலுக்குப் போனோம்.

நான் ஓர் இடத்திலே, கையில் தம்பூராவுடன் சப்பணமிட்டு உட்கார்ந்து, கண்களை மூடிக் கொண்டு விட்டேன். பக்கத்திலே மீரா பொம்மை ஒன்று வைத்திருந்தார்கள். எக்ஸிபிஷனைத் துவக்கி வைத்த ஃபாதர், 'யூ ரியலி லுக் லைக் மீரா' என்று பாராட்டினார். குலபதி பாலகிருஷ்ண ஜோஷி கண்களை மூடிக் கொண்டு, மீரா ஸ்லோகங்களைக் கைகூப்பியபடி சொல்ல ஆரம்பித்துவிட்டார்! சில பேர், "மீரா! ஒரு பஜன் பாடுங்களேன்!" என்றனர். எனக்கோ பாடத் தெரியாது. குறைந்தது மீரா பஜன்ஸ் கேஸட்டாவது போட்டிருக்கலாமே என்று தோன்றியது.

"இரண்டு நாட்கள் அசையாமல் உட்கார்ந்திருந்தால் வலி எடுக்கவில்லையா?" என்று சங்கீதாவைக் கேட்டேன்.

சங்கீதா சொன்னாள்: "அந்தப் பெரிய வெள்ளை நூல் சேலையை உடல் முழுக்கச் சுற்றிக் கொண்டு தலையையும் சேர்த்து மூடிக் கொண்டு, கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்ததுமே வியர்த்துக் கொட்டி, கசகசவென்றாகிவிட்டது. போதாக்குறைக்கு கால்களும், கைகளும் மரத்துப் போய்விட்டன! சரியான வலி. ஆனாலும் பொறுத்துக் கொண்டேன். அம்மாதான் மாலையில் இரண்டு நாளும் ஒத்தடம் கொடுத்தார்."

சங்கீதாவின் அப்பா ஒரு பாங்க் அதிகாரி. மீரா வேடமணிந்து உட்கார்ந்திருந்ததை, தனது அப்பா பார்க்க முடியாமல் போய்விட்டது குறித்து சங்கீதாவுக்குக் கொஞ்சம் வருத்தம் தான். காரணம், அவருக்கு வேலை ஆரணியில். வாரக் கடைசிகளில் தான் சென்னை வருவாராம்.

தகவல்: மௌஷ்மி

# உருவகக் கதைகள்

-குருஸ்ரீ-

## பருத்தியும் வேம்பும்



ஒரு வளமான புன்செய் நிலம். அதில் பருத்திச் செடிகள் செழித்து வளர்ந்திருந்தன. ஒருநாள் காலை நிலத்தின் சொந்தக்காரன் களைக்கொட்டுடன் அங்கே வந்தான். ஒருபுறமாக இருந்த களைகளை வெட்டியெறியத் தொடங்கினான்.

அதைக் கண்டு பயந்த ஒரு சிறிய பருத்திச் செடி அருகிலிருந்த பெரிய செடியைப் பார்த்து, ''ஐயோ, நம்மை எல்லாம் இவன் வெட்டி அழிக்கப் போகிறான் போலிருக்கிறதே!'' என்று நடுங்கியவாறு கூறியது.

அதன் அச்சத்தை அறிந்த பெரிய பருத்திச் செடி, ''ஏன் வீணாகப் பயப்படுகிறாய்? இவன் நம்மை ஒன்றும் செய்ய மாட்டான். நமக்கு இடைஞ்சலாக முளைத்திருக்கும் களைகளை வெட்டி நம் இனத்திற்கு நன்மை செய்ய வந்திருக்கிறான்'' என்று தைரியம் சொல்லியது.

அந்தச் சொற்களால் அச்சம் நீங்கிய சிறிய பருத்திச் செடி தனக்கு அருகில் முளைத்து வளர்ந்து கொண்டிருந்த வேப்பஞ்செடி ஒன்றை இளக்காரமாகப் பார்த்து, ''பாவம், ஏ, வேப்பஞ் செடியே! நீ இன்னும் சிறிது நேரத்தில் வெட்டப்பட்டு அழியப் போகிறாய்'', என்று பொய்ப் பச்சாதாபத்துடன் கூறியது.

பருத்திச் செடியின் உரையைக் கேட்ட வேப்பங்கன்று கொஞ்சமும் பயப்படாமல், ''என் தலைவிதி அது தான் என்றால் யார் அதைத் தடுக்க முடியும்? நடப்பது நடக்கட்டும்'' என்று சொல்லிவிட்டுச் சஞ்சலப்படாமல் தலை நிமிர்ந்து நின்றது. ஆபத்தை அறிந்தும், அலட்டிக் கொள்ளாமல் அசட்டுத் தைரியத்துடன் பேசுகிறதே! என்று பருத்திச் செடி வேப்பங்கன்றின் மீது எரிச்சலும் சினமும் கொண்டது.

களைகளை வெட்டி வீழ்த்திக் கொண்டு வந்த உழவன், மற்ற பூண்டுகளை வெட்டிவிட்டு வேப்பங்கன்றை வெட்டாமல் ஒதுக்கிவிட்டு அப்பால் நகர்ந்து போய்த் தனது வேலையைத் தொடர்ந்தான்.

பருத்திச் செடி வேப்பங்கன்றைப் பொறாமையோடு பார்த்து, ''ஏதோ நிலத்துக்காரன் கண்களுக்குப் படாமல் இம்முறை எப்படியோ தப்பித்துவிட்டாய்! அடுத்த களை வெட்டும்போது நீ அழியப் போவது திண்ணம்'' என்று ஆணவம் தொனிக்க எச்சரித்தது. அதன் மன நிலையை நன்கு புரிந்து கொண்ட வேப்பங்கன்று அவ்வார்த்தைகளைச் சட்டை செய்யவில்லை.

ஐந்தாறு மாதங்கள் அகன்றன. பருத்திச் செடிகள் பலன் கொடுப்பது ஓய்ந்தது. அந்த நிலத்தில் வேறு பயிரைச் சாகுபடி செய்ய விரும்பிய உழவன், நிலத்தின் ஒரு பக்கமாக இருந்து அச்செடிகளைப் பிடுங்கிக் கீழே போட்டுக் கொண்டு வந்தான். அவனது வேலைக்காரனும் அவனுடன் சேர்ந்து அவ்வேலையில் ஈடுபட்டிருந்


தான். முன்பு பயந்து நடுங்கிய பழைய பருத்திச் செடி தன் அருகிலிருந்த மற்ற செடிகளைப் பார்த்து, ''ஐயோ, போனமுறை கிளைகளை மட்டும் வெட்டிய உழவன் இன்று நம் இனத்தை அடியோடு அழித்துக்கொண்டல்லவா வருகிறான்!'' என்று கூக்குரல் இட்டது. அதற்கு மற்ற செடிகள், ''நமக்கு ஆயுள் அவ்வளவுதான்!'' என்று நிதானமாகக் கூறிவிட்டு வருகின்ற ஆபத்தை எதிர்நோக்கி நின்றன. உடனே அஞ்சி நடுங்கிய அப்பழைய செடி வேப்பங் கன்றைப் பார்த்து, ''எங்களோடு நீயும்தான் அழியப் போகிறாய். இப்போதுகூட உனக்குப் பயமில்லையா?'' என்று வியப்போடு வினவியது.

''பிறந்தவர்கள் எல்லோரும் ஒரு நாள் இறந்துதானே ஆக வேண்டும்? நான் எதையும் ஏற்கத் தயார்'' என்று தைரியமாகத் தத்துவம் பேசியது.

பருத்திச் செடிகளை வெட்டி வீழ்த்திக் கொண்டு வந்த உழவன் வேப்பங் கன்றை நெருங்கியதும் நிமிர்ந்து நின்று தன் வேலையாளைப் பார்த்தான். ''இந்தாப்பா, இந்த வேப்பங் கன்றை வெட்டிவிடாதே! இது வளர்ந்து நிழல் தரும் மரமாகட்டும். மறந்துவிடாமல் இதற்கு வேலி கட்டு!'' என்று ஆணையிட்டான்.

தனக்குவருவதுதெரியாமல்பிறரை எச்சரித்த அந்தப் பருத்திச் செடி, வேப்பங் கன்றினுக்கு வந்த வாழ்வை நினைத்துப் பொறுமையால் புழுங்கிய வாறு வாடி வதங்கி உயிர்விட்டது!

## பசுவும் காளையும்



வயலில் வேலை செய்த களைப்போடு வீடு திரும்பிய காளை மாட்டை உழவன் கொட்டிலில் கட்டினான். உலர்ந்த வைக்கோலை அள்ளி அதற்குத் தீவனமாகப் போட்டான். பக்கத்தில் படுத்திருந்த பசுவைத் தட்டி எழுப்பி அதற்குப் பச்சைப் புல்லைப் போட்டான்.

பசுவுக்குப் போடப்பட்ட பசும் புல்லைப் பார்த்ததும் காளையின் நாக்கில் எச்சில் ஊறியது. உழவன் மீது ஆத்திரமும் எழுந்தது. 'இவன் கொஞ்சம்கூட நன்றி இல்லாதவன்' என்று மனத்திற்குள் கருவி வெதும்பியது. அதனால் அவன் போட்ட வைக்கோலை முகர்ந்துகூடப் பார்க்காமல் படுத்துக்கொண்டது.

அதைக் கண்ட பசு காளையைப் பார்த்து, ''ஏன் தீனியைத் தொடாமல் படுத்துவிட்டாய்? பசி இல்லையா?'' என்று பரிவுடன் கேட்டது.

பசுவின் சொற்களால் எரிச்சல் அடைந்த காளை, ''நீ உன் வேலையைப் பார்! தினமும் பசும் புல் தின்கிறோம் என்ற ஆணவமா?'' என்று கத்தியது.

''என் மீது ஏன் இவ்வளவு ஆத்திரம்? நான் இப்போது என்ன தவறாகக் கேட்டுவிட்டேன்?'' என்று சாந்தமாகக் கேட்டது பசு.

''வீட்டில் படுத்துக் கிடக்கும் உனக்குச் சுவையான தீனி! கடுமையாகப் பாடுபடும் எனக்குக் காய்ந்த வைக்கோற்புல்லா? உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. நம்க்குள் பாரபட்சம் காட்டும் அந்த முட்டாள் எஜமானனைச் சொல்ல வேண்டும்!'' என்று உழவனைச் சபித்தது.

''நீ வியர்வை சிந்த உழைப்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால், நான் எனது இரத்தத்தைப் பாலாக்கி இந்த வீட்டிற்குக் கொடுக்கிறேன் என்பதை நீ மறந்துவிட்டுப் பேசாதே!''

# முயற்சி!

இ.ஜெ.தீன்

இருவினைகள் விட்டுவதும்
இறைமையினல்தான் — அந்தத்
இறைமையினை எட்டுவதும்
முயற்சியினல்தான்!
வரும் தடைகள் அத்தனையும்
பொடியாகுமே — இங்கு
வெற்றிபெற நம்பிக்கையே
துணையாகுமே!

உழைப்பாலே நினைப்பெல்லாம்
உருவாகுமே — மனம்
உறுதிப்பட்டால் தெய்வம்வந்து
வரம் கூறுமே!
சளைக்காமல் எதிர்நீச்சல்
போட்டோமானல் — அந்தச்
சமுத்திரமும் ஓடையாக
உருமாறுமே!

தோல்விகள் வந்துநின்று
சோதிக்கலாம் — அந்தச்
சோதனையை எதிர்த்து
நின்முல் சாதிக்கலாம்!
மேனியது நோகநித்தம்
பாடுபட்டாலே — இங்கு
மேன்மையான வாழ்வடைந்து
பிரகாசிக்கலாம்!



என்று பொறுமையாகத் தனது உரிமையை நிலை நாட்ட முயன்றது பசு.

"ஆண்டு முழுவதும் அயராது உழைக்கும் நான் எங்கே? சோம்பேறியாகப் படுத்துக் கொண்டு வெறும் பால் மட்டும் தரும் நீ எங்கே?" என்று ஏளனமாகக் கேட்டது காளை.

"காளையே உன் உழைப்பின் பலனை ஒரு வருடத்திற்குப் பிறகு விளைச்சலாகப் பெறுகிருன் உழவன். ஆனல், எனக்கு அவன் போடும் தீனிக்கான லாபத்தை ஒரு நாளில் இரண்டு முறை பாலாகப் பெற்றுவிடுகிருன். 'நாளை பெறப்போகும் பலாக்காயைவிட இன்றுகிடைக்கும்களாக்காய்பெரிது' என்பதை நம் எஜமானன் நன்கு அறிவான். அந்த லாபத்தை மனத்தில் வைத்துத்தான் எனக்குப் பசும்புல் தீவனம் தருகிருன். தெரிந்து கொள்!" என்று பசு நிதானமாகக் கூறியது.

பசுவின் வாதம் காளையின் பிடிவாதத்தை மாற்றவில்லை. அது வைக்கோலைத் தின்னமல் படுத்துக் கொண்டது. அப்போது அங்கே வந்த உழவன், காளை தீவனம் எடுக்காமல் படுத்துவிட்டதைப் பார்த்து அதன் மேல் பரிவு கொண்டான். பழைய வைக்கோலை அப்புறப்படுத்திவிட்டு, பசுவுக்குப் போட்ட அளவு சிறிது பசும்புல்லை அள்ளிப் போட்டான். காளை உடனே எழுந்து ஆவலாக அதைத் தின்னத் தொடங்கி இரண்டே நிமிடங்களில் உண்டு முடித்தது. அதன் பசி சிறிதும் அடங்கவில்லை. அதனல் அது பசுவை நோக்கி, "எனக்குப் போட்ட பசும்புல் ஒரு வாய்க்குக்கூட பற்றவில்லை. உனக்கும் அதே அளவுதானே போடுகிருன்? அது உனக்குப் போதுமா?" என்று வியப்போடு வினவியது.

"நீ கேட்டது நியாயமான கேள்விதான். வீட்டில் படுத்துக் கிடக்கும் எனக்கு இந்த இளந்தீனி போதுமானது. ஆனல், அலுக்கப் பாடுபடும் உனக்கு இது போதுமா? அதனல்தான் உனக்கு முரட்டுத் தீனியாக நிறைய வைக்கோல் போடுகிருன்" என்று வினயமாகப் பசு கூற, காளை உண்மையை உணர்ந்து திருந்தியது.

# இதோ ஒரு வீரன்



## கமலநாதன்

"கேட்டீங்களா செய்தியை... உங்க பையன் ஸ்கூலிலே இன்னைக்கு பெரிய வீரனாக நடந்து கொண்டிருக்கான்."

சங்கர் அலுவலகத்திலிருந்து வந்தவுடன் அவர் மனைவி சரஸ்வதி சொன்னாள்.

"என்ன சரஸ்.... என்ன விஷயம்? சொல்லேன்."

"அவனையே கேளுங்க.... சொல்வான்."

"என்ன பாஸ்கர்... ஸ்கூலில் என்ன நடந்தது?"

ஐந்தாம் வகுப்பில் படிக்கும் பாஸ்கர், 'சொல்லலாமா, வேண்டாமா' என்று தயங்கியபடி நின்றான்.

"சொல்லு பாஸ்கர்.... என்ன ஆச்சு?"

"ஒண்ணுமில்லையப்பா. இன்னைக்கு காலையிலே ஸ்கூலிலே பரீட்சை. என்னை வேறு ஒரு கிளாஸ் ரூம்லே உட்கார வச்சிருந்தாங்க. எனக்குப் பக்கத்திலே ஒரு எட்டம் கிளாஸ் படிக்கிற பையன்" என்று சொல்லி நிறுத்தினான் பாஸ்கர்.

"ம்.... மேலே சொல்லு."

"அந்தப் பையன் பரீட்சை எழுதிக் கொண்டிருந்தபோது சட்டைப் பையில் இருந்து ஒரு துண்டுத் தாளை எடுத்து, அதைப் பார்த்துக் காப்பியடித்து பரீட்சை எழுத ஆரம்பித்தான். நான் அதைப் பார்த்தவுடன் எழுந்து,




"சார், சார், இந்தப் பையன் காப்பியடிக்கிறான்" என்று சொல்லிவிட்டேன். உடனே ஆசிரியர் அவனைப் பிடிச்சு அடிச்சு ஹெட்மாஸ்டர்கிட்டே ரிப்போர்ட் செய்தார். ஹெட்மாஸ்டர் வந்து அவனுக்கு ரெண்டு அடி கொடுத்து அவனை பரீட்சை எழுத விடாமல் வீட்டுக்கு அனுப்பி அவனுடைய அப்பாவை அழைச்சுக்கிட்டு வரச் சொன்னார்."

சங்கர் தன் மகனைப் பெருமிதத்தோடு பார்த்தார். 'எப்படிப்பட்ட காரியம் செய்திருக்கிறான்! இந்தச் சிறு வயதிலேயே என்ன கடமையுணர்வு! அக்கிரமம் நடக்கிறது என்று தெரிந்தவுடன் அதற்கு எதிர்க் குரல் கொடுக்க வேண்டும் என்று தோன்றி இருக்கிறதே!' அவனைப் பாராட்ட வேண்டும் என்று நினைத்தாலும் ஏதோ ஒன்று அவரைத் தடுத்தது.

"அப்புறம் என்னாச்சு பாஸ்கர்?"

"அந்தப் பையன் போன பிறகு என்னோட கிளாஸ்லே இருந்த பையன்கள், 'டேய் பாஸ்கர், நீ ஒரு ஹீரோடா!' ன்னாங்க. ஆனால் சில பேர், 'டேய் நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போறதுதானே. அநியாயமா அந்தப் பையனைக் காட்டிக் கொடுத்து அடி வாங்கிக் கொடுத்திட்டியே' ன்னாங்க.

பள்ளிக்கூடத்தில் மேற்கொண்டு என்ன நடந்தது என்று மனைவியிடம் விசாரித்தார் சங்கர். அவள் சொன்னாள்:

"பரீட்சை முடிந்து குழந்தையை அழைக்க ஸ்கூலுக்குப் போனேன். ஸ்கூல் பூரா இவனைப் பத்தித்தான் பேச்சு. ஆனாலும் சில பேரு, 'இந்தப் பையன் சொன்னதும் வாத்தியார் உடனே அந்தப் பையனைக் கண்டிச்சு விட்டிருக்கலாம். ஹெட்மாஸ்டர் கிட்டே சொல்லணும்னு அவசியமில்லே.... அதோட அவனைப் பரீட்சை எழுதவிடாமல் வீட்டுக்கு வேறே அனுப்பிச்சிட்டாங்க.... ஒருத்தனோட எதிர்காலம் இதனால் பாதிக்கப்பட்டால்....?' என்று அபிப்ராயப்பட்டாங்க."

அம்மாவின் பேச்சைக் கேட்டு அப்பாவுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. பாஸ்கரைப் பாராட்ட நினைத்த போது தடுத்த ஏதோ ஒன்று என்ன என்பது அவருக்கு இப்போது புரிந்தது.

அதுதான் பயம். அந்த மாணவனால் தன் மகனுக்கு ஏதாவது தொல்லைகள் வந்தால், என்ன செய்வது என்ற பயம்! பாதிக்கப்பட்ட அந்தச் சிறுவனின் தந்தை, பணமும் பதவியும் உள்ளவராக இருந்துவிட்டால், அவரால் ஏற்படும் தொல்லைகளை எப்படிச் சமாளிப்பது என்ற பயம்! தனியாகப் போகும்போது தன் மகனை அந்தப் பையன் நாலைந்து பேர்களுடன் வந்து மிரட்டினால்....? எங்கேயாவது ஒளிந்து கொண்டு பாஸ்கர் மேல் கல்லை விட்டு எறிந்தால்....?

யோசிக்க யோசிக்க பாஸ்கர் செய்த செயலைப் பாராட்டத் தோன்றவில்லை சங்கருக்கு. ஊர் வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறான் என்றே தோன்றியது. பரீட்சை முடியும் வரை தன் மனைவியைப் பாஸ்கருடன் கூடவே பள்ளிக்கு அனுப்பி, பரீட்சை முடிந்தவுடன் அழைத்து வரச் சொன்னார். அப்புறமும், துணையில்லாமல் பாஸ்கரை அவர் பள்ளிக்கு மட்டுமல்ல; வேறு எங்குமே அனுப்புவதில்லை.

அடுத்த பரீட்சை வந்தது.

பாஸ்கர் ஸ்கூலுக்குப் போகத் தயாராகிக் கொண்டிருந்தான். அவனைக் கூப்பிட்டார் சங்கர்.

"டேய் பாஸ்கர்.... பரீட்சை எழுதற போது பக்கத்திலே இருக்கிற பையன் காப்பியடித்தால் நீ ஆசிரியரிடம் அவனை காட்டிக் கொடுக்காதே.... அவன் காப்பியடிச்சால் அதைக் கண்டு பிடிக்கிறது ஆசிரியருடைய வேலை.... நீ உன்னோட வேலையைப் பார். நீ பரீட்சையை நல்லா எழுதிட்டு வா.... வேறே என்ன நடந்தாலும் அதிலே நீ தலையிடாதே."

அப்பாவின் எச்சரிக்கையைக் கேட்டுக்கொண்டே ஸ்கூலுக்குப் புறப்பட்டான் பாஸ்கர்.

'அநியாயத்தைக் கண்டால் எதிர்க்கப்படாதாம்! அக்கிரமங்களைக் கண்டால் சகித்துக் கொள்ளணுமாம்! அதைக் காணாததுபோல் நடிக்கணுமாம்! சுற்றி நடப்பது எதிலும் பங்கு கொள்ளாமல், கண்களை மூடிக் கொண்டு இருக்கணுமாம். சே, அப்படி ஒரு கோழையாகவா வாழ்வது? ஒருநாளும் மாட்டேன்!'

தன்னையும் அறியாமல் மனத்தில் எழுந்த போராட்டங்களுக்கு 'மாட்டேன்' என்ற அறிகுறியாகத் தலையை ஆட்டினான் பாஸ்கர்.

பரீட்சை எழுத உட்கார்ந்தான்.

அரைமணி நேரம் ஆகி இருக்கும்.

பக்கத்தில் இருந்த பையன், பையில் இருந்து ஒரு துண்டுத் தாளை எடுத்து வைத்துக் கொண்டு, அதைப் பார்த்து எழுத ஆரம்பித்தான்.


'டீச்சரிடம் சொல்லலாமா வேண்டாமா?'—அப்பா சொன்ன அறிவுரை நினைவுக்கு வந்தது.


'சொல்லியே தீர வேண்டும்' என்ற வேகம் அவனுள் எழுந்தது.

உரத்த குரலில் அவன் சொன்னான், "சார், சார், இதோ இவன் காப்பியடிக்கிறான் சார்."

உடனே ஆசிரியர் அந்தப் பையனை நோக்கி விரைந்து வந்தார்.

## ஓவியராகலாம்







கேரம் போட்டிகள் நடக்கும் களம்.

# மழைக் காலத்துக்கு ஒரு விளையாட்டு!

குண்டுமணி

"ஒரே மழை. வீட்டில் போரடிக்கிறது! என்ன செய்யலாம்! பொழுது போகவில்லையே?" என்று தவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு வீட்டுக்குள் விளையாடும் கேரம் கைகொடுக்கும். நாலு பேர் அமர்ந்து இரட்டையர் ஆட்டத்தில் ஈடுபடலாம். இரண்டே பேர்களிருந்தால் தனிநபர் ஆட்டத்தில் மூழ்கலாம். ஒன்பது கறுப்புக் காய்களும் ஒன்பது வெள்ளைக்காய்களும், ஒரு சிவப்புக் காயும், ஆடுவதற்கு ஒரு ஸ்டிரைக்கரும் தேவை. சிவப்புக் காய்க்கு ஐந்து பாயிண்டுகள் உண்டு. வெள்ளைக் காய்க்கு இரண்டு பாயிண்ட்டுகள். கறுப்புக் காய்க்கு ஒரு பாயிண்டு. 29 பாயிண்ட்கள் ஆடினால் ஒரு 'கேம்' முடியும்!

தமிழகத்தில் இந்தியாவின் முதல் ராங்க் ஆட்டக்காரர் மரிய இருதயம். பதினாறு வருஷங்களாகக் கேரம் ஆட்டத்தில் ஈடுபடும் மரிய இருதயம் சென்னை சுங்க இலாகாவில் பணிபுரிகிறார். 1979ம் வருஷம் கோயமுத்தூரில் நடைபெற்ற அகில இந்திய கேரம் போட்டியில் வெற்றியைப் பெற்றுத் தம் பெயரை நிலை நிறுத்தினார். அதே வருஷம் இலங்கைக்குச் சென்று தமிழகக் குழுவுக்காக ஐந்து டெஸ்ட் பந்தயங்களில் பங்கேற்றார். 1982ம் வருஷம் இவருக்குத் தமிழக சாம்பியன் பட்டம்கிடைத்தது. 1982ம் வருஷமே இவருக்குத் தேசிய சாம்பியன் பட்டம் கிடைக்கப் பெற்றுப் புகழேணியில் உயர்ந்தார். இவருக்கு வயது 29 ஆகிறது. இன்றும் தேசிய சாம்பியன் விருதைத் தக்க வைத்திருக்கும் மரிய இருதயம் ஸ்விட்ஜர்லாந்தில் ஜூரிச்சில் நடைபெறும் உலகப் போட்டியில் பங்கேற்கச் சென்றிருக்கிறார். சர்வதேசப் பந்தயத்தில் மரிய இருதயம் இந்தியாவின் புகழை உயர்த்துவார் என்று எதிர்பார்ப்போம்.

ஆந்திரப் பிரதேசத்தில் மின் இலாகாவில் பணியாற்றுபவர் நிஸ்ஸார் அகமது. ஏழு வயதில் கேரம் விளை

யாட்டில் மனத்தைச் செலுத்திய நிஸ்ஸார் அகமது 1980ம் வருஷம் தேசிய சாம்பியன் பட்டத்தைப் பெற்ருர். 1983ம் வருஷம் நிஸ்ஸார் அகமதுக்கு தேசியப் போட்டியில் இரண்டாவது இடம் கிட்டியது.

மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த அருண் ரமாகாந்த கேதார் ஏழு வயதில் கேரம் ஆட்டத்தைத் தொடங்கியவர். 1982—83 மகாராஷ்டிர சாம்பியன் விருதினைப் பெற்ற அருண் ரமாகாந்த் கேதார் மகாராஷ்டிர வங்கியில் பணி புரிகிருர். இந்தியாவின் ராங்கிங்கில் இவருக்கு மூன்ருவது இடம் கிடைத்திருக்கிறது.

ஸ்விட்ஜர்லாந்தில் நடைபெறும் போட்டிகளுக்கு இந்தியாவின் சார்பில் கலந்து கொள்ளும் இந்தியாவின் இந்த மூன்று நட்சத்திரங்களும் வெற்றி தேடித்தர வாழ்த்துவோம். இவர்களது டிமான்ஸ்டிரேஷன் ஆட்டங்களை ஸ்விட்ஜர்லாந்து, மேற்கு ஜெர்மனி டீ.வி. நிறுவனங்கள் ஒளிபரப்ப விருக்கின்றன. இந்த மூவர் கேரம் குழுவுக்கு Chief demission, ஆகச் செல்பவர் இந்திய கேரம் பெடரேஷனின் காரியதரிசி பங்காரு பாபு. இந்தியாவில் கேரம் ஆட்டத்துக்குப் பிராபல்யம் தேடித் தருவதற்கு அல்லும் பகலும் பாடுபட்டு வருபவர். இன்று கேரத்துக்குச் சர்வதேச அந்தஸ்து



ஹேமா சந்தானம்.



அருண் கேதார்.

கிடைப்பதற்கு இவரது அரிய சேவைகள் அடிக்கற்களாக அமைந்துள்ளன.

சிறுமிகளின் முணுமுணுப்பு காதில் கேட்கிறது. தமிழகத்தில் கேரம் ஆட்டத்தில் தலை சிறந்த பெண்மணி இல்லையா என்று கேட்பது தெரிகிறது. இதோ ரிஸர்வ் வங்கியில் பணிபுரியும் ஹேமா சந்தானம் தமிழகக் கேரம் போட்டிகளில் பல வெற்றிகளைச் சம்பாதித்தவர். ரிஸர்வ் வங்கியில் பணி புரியும் ஹேமா இந்தியன் பொட்டாஷ் நிறுவனம் நடத்திய போட்டியில் 'வெள்ளை சதம்' போட்ட முதல் தமிழகப் பெண்மணி என்ற புகழைப் பெற்றிருக்கிருர். இவர் அதலெடிக் சாம்பியனுகை விளங்கியிருக்கிருர். இவர் கேரம் போட்டியில் இந்திய வரிசையில் ஏழாவது இடத்தைப் பெற்றிருக்கிருர். ஸ்ரீமதி ஹேமாவின் லட்சியம் கேரம் போட்டியில் தமிழகத்தில் முதல் இடத்தைப் பெறவேண்டும் என்பதுதான். தமிழகப் பெண்கள் கால் பந்து அணியின் உபதலைவராக இருக்கும் இவர் தமிழகப் பெண்

மா. மரிய இருதயம். பங்காரு பாபு. நிஸ்ஸார் அகமது.



கள் கால் பந்து அணியின் தரத்தை உயர்த்துவதில் பாடுபட்டு வருகிறார்.

கேரம் எல்லாருடைய வீடுகளிலும் சிறுவர் சிறுமியர் முதல் முதியோர் வரை பொழுது போக்குக்கு மிகவும் பயன்பட்டு வருகிறது. கேரம் விளையாட்டில் 'எட்டு போர்டு திட்டம்' ஆட்டத்துக்குவிறுவிறுப்பைக்கொடுத்தது. ஆட்டக்காரர்களின் தரமும் இதனால் உயர்ந்தது. கேரம் விளையாட்டில் கிரிக்கெட்டைப் போல் 'செஞ்சுரி' எடுப்பது அரியசாதனை. வெள்ளை, கறுப்புக் காய்களில் செஞ்சுரி எடுத்தவர்களில் தமிழகத்தைச் சேர்ந்த லாஸரின் சாதனை குறிப்பிடத்தக்கது. இவர் ஹைதராபாத்தில் நடைபெற்ற 1974 தேசியப் போட்டியில் 'ஏழு செஞ்சுரி' எடுத்தது இமாலய சாதனை. இவரது சாதனைகளில் ஐந்து வெள்ளை சதமும் இரண்டு கறுப்பு சதமும் அடங்கும்.

இன்று கேரம் விளையாட்டு இந்தியாவின் எல்லா ராஜ்யங்களிலும் பிரபலமாகி வருகிறது. இலங்கை நாடும் கேரம் விளையாட்டில் அக்கறை காட்டி வருகிறது. அகில இந்திய கேரம் பெடரேஷனும் இலங்கையிலுள்ள கேரம் பெடரேஷனும் ஓர் உடன்படிக்கை செய்து கேரம் டெஸ்ட் பந்தயங்கள் பரிமாறிக் கொள்கின்றன. இலங்கைக்கு 1972ம் ஆண்டு விஜயம் செய்த இந்திய கேரம் குழுவினர் ஐந்து டெஸ்ட் பந்தயங்களிலும் வெற்றிக் கொடி நாட்டினர்.

கேரம் இன்று மேற்கு ஜெர்மனி, ஸ்விட்ஜர்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, அமெரிக்கா நாடுகளிலும் பரவிப் பிராபல்யமாகி வருகிறது. சர்வ தேச கேரம் மகாநாடு நடத்தி, இந்த விளையாட்டினை அகில உலக ஆட்டமாக்கப் பெருமுயற்சி நடந்துவருகிறது. 1970ம் ஆண்டில் இந்திய சர்க்கார் கல்வி இலாகா மற்ற விளையாட்டுக்களைப் போலக் கேரத்தையும் ஒரு விளையாட்டாக அங்கீகரித்துவிட்டது. இந்திய சர்க்கார் கல்வி அமைச்சகம் வழங்கும் நன்கொடையில் இந்திய கேரம் பெடரேஷன் தேசியப் போட்டியை நடத்துகிறது. மாநில சர்க்கார் வழங்கும் மான்யங்களில், ராஜ்யங்களில் மாநிலக் கேரம் போட்டிகள் நடைபெறுகின்றன.

கேரம் விளையாட்டு ஆடுவது எத்தனை சிரமம் என்பதை கிரிக்கெட் மன்னர் விஜய் மர்ச்செண்டின் வார்த்தைகளிலிருந்து அறியலாம். "கேரம் விளையாட்டுக்கு அதிக அளவு ஏகாக்ர நோக்கு தேவை. அதிக அளவு பயிற்சியும் வேண்டும். எஃகு போன்ற நரம்புச் சக்தியுடன் ஆட மனவலிமை அவசியம். கேரம் பந்தயம் அவ்வளவு சுலபமான போட்டியல்ல!"

கேரம் ஆடுவதற்கு அதிக அளவு செலவழிக்க வேண்டியதில்லை. பெரிய மைதானங்கள் தேவையில்லை. மழைக் காலத்திலும் ஆடக்கூடிய இந்தக்கேரத்துக்கு இன்று பிராபல்யம் பெருகி வருகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த மரிய இருதயம்தான் இந்தியாவின் முதல் சாம்பியன் என்று சொல்லும் போது, தமிழனை தலைநிமிர்ந்து நிற்கச் செய்துவிடுகிறது.

ஜூரிச்சில் நடைபெற்ற சர்வதேச கேரம் சாம்பியன் போட்டியில் இந்தியா உலகக் கோப்பையை வென்றது மகத்தான சாதனை. இறுதியில் இந்தியக் குழுவைச் சேர்ந்த மரிய இருதயம், அருண் ரமாகாந்த் கேதார், நிஸ்ஸார் இலங்கைக் குழுவை — 2:1 என்ற எண்ணிக்கையில் வென்றனர். இந்தியக் குழு இறுதி ஆட்டத்துக்கு வருவதற்குமுன் ஸ்விட்சர்லாந்து, மேற்கு ஜெர்மனி குழுக்களை ஜெயித்து நற்பெயர் சம்பாதித்தது. மேற்கு ஜெர்மனி பெர்லினுக்கு இந்தியக் குழு விஜயம் செய்து அங்கும் மாபெரும் வெற்றியைச் சம்பாதித்தது தனிச் சிறப்பு. சர்வதேசக் கேரம் போட்டிகளில் கேதார், மரிய இருதயம், நிஸ்ஸார் முறையே முதல், இரண்டு, மூன்று ராங்கிங்கைப் பெற்றுள்ளனர். இம்மூன்று கேரம் திலகங்களுக்கும் இன்னும் பலமகத்தான கௌரவங்கள் காத்திருக்கின்றன.



# அன்பு மலர்கள்

ரங்கநாயகி நாராயணன்

மாலை மணி ஐந்து இருக்கும். தெருவில் சிறுவர்களும், சிறுமிகளும் விளையாடிக் கொண்டிருந்தனர். சில சிறுவர்கள் சற்று தள்ளியிருந்த சிறு மைதானத்தில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தனர். சிறுமிகளில் சிலர் பாண்டியாடிக் கொண்டிருந்தனர். சிலர் ஸ்கிப்பிங் ஆடிக் கொண்டிருந் தனர். வீட்டுத் திண்ணையில் அமர்ந்த படியே அவர்கள் விளையாடுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந் தாள் ஜானு. அவளுக்கும் அவர்களைப் போல் ஓடி விளையாட ஆசைதான். ஆனால், அவளால் முடியாது. ஏனென் றால் அவளுக்கு ஒரு கால் ஊனம். அவர்களைப் போல் தானும் ஓடி விளையாட முடியவில்லையே என்று வேதனையும் ஏக்கமும் உண்டு அவ ளுக்கு. ஜானுவுக்கு நடப்பதே மிகவும் சிரமமாக இருக்கும். நடக்கும்போது மிகவும் கஷ்டப்பட்டுச் சாய்ந்து சாய்ந்து மெதுவாக நடப்பாள்.

ஜானு அப்படி நடக்கும்போது சில சிறுவர்கள் அவளின் பின்னால் வந்து, அவளைப் போலவே நடந்து அழகு காட்டுவார்கள். ஆனால், இன் னும் சில சிறுவர்கள் அவளிடம் அனு தாபத்தோடு நடந்து கொள்வதும் உண்டு. அதிலும் அவள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் இருக்கும் ராஜிக்கு ஜானுவைக் கண்டால் மிகவும் பிரியம். ஜானுவும் ராஜியும் ஒரே வகுப்பில் படிப்பவர்கள். ஜானு தினமும் பள்ளிக்குச் செல்லும்போது, கூடவே ராஜியும் அவளுடன் கிளம்புவாள்.

தெருமுனை திரும்பிய பிறகு அவளு டைய புத்தகப் பையை ராஜியே வாங் கிக் கொண்டு பள்ளிவரை எடுத்துக் கொண்டு செல்வாள். ஏனென்றால், ராஜியின் அம்மாவுக்கு, ராஜி ஜானு வுடன் பழகுவது அவ்வளவாகப் பிடிக்காது. மேலும், ஜானுவோ ஏழை வீட்டுப் பெண். ராஜி வீட்டினர் பணக் காரர்கள். ஆனாலும், ஜானுவும் ராஜி யும் இணைபிரியாத் தோழிகள்தான். ஒருவரிடம் ஒருவர் மிகவும் அன்பும் பாசமும் கொண்டிருந்தார்கள்.

இப்போதுகூட ஸ்கிப்பிங் ஆடிக் கொண்டிருந்த ராஜி ஜானுவைக் கண் டதும், ஓடி வந்து அருகில் அமர்ந்தாள். ''என்ன ஜானு, போர் அடிக்கிறதா? உனக்குப் படிக்கக் கதைப் புத்தகம் கொண்டு தரவா?'' என்று கேட்டாள் ராஜி.

அதற்குப் பதில் கூறாத ஜானு, ''ராஜி! நீ உன் காலில் புதியதாகக் கொலுசு போட்டுக் கொண்டிருக் கிறாயே?'' என்று காலைப் பார்த்தபடி சொன்னாள்.

''ஆமாம் ஜானு! என் அம்மா இன்றுதான் எனக்காக இதை வாங் கிக் கொண்டு வந்தார்'' என்ற ராஜி தன் பாதங்களை ஜானுவிடம் காண் பித்தாள்.

''நன்றாக இருக்கிறதா ஜானு?'' ஆவலுடன் கேட்டாள் ராஜி.

''மிகவும் நன்றாக இருக்கிறது உன் கால்களுக்கு'' என்றவாறே அவளு டைய கொலுசுகளை ஆசையுடன் தொட்டுப்பார்த்தாள் ஜானு உடனே,

தன் காலையும் பார்த்தாள். கண் கலங்கியது ஜானுவுக்கு. இதைக் கண்ட ராஜிக்கும் முகம் வாடியது. "அழாதேடி ஜானு! கடவுளைத் தினமும் வேண்டிக் கொள். நீதான் மருந்து சாப்பிடுகிறாயே! உடற்பயிற்சியெல்லாம் செய்கிறாய். உன் காலும் சரியாகிவிடும். உன் அம்மாவும் உனக்கு இதைப் போல்க் கொலுசு வாங்கித் தருவார்கள்" — கூறிக் கொண்டே தன் பிஞ்சுக் கரங்களால் ஜானுவின் கண்ணீரைத் துடைத்தாள் ராஜி.

ராஜியைக் காணாமல் தேடிக் கொண்டேவந்தராஜியின்தாய்அவள் ஜானுவின் அருகில் அமர்ந்திருப்பதையும், ஜானு ராஜியின் கொலுசையும், பாதங்களையும் தொட்டுப் பேசிக் கொண்டிருப்பதையும் கண்டாள். வேகமாக வந்து ராஜியை இரண்டு அடி கொடுத்து, தரதரவென்று இழுத்துக் கொண்டு சென்றாள். போகும் போது ஜானுவைப் பார்த்து முறைத்துக் கொண்டே போனாள். ஜானுவின் காதில் விழும்படி, "ஏண்டி அங்கே போனாய்? அவள் உன் காலை எப்படிப் பார்க்கிறாள். கண் பட்டுவிடுமே!" என்று கூறிக் கொண்டே சென்றாள். ஜானுவுக்கு முகம் வாடியது. அதற்கு மேலும் அங்கிருக்கப் பிடிக்காமல் திண்ணையிலிருந்து இறங்கி மெள்ள உள்ளே சென்றாள் ஜானு.

மறுநாள் பள்ளிக்குச் செல்லும் நேரம் வந்தது. ஆனால், எப்போதும் வாசலில் தயாராகக் காத்திருக்கும் ராஜியை அன்று காணவில்லை. "ஒரு வேளை அவளுடைய அம்மா அவளை முன்னாலேயே அனுப்பியிருக்கலாம், என்னுடன் அனுப்பப் பிடிக்காமல்'— எண்ணியவாறே மெல்ல விந்தி நடந்து பள்ளிக்குச் சென்றாள் ஜானு. ஆனால், பள்ளியிலும் ராஜி 'இல்லை. 'ஏன் இன்று ராஜி பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை?' பாடத்தில் கவனம் செல்லவில்லை ஜானுவுக்கு. மாலையில் பள்ளி விட்டதும் வீட்டிற்கு வந்து புத்தகப் பையை வைத்துவிட்டு, மெள்ள நடந்து பக்கத்து வீட்டுக்குச் சென்றாள். "ராஜி! ராஜி!" அழைத்தபடியே வீட்டினுள் நுழையப் போனவளை ராஜியின் தாய் தடுத்து நிறுத்தினாள்.

"என்னடி வேண்டும் உனக்கு?" என்ற ராஜியின் அன்னையைப் பார்த்து, "ராஜி இன்று பள்ளிக்கூடம் வரவில்லையே என்று....." தயங்கினாள் ஜானு.

"பெரிசாகப் பார்க்க வந்துட்டியோ? போடி போ! உன் கண் பட்டுத்தான் அவளுக்கு ஜுரம் வந்துவிட்டது" என்று விரட்டிவிட்டாள் ராஜியின் தாய்.

அழுது கொண்டே மெள்ள தன் வீட்டுக்கு வந்த ஜானு, தன் அம்மாவின் மடியில் விழுந்து முகம் புதைத்து அழுதாள். நடந்தவை அனைத்தையும் கூறினாள். ஜானுவின் அன்னை ஆறுதலாகப் பேசி அவளைச் சமாதானப் படுத்தினாள்.

மேலும் இரண்டு நாட்கள் சென்றன. ராஜி பள்ளிக்கு வரவில்லை. அன்று மாலை வழக்கம்போல் விட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தபோது, ராஜியை அவளுடைய அன்னை தூக்கிக் கொண்டு வீட்டுக்



குள் நுழைவதைப் பார்த்தாள். ''டாக்டரிடம் போய்விட்டு வருகிறார்கள் போலிருக்கிறது'' என்று எண்ணினாள் ஜானு. அம்மாவின் இடுப்பில் இருந்தவாறே ராஜி மெல்ல தன் கையைத் தூக்கி இவளுக்குக் கையாட்டினாள். அதைப்பார்த்த ஜானுவுக்கு மனம் பரபரத்தது. ''இன்று எப்படியும் ராஜியை பார்த்துவிட்டு வந்துவிட வேண்டும். பாவம், எப்படி இளைத்துவிட்டாள் ராஜி!'' எண்ணியவாறே திண்ணையைவிட்டு இறங்கி உள்ளே வந்த ஜானு சுவாமி படத்திற்குமுன் சென்று மண்டியிட்டு அமர்ந்து ராஜிக்காக வேண்டிக்கொண்டாள். அருகில் இருந்த சம்புடத்தில் இருந்த விபூதி பிரசாதத்தை எடுத்து ஒரு சிறிய காகிதத்தில் பொட்டலம் கட்டினாள். அதை எடுத்துக்கொண்டு மெள்ள ராஜியின் வீட்டுக்குள் நுழைந்தாள்.

முன்னறையில் ராஜியின் அன்னையைக் காணோம்! சமையல் அறையில் இருக்கிறார்கள் போலும். படுக்கையறைக்குள் மெல்ல எட்டிப் பார்த்தாள் ஜானு. அங்கு ராஜி தரையில் ஒரு மெத்தையின்மேல் படுத்திருந்தாள். ஆனால், அவள் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். சரி, எழுப்பாமல் விபூதியை மட்டும் இட்டுவிட்டு வந்துவிடலாம்' என்று எண்ணி மெல்ல அடியெடுத்து வைத்தாள் ஜானு. ஆனால், உடனேயே அதிர்ந்து போய் நின்ற இடத்திலேயே நின்றுவிட்டாள்! ராஜியின் படுக்கையை நோக்கி ஒருபெரிய செந்தேள் ஊர்ந்து வந்து கொண்டிருந்தது! ஜானுவுக்கு உடலெங்கும் நடுக்கம் கண்டது. வார்த்தை வராமல் நாக்குழறியது. பயந்தாலும், உடனேயே சமாளித்துக்



கொண்ட ஜானு, ராஜியின் அன்னை யை உரக்கக் கூப்பிட்டாள்.

தேளைக் கண்டு பதறிய ராஜியின் அன்னை அப்படியே ராஜியை அள்ளித் தூக்கிக் கொண்டு வந்து ஹாலில் கிடத்தினாள். பின்னரே அறைக்குள் சென்று பார்த்தாள். ஜானு கூறியது உண்மைதான். எவ்வளவு பெரிய தேள்! அதற்குள் அது ராஜியின் படுக்கையருகே வந்துவிட்டிருந்தது. உடல் சிலிர்த்தது ராஜியின் தாய்க்கு. அதை அடித்து வெளியில் போட்டுவிட்டு வந்தாள்.

உள்ளே தூங்கிக் கொண்டிருந்த ராஜியின் முகத்தைப் பார்த்துக் கொண்டுஉட்கார்ந்திருந்தஜானுவைப் பார்த்த ராஜியின் அன்னைக்குக் குற்ற உணர்வு எழுந்தது. மெல்ல ஜானுவின் அருகில் வந்தாள். ஜானு பயத்துடன் எழுந்தாள். அவளை அமர்த்திய ராஜியின் அன்னை அப்படியே அவளை அணைத்துக் கொண்டு அவளின் கைகளைப் பிடித்தாள். ''ஜானு! என்னை மன்னித்துவிடம்மா. நான் உன்னைத் திட்டியதை எல்லாம் மனத்தில் வைத்துக் கொள்ளாதே! உன்னால்தான் இன்று என் மகள் பிழைத்தாள். நீ சரியான சமயத்துக்குவந்தாய், கடவுள் போல. இல்லையானால் என்ன ஆகியிருக்கும்? எனக்கு நினைக்கவே பயமாக இருக்கிறதே!'' என்றவள் மேலும் தொடர்ந்தாள். ''இனி உன்னை ஒரு வார்த்தைகூடக் கடிந்து கொள்ளமாட்டேன். நீ எப்போது வேண்டுமானாலும் இங்கு வரலாம். ராஜியுடன் விளையாடலாம்'' — கூறி முடித்த ராஜியின் அன்னை ஜானுவைக் கட்டிக்கொண்டு கண்ணீர் உகுத்தாள்.


ஜானுவுக்கும் அழுகை வந்தது. ஆனால், உள்ளுக்குள் மிகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. தன் அருமைத் தோழியுடன் சேர்ந்திருக்க இனி தடையில்லையல்லவா?

''இந்தப் பிரசாதத்தை ராஜியின் நெற்றியில் இடுகிறீர்களா? எங்கள் வீட்டில் ராஜிக்காகக் கடவுளை வேண்டிக் கொண்டு, இதைக் கொண்டு வந்தேன்'' கேட்டவாறே தன் கையிலிருந்த சிறிய பொட்டலத்தை நீட்டினாள் ஜானு.

''ஜானு, நீயே இட்டுவிடு'' என்றபடியே அவளை மெல்ல அணைத்துக் கொண்டு ராஜி படுத்திருக்கும் இடத்துக்கு அழைத்துப் போனாள் ராஜியின் அன்னை.

அப்போதுதான் கண் விழித்த ராஜிக்கு அம்மாவும், ஜானுவும் இணைந்து வரும் காட்சி வியப்பாகவும், புதிராகவும், அதே நேரம் ஆனந்தமாகவும் இருந்தது!

# விண்வெளியில் எலிகள்!




விண்வெளிப் பயணம் செய்வதால் உடல்வளர்ச்சி பாதிக்கப்படுகிறதா என்பதை அமெரிக்க விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்கிறார்கள்.

சென்ற ஏப்ரல் மாதம் அமெரிக்க விண்வெளிக் கப்பலில் 24 எலிகள் பயணம் செய்து திரும்பின. அந்த எலிகளை ஆராய்ந்தார்கள்.

மூளையில் பிட்யூட்டரி சுரப்பியிலிருந்து வெளிப்பட்டு இரத்த ஓட்டத்தில் சேரும் பல்வகை நுண்ணிய ரசாயனப் பொருள்களில் சில, தசைகள் மற்றும் எலும்புகளின் வளர்ச்சியைத் தூண்டுகின்றன.

விண்வெளிப் பயணம் செய்த எலிகளின் பிட்யூட்டரிகளிலிருந்து வளர்ச்சி ஹார்மோன்கள் சுரப்பது குறைந்திருக்கிறது என்று கண்டுபிடித்தார்கள். பயணம் செய்த எலிகளின் எலும்புகளும் தசைகளும் வலுவிழந்துவிட்டன. தொய்வு அடைந்துவிட்டன.

இந்தநிலை, விண்வெளியில்பயணம் செய்யும் மனிதர்களுக்கும் ஏற்படுமா என்பதை ஆராய்கிறார்கள்.



# திருந்திய நாடகம்

ராஜ்கமல்

'மணி மலர் மளிகை' என்றால் சிறுவர்களுக்குக்கூடத் தெரியும். ஏனென்றால், இரு சிறுவர்களே அக்கடையின் உரிமையாளர்கள். பிள்ளைகள் பெயரால் கடையை நடத்தி வந்த தந்தை சோமசுந்தரம் நோய்வாய்ப் பட்டார். பணத்தைத் தண்ணீராய்க் கொட்டியும் பலனில்லாமல் போயிற்று. அவருக்குப் பின் பிள்ளைகள் மணி வண்ணனும், மலர் வண்ணனும் கடையை திறம்பட நடத்தி வந்தனர். அப்போது, மணி வண்ணனுக்கு வயது பதினைந்து. மலர் வண்ணனின் வயது பதின்மூன்று.

மணிவண்ணன் கடையில் இல்லாத நேரங்களில் மலர்வண்ணன் இருப்பான். அவன் மணிவண்ணனைவிட வியாபாரத்தில் கெட்டிக்காரன்தான். ஆனால், அவனிடம் கொஞ்சம் திருட்டுத்தனம் இருந்தது. கொஞ்சங் கொஞ்சமாகப் பணத்தைத் திருடினான். கடையில், அவன் களவாடுவதைக் கண்டு பிடித்துவிட்ட மணிவண்ணன் மிகவும் வருந்தினான். வேறொருவரிடமும் சொல்லவில்லை. தன் தாயாரிடம் மட்டும் தம்பி திருடுவதைப் பற்றி புகார் செய்தான்.

தாயார் மலர்வண்ணனுக்கு எத்தனை புத்திமதி கூறினாள்? ஆனால் மகன் திருந்தவில்லை. அவனைஎப்படித்திருத்துவது என்ற கவலை மணிவண்ணனுக்கு.

அன்றுதம்பியைப்பற்றியேகவலைப் பட்டவாறு கடையில் அமர்ந்திருந்தான் மணிவண்ணன். அப்போது...

"தம்பீ! உன் முகம் ஏன் வாடிப் போயிருக்கு? என்ன கவலை உனக்கு? வியாபாரத்திலே ஏதானும் நட்டமா?" என்று கவலையுடன் கேட்டவரை ஏறிட்டுப் பார்த்தான்.

வழக்கமாககடைக்குவரும்இரண்டு கால்களும் இல்லாத பிச்சைக்காரர்! ஊன்று கோல்களில் நின்று கொண்டிருந்தார்.

"இப்போ எனக்கு நட்டம் ஏதும் இல்லை பெரியவரே. ஆனால், இனிமேல் ஏற்படப் போகிற நட்டத்தைப் பற்றித்தான் எனக்கு ஒரே கவலையாக இருக்கு" என்றான் மணிவண்ணன்.

"வரும் முன் காப்பவனே புத்திசாலி. எந்தவகையிலே உனக்கு நட்டம் ஏற்படும்னு சொல். அதைத் தடுக்க நான் வழி சொல்றேன்" என்றார் அவர்.

"பெரியவரே.... என் தம்பி மலர் வண்ணன். கடையில் பணத்தைத் திருடுகிறான். வீட்டிலும் அவன் சொத்தையே களவாடுகிறான். அம்மாவும் நானும் அவனைத் திருத்த முயன்று பார்த்தோம். அவன் திருந்துவதாகத்

தெரியவில்லை. அவனுக்குக் கடையில் பாதியையும், வீட்டில் பாதியையும் வயலில் பாதியையும் பிரித்துக் கொடுத்துவிடலாம் என்றால், அம்மா ஒத்துக் கொள்ளவில்லை. என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. இப்படியே விட்டுவிட்டால், வியாபாரத்தில் நட்டம் ஏற்படும். அதில் போட்ட பணத்தை எடுக்க முடியாது. அதுதான் எனக்கு மிகுந்த கவலையைத் தருகிறது'' என்றான் மணிவண்ணன்.

''சிறுவன்தானே உன் தம்பி. அவனைத் திருத்திவிடுவோம். கவலையை விட்டொழி. நான் ஒரு யோசனை சொல்கிறேன். அதன்படி நட. அப்புறம் பாரேன் நடப்பதை!'' என்றவர், ஊன்றுகோல்களில் விந்தியவாறு அவன் அருகில் சென்று அவன் காதில் ஏதோ கிசுகிசுத்தார்.

அதைக் கேட்டு முதலில் மறுத்துத் தலையசைத்த மணிவண்ணன், பின்னர் 'சரி'யென்று தலையாட்டினான். சற்றைக்கெல்லாம் மலர்வண்ணன் சைக்கிளில் வந்திறங்கினான். பிச்சைக்காரப்பெரியவர் கடைவாசலில்நின்று கொண்டிருப்பதைக் கண்டு, ''ஏன் அண்ணா, இவரை நிற்க வைக்கறே? பத்துக் காசு போட்டு அனுப்பறது தானே.'' என்றான்.

''பேசாமல் உன் வேலையைப் பாரு. இந்த ஆளுக்குப் போட்டு முடியலே. தினம் வந்து நிக்கறார். சில்லறைக் காசு இல்லேங்கறேன். நகர மாட்டேங்கறார்'' என்றான் மணிவண்ணன்.

''ஆங்! பெரிய வள்ளல்.... கொட்டிக்குடுத்துடுவாரு'' என்றுகுத்தலாகப் பேசினார் பெரியவர்.

மணிவண்ணனும் பெரியவரும் போட்ட திட்டத்தைச் செயலாக்கினார்கள். கோபம் கொப்பளித்தது போல நடித்த மணிவண்ணன் பெரியவரின் முதுகிலே ஒரு தட்டு தட்டினான். அவ்வளவுதான்; அவர், 'ஐயோ!' என்று அலறி அங்கே விழுந்தார். கடையில் சட்டையைக் கழட்டிக் கொண்டிருந்த மலர்வண்ணன் பதறிப்போய்,

''அண்ணா, ஏன் அவரை அடிக்கிறாய்?'' என்று கேட்டான்.

''என்ன பாவம் பண்ணினாரோ... ரெண்டு காலும் போச்சு.... இன்னும் திமிர் குறையலே. சரி, சரி, உன் பையிலே ஏதானும் சில்லறை இருந்தாப் போட்டு விரட்டு. நான் போய் பாக்கிநிலுவைகளை வசூல்பண்ணிட்டு வர்றேன்'' என்று கூறியவாறே மணிவண்ணன் கடைச் சைக்கிளை எடுத்துக் கொண்டு ஓடினான்.

தன் சட்டைப் பையில் துழாவிய மலர்வண்ணன், சில்லறைக்காசு ஏதும் தட்டுப்படாததால், கல்லாவிலிருந்து ஒரு முழு ரூபாயை எடுத்துப் பிச்சைக்காரப் பெரியவரின் கையில் தந்து,

''பெரியவரே, அண்ணன் இப்படித்தான். கொஞ்சம் முன்கோபி. நான் இருக்கிற நேரங்கள்லே கடைக்கு வாங்க. உங்களுக்கு நிறையக் காசு தர்றேன்'' என்றான்.

''நீ தருவே. உன்னை மாதிரி தர்மசிந்தனை உள்ளவனா உன் அண்ணனையும் மாத்தணும்ங்கற ஆசையினாலேதான், இன்னிக்கு அவங்கிட்டே செம்மையா வாங்கிக் கட்டிக்கிட்டேன்'' என்றார் அவர்.

''அதானே சொல்றேன் பெரியவரே. அவன் கடையிலே இருக்கும் போது கிட்டே வராதீங்க. கஞ்சப் பயல்களை ஒரு போதும் திருத்த முடியாது.''

''அப்படிச் சொல்லாதே தம்பி. உன்னோடு பிறந்தவன்தானே! ஆனால் ரொம்ப சிக்கனமானவன். அவனும் உன்னைப் போல செலவாளியாக இருந்தால், ஆறு மாதத்திலே கடையை இழுத்து மூட வேண்டியதுதான். பங்காளிக்கு அவன் துரோகம் நினைக்காதவன். நான் என் பங்காளிக்குத் துரோகம் செய்ததனாலேதான் இப்போ பிச்சை எடுக்கறேன்'' என்று கூறிக் கொண்டே பெரியவர் நகர்ந்தார்.

''பெரியவரே, கொஞ்சம்நில்லுங்க. நீங்க ஏன் இப்படிப் பிச்சை எடுக்கறீங்க?'' என்று வினவினான் மலர்வண்ணன்.

''நீயோ ரொம்ப இளகிய மனதுள்ளவன். நான் சொல்வதைக் கேட்டு மிகவும் வருத்தப்படுவாய். அப்புறம் என் மேலே இரக்கப்பட்டு கல்லாவிலே இருந்து ஐந்து ரூபாய் அல்லது பத்து ரூபாய் நோட்டை எடுத்து எனக்குத் தர்மம் செய்வாய். ஆனால், கடைச்



சொத்து அது. அதில் உன் அண்ணனுக்கும் பங்கு உண்டு. உன் அண்ணனுக்குத் தெரியாமல் நீ செய்கிற தர்மம் உன் அண்ணனுக்குச் செய்கிற துரோகமா ஆகிவிடக் கூடாது பார். நான் என் அண்ணனுக்குச் செய்த துரோகத்துக்கு இப்போது சரியான தண்டனையை அனுபவிக்கிறேன். உனக்கும் இந்த மாதிரித் தண்டனையெல்லாம் வேண்டாம்ப்பா....'' என்றார் பெரியவர்.

''பெரியவரே! நீர் உமது அண்ணனுக்கு என்ன துரோகம் செய்தீர்? அதற்காக என்ன தண்டனை அனுபவிக்கிறீர்? விளக்கமாகச் சொல்லும்'' என்றான், மலர்வண்ணன்.

''என் அண்ணனும் நானும் விவசாயம் செய்து கொண்டிருந்தோம். அவர் நோயாளி. என்னை நம்பி எல்லாப் பொறுப்பையும் என்னிடம் எழுத்து மூலம் ஒப்படைத்துவிட்டார். சொத்துக்களையெல்லாம் அவருக்குத் தெரியாமல் விற்றுப் பணமாக்கிக் கொண்டு ஊரைவிட்டு ஓடிப் போனேன். படிக்காத அண்ணன் பசியாலும் நோயாலும் அவதிப்பட்டு இறந்து போனார். அவர் மனைவியும் மக்களும் வறுமையில் வாடி வதங்கிச் செத்தனர். நான் 'இனி கவலையில்லை. நம் ஊருக்கே போய்விடலாம்' என்று நிறையப் பணத்துடன் திரும்பினேன். நான் ஏறி வந்த ரயில் வண்டி தடம் புரண்டு கவிழ்ந்தது. விபத்து நடந்த ஒரு வாரத்துக்குப் பிறகுதான் என் நினைவு திரும்பியது. எங்கே இருக்கிறேன் என்று பார்க்கிறேன். ஆஸ்பத்திரிக் கட்டிலில் என் இரண்டு கால்களையும் இழந்து படுத்துக்கிடக்கிறேன். விபத்தில், சிதைந்து போன என் கால்களில் புரையோடிவிட்டதால் வெட்டி எடுத்துவிட்டார்களாம் தம்பீ! என் அண்ணனுக்குச் செய்த துரோகம் என்னைப் பிச்சைக்காரனாக்கிவிட்டது, பார்த்தாயா?'' என்றார் அவர்.

''உங்கள் பணம்?''

''ரயில் விபத்தில் மொத்தமாகப் பறிபோய்விட்டது தம்பீ. நினைவிழந்த நிலையில், பணப் பையையும் இழந்துவிட்டேன்.''

அந்தப் பிச்சைக்காரரின் கால்கள் போனது, அவரின் அண்ணனுக்குச் செய்த நம்பிக்கைத் துரோகத்தினால் தான் என்ற எண்ணம் மலர்வண்ணனின் மனத்தில் ஆழமாய்ப் பதிந்துவிட்டபோது அவன் திருந்தினான். தன் அண்ணனிடம் கேட்காமல் கடையில் ஒரு காசுகூட எடுப்பதில்லை. அந்தப் பெரியவர் மலர்வண்ணனைத் திருத்துவதற்காக நடித்த நாடகத்தையும், கூறிய கற்பனைக் கதையையும், பாராட்டி அவருக்கு நன்றி தெரிவித்த மணிவண்ணன், தன் தம்பி திருந்திவிட்டது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தான்.

# காட்டிக் கொடுத்த டிக்கெட்!

எம். ஆர். ராஜன்

பனப்பட்டி ஜமீன்தார் பங்காரு ரெட்டியாரின் மூத்த பெண்ணுக்குத் திருப்பதியில் கல்யாணம். அவர் மிகுந்த செல்வாக்கு உடையவராதலால் எல்லாக் கிராமத்துப் பஞ்சாயத்து, நாட்டாண்மை மற்றும் ஊர்ப் பெரியதனக்காரர்கள், முக்கியப்பட்டவர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பியிருந்தார். மாம்பட்டி பண்ணையார், நாட்டாண்மையார் மற்றும் சின்னனை நேரிலேயே வந்து அழைத்துவிட்டுப் போனார். சின்னனைப் பற்றியும், அவனுடைய திறமை, புத்திசாலித்தனம், சேவை ஆகியவை பற்றியும் நன்கு அறிந்து கொண்டிருந்தார் பங்காரு ரெட்டியார். தன்னுடைய கிராமத்தில் இவனைப் போல ஒரு புத்திசாலியான சிறுவன் இல்லையே என்ற ஏக்கம் அவருக்கு நிறையவே உண்டு. ஆகவே, பெரிய பண்ணையாரிடம் தனிப்பட்ட முறையில் கல்யாணத்திற்குச் சின்னனையும் கண்டிப்பாய் அழைத்து வரும்படி கூறிச் சென்றிருந்தார்.

பெரிய பண்ணையார், சின்னப் பண்ணையார், நாட்டாண்மைக்காரர், மற்றும் சின்னன் உட்பட ஐந்து பேர் கல்யாணத்துக்குப் போக முடிவு செய்தனர்.

கிராமத்திலிருந்து டவுனுக்கு வந்தாயிற்று. இரவு எட்டு மணிக்கு திருப்பதி பஸ் வந்து சேர்ந்தது. அது விடியற்காலை சரியாக நாலரை மணிக்குத் திருப்பதி போய்ச் சேரும்.

கண்டக்டர் சற்று வயதானவர். இன்னும் ஆறு மாதத்தில் ஓய்வு பெறப் போகிறவராம். பயணச் சீட்டுகளைக் கொடுத்துக் கொண்டு வந்தார். மீதிச் சில்லறை தர வேண்டியவர்களுக்கு பயணச்சீட்டுகளின் பின்புறம் எழுதிக் கொடுத்திருந்தார். வண்டி பாதித்தூரம் சென்றதும், கண்டக்டர் யார் யாருக்குப் பாக்கி தர வேண்டும் என்று கேட்டார். பணம் பெற வேண்டியவர்கள் பயணச் சீட்டுகளைக் காட்டி, அவற்றின் பின்புறம் எழுதியிருந்த சில்லறையைப் பெற்றுக் கொண்டார்கள்.

சின்னனுக்குப் பக்கத்தில் கண்டக்டரின் இருக்கை காலியாக இருந்தது. கண்டக்டர் பயணச் சீட்டுகளின் விவரங்களை எழுதிவிட்டு, பணத்தையும் சரி பார்க்க ஆரம்பித்தார். சரியாக இரண்டு டிக்கட்டுக்களுக்கான பணம் அறுபத்தி மூன்று ரூபாய் குறைந்தது. பகீரென்றது கண்டக்டருக்கு. அவர் அல்லவா கைவிட்டுப் போட வேண்டி வரும்? பஸ்ஸை ஷெட்டில் விட்டு விட்டுப் பணத்தைக் கஜானாவில் கட்டும்போது நஷ்டத்தை ஈடு கட்டி சரியான தொகையைக் கட்ட வேண்டி வருமே! பணத்துக்கு எங்கு போவது? டிக்கட்டுக்குப் பணம் கொடுக்காதவர் யார் என்று எப்படிக் கண்டு பிடிப்பது? ஒரே குழப்பமாயிருந்தது கண்டக்டருக்கு.

பக்கத்தில் உட்கார்ந்திருந்த சின்னனுக்கும் பெரிய பண்ணையாருக்கும் இது தெரிய வந்தது.

பண்ணையார் சொன்னார்: "ஒவ்வொருத்தராப் பார்த்துக் கேட்டுப் பாருங்க."

"என்னங்க, யாருங்க ஒத்துக்குவாங்க? இதைக் கையோட பிடிக்காம விட்டுட்டு — இப்ப எப்படிங்க கேட்கறது? எல்லோருமே யோக்யமாத்தான் பேசுவாங்க!"

"இன்னிக்கு யார் முகத்திலே முழிச்சியோ கையைக் கடிக்குது. இனிமேலாவது ஜாக்கிரதையா இரு." என்றார் சின்னப் பண்ணையார்.

"ஐயா.... அவரே நொந்து போயிருக்காரு. அவரைப் போயி எது எதுவோ சொல்றீங்களே. ஐயா, கண்டக்டரய்யா பதறாதீங்க. கொஞ்சம் நிதானமாச் செயல்படுங்க. கண்

டிப்பா கிடைச்சுடும். என்கூட எந்திரிச்சு வாங்க. நான் கண்டு பிடிச்சுத் தாரேன்'' என்று தைரியம்சொன்னான் சின்னான்.

பெரிய பண்ணையாரும், சின்னப் பண்ணையாரும் சின்னான் எப்படிக் கண்டு பிடிக்கப் போகிறான் என்று ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''சின்னான் என்ன சாமானியமானவனா? படு புத்திசாலிப் பயலாச்சே! கண்டு பிடிக்காமே வரமாட்டான்'' என்றார் பஞ்சாயத்துத் தலைவர்.

சின்னானைத் தொடர்ந்து கண்டக்டர் போனார். 'ரெண்டு' டிக்கட்டா வாங்கினவங்கஎத்தனைபேரு?'' என்று கேட்டான் சின்னான்.

''நாலு பேரு ரெண்டு ரெண்டு டிக்கட்டா வாங்கினாங்க.''

''அவங்க யார் யாருன்னு காட்டுங்க?'' — கண்டக்டர் காண்பித்தார்.

'டக்'கென்று ஒரு ஜோடியைப் பார்த்துக்கேட்டான் சின்னான். ''உங்க ரெண்டு பேரிலே டிக்கட் வாங்கினது யாரு?''

''நான்தாங்க. ஏன். என்ன?''

அவரிடமிருந்து டிக்கட்டை வாங்கிப் பார்த்தான் சின்னான். பின்னால் எதுவுமே எழுதவில்லை.

''ஐயா, கண்டக்டர்கிட்டே எவ்வளவு பணம் கொடுத்தீங்க? அவரு எவ்வளவு மிச்சம் தரணும்?''

''நூறு ரூபா கொடுத்தேன். மிச்சம் தரல்லே!''

''அப்படீங்களா. இருங்க பார்க்கச் சொல்றேன்.''

சின்னான் அப்போதே தீர்மானித்து விட்டான் அந்த ஆசாமிதான் பணம் தராமல் டிக்கட் வாங்கினவன் என்று. எதற்கும் ஆதாரப்பூர்வமாகச் சொல்ல வேண்டாமா? வேண்டுமென்றே கண்டக்டரைப்பையில்தேடச்சொன்னான்.

பையில் நூறு ரூபாய்த் தாளே இல்லை. ''ஐயா, நீங்களே இவரு பையைப் பாருங்க! இவருகிட்டே நூறு ரூபாய்த்தாளே இல்லீங்களே. நீங்க கொடுத்ததாச் சொல்றீங்களே!''

''அவரு அந்தத் தாளை வேறே யார்கிட்டயாவது மீதிப் பணம் கொடுக்கிறப்போ, கொடுத்திருப்பாரு.''

இதற்குள் பஸ் பிரயாணிகளில் பாதிப் பேர் விழித்துக் கொண்டுவிட்டனர்.

''என்னங்க நீங்க சொல்றது வேடிக்கையா இருக்கே. நூறு ரூபாய் கொடுத்தா டிக்கட் போக மீதிச் சில்லறைஎவ்வளவுதரணும்னு டிக்கட் பின்னாலேயே எழுதிக் கொடுத்திருப்பாரு. உங்க நூறு ரூபாயை யாருக்கு மீதிப் பணமாத் தர முடியும்? யாராவது ஆயிரம் ரூபா கொடுத்து டிக்கட்டு வாங்கியிருப்பாங்களோ?'' கிண்டலாய்க் கேட்டான் சின்னான்.

''ஐயா, இதோ பாருங்க. யார் யாரு எவ்வளவுக்கு டிக்கட் வாங்கினாங்கங்கறது டிக்கட்டின் முன்புறத்திலேஎழுதியிருக்கு. பாக்கிப் பணம் தர வேண்டியிருந்தா, டிக்கட் பின்புறம் கண்டக்டர்



எழுதிக் கொடுத்திருக்கிறாரு. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி பாக்கி தர வேண்டியவங்களுக்கெல்லாம் டிக்கட் பின்புறத்தைப் பார்த்துக் கொடுத்திட்டாரு. உங்க டிக்கட்டைப் பாருங்க. ஒண்ணுமே எழுதல்லே. நீங்களும் பாக்கி கேட்கல்லே. டிக்கட்டை நீங்களே பாருங்க'' என்று அவர்களின் டிக்கட்டைக் காட்டினான் சின்னான்.


பஸ்ஸில் இருந்த சிலர் ''ஆமா தம்பி, டிக்கட் பின்னாலே பாக்கி தரவேண்டியிருந்தா, எழுதிக் கொடுத்துட்டு, இப்போ எழுதினபடி பாக்கியையும் கண்டக்டரா வந்து கேட்டுத் தந்திட்டாரே!'' என்றார்கள்.

''ஏய்யா டிக்கட் வாங்கின உடனே பணம் கொடுக்க வேணும்.... பாவம் வயசானவரு....''. ஒவ்வொருவராய் அந்த இருவரையும் பார்த்துத் திட்ட ஆரம்பித்தார்கள். வெட்கித் தலை குனிந்து போன அவர்களில் ஒருவன் அமைதியாய்த் தன் மடியிலிருந்த முடிச்சை அவிழ்த்து நூறு ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினான்.

கண்டக்டர் மட்டுமல்ல; எல்லாப் பிரயாணிகளுமே மகிழ்ந்து போனார்கள். பண்ணையார் அசந்து போனார்.

''ரொம்ப நன்றிங்க'' என்று கையைக் கூப்பினார் கண்டக்டர் சின்னானைப் பார்த்து.

''என்ன இது! நீங்க பெரியவங்க. கும்பிடலாமா? எப்பவுமே ஆபத்து, கஷ்டம்னா பதறிப் போயிடாதீங்க. நிதானமா ஆழ்ந்து சிந்திச்சு செயல்பட்டீங்கன்னா, நல்லதே நடக்கும். நிம்மதியும் கிடைக்கும். நமக்கு நிதானம் தேவை'' என்றான் சின்னான்.




சினிமாத் தியேட்டர்களில் திரையிட இனிமேல் சினிமா பிலிம் சுருள் பெட்டி பெட்டியாக வேண்டியதில்லை.

வீடியோ திரையில் திரையிடக் கூடிய டீ.வி. பிலிம்களையே பயன்படுத்த முடியும். இதனால் படம் பிடிக்கவும், பிரதி எடுக்கவும் செலவு குறையும்.

ஆனால் இப்போதுள்ள வீடியோ பிலிமை நேரடியாகத் திரையிட முடியாது.

ரஷ்ய விஞ்ஞானக் கழகம் 'லேஸர் பிக்ஸர் டியூப்' என்னும் ஒரு புதிய சாதனத்தைக் கண்டுபிடித்திருக்கிறது. இந்த டியூபைப் பயன்படுத்தி வீடியோ, டீ.வி. படங்களைப் பெரிதாக சினிமாத் திரையில் திரையிட முடியும். 12 மீட்டர் × 12 மீட்டர் சதுரத் திரையில் கூட பிரம்மாண்டமான அளவிலும் காட்ட முடியுமாம்!

Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras—600032. (Phone: 431543) Editor: K. Rajendran.



# தாமஸ் ஆல்வா எடிசன்

தோற்றம்: 11-2-1847 மறைவு: 18-10-1931

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Srilanka